பக்கங்கள் : இருபது

Registered as a News paper

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:7 வள்ளுவர் ஆண்டு 2029 தை 18 சனிக்கிழமை (31-01-1998) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:35

## தேர்தலில் அரசு சதி!

### புளொட் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜனவரி 31

தேர்தல் முடிவுகளில் அரசியல் சதித் திட்டம் இருப்பதாகக் குறிப்பிட்டு அரசு மீது குற்றம் சுமத்தி புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டிருக்கின்றார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:-

தேர்தலில் எமது கட்சியில் நம்பிக்கை வைத்து எமக்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எமது நன்றி.

இத்தேர்தல் முடிவுகளின் பின்னே அரசியல் சதித் திட்டம் ஒன்று உள்ளதாகவே நாம் கருதுகின்றோம். யாழ் மாநகர சபைக்குட்பட்ட எல்லைக்குள் எமக்கு அபரிமிதமான ஆதரவு இருப்பதை அனைத்து மக்களும் அறிவர். இதனாலேயே யாழ். மாநகர சபைத்தேர்தல் முடிவு மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் வழக்கின் மூலம் நிராகரிக்கப்பட வேண்டிய த. வி. கூட்டணியை மீண்டும் தேர்தலில் போட்டியிட அனுமதித்தபோதே, யாழ். மாநகர சபைக்கான தீர்ப்பும் தீர்மானிக்கப்பட்டதாக நாம் சந்தேகம் கொண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று தெற்கில் துக்க தினம்

"தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதலைக் கண்டித்து இன்று தென்னிலங்கையில் துக்கம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

நாடெங்கும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு சமய அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்கும்படி மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் ரம்புக்வெல ஸ்ரீ விபாஸி தேரர் நாட்டு மக்களைக் கேட்டுள்ளார். (உ-10)

### தேர்தல் ஆணையாளர் நன்றி தெரிவிப்பு

நேற்று முன்தினம் நடந்த யாழ். உள்ளூராட்சித் தேர்தலை சிறப்பாக நடத்தி முடிக்க ஒத்துழைத்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரிவித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (உ)

## காலியில் 16 பேர் படுகொலை!

### கசிப்பால் வந்த வினை

கொழும்பு, ஜனவரி 31

காலி அல்பிட்டிப் பகுதியில் உள்ள இரு கிராமங்களில் இராணுவ உடையில் புகுந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று ஆண், பெண் வேறுபாடின்றி 16 பேரை வெட்டியும், சுட்டும் கொலை செய்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு நடந்த இச் சம்பவத்தில் காயமடைந்த 2 பேர் அபாயகரமான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

கசிப்பு, சாராய உற்பத்தி தொடர்பாக எழுந்த வாக்குவாதமே இக் கொலைகள் இடம்பெறக் காரணம் எனக் கூறப்பட்டது.

கிராமவாசிகளின் 4 வீடுகளுக்குள் நுழைந்த ஒரு கோஷ்டியினர் அந்த வீடுகளில் இருந்தவர்களைச் சுட்டும், வெட்டியும் கொலை செய்ததுடன் அவர்களின் சடலங்களையும் வீடுகளுடன் சேர்த்துத் தீயிட்டனர்.

கருகிய நிலையில் ஆறு சடலங்கள் அடையாளம் காண முடியாதளவு உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டன.

ஆறு பெண்களும், நான்கு ஆண்களும், ஆறு குழந்தைகளுமாக 16 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த வீடுகளில் இருந்த இரு ஆண்கள் உயிர் தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இக் கொலைகளுக்குச் சூத்திரதாரியெனச் சந்தேகிக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் விடயம்: கனடாவில் மாநாடு

மணிலா, ஜன 31

''இலங்கையில் அமைதிக்கான வாய்ப்புக்கள்'' என்ற தலைப்பில் ஒரு நாள் சர்வதேசக் கருத்தரங்கு ஒன்று கனடா மாற்றியல் கங்காடியாப் பல்கலைக்கழகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் பாரி காடினர், மனித உரிமைத் தொண்டர் ஜீன் பிறக்குறீஸ், கனகாடியாப் பல்கலைக்கழக கலாநிதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நன்றி கூறுகின்றார் கூட்டணித் தலைவர்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் நேற்று விடுத்தார். அவர் அதில் கூறியிருப்பதாவது:-

நாம் போட்டியிட்ட ஆக இரண்டு உள்ளூராட்சி சபைகளான யாழ்ப்பாணம் மாநகர சபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தேர்தல்களின் போது அந்தச் சபைகளின் பிரதேச வாக்காளர்கள் எம்மீது வைத்த நம்பிக்கையைப் பணிவுடன் ஏற்றுக் கொள்கின்றோம்.

தாம் எதிர்கொண்ட பல நெருக்கடிகளுக்கு மத்தியில் தமது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இருவரைக் காணவில்லை

வவுனியா, ஜன. 31

நெடுங்கேணி மாமடுப் பகுதியில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற இருவரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இரு பிள்ளைகளின் தந்தையான சி. தங்கவடிவேல் (38 வயது), ஒரு பிள்ளையின் தந்தையான சி. சிவகுமார் (20 வயது) ஆகியோரே காணாமல் போனவர்கள் ஆவர். (உ-164-3)

## தள்ளாடி முகாமில் கைதி தற்கொலை!

வவுனியா, ஜன. 31

மன்னார் தள்ளாடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் தப்பி ஓடி அங்கு வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்றை எடுத்து தற்கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வட்டக்கச்சியைச் சேர்ந்த குமாரசாமி பரதன் என்பவர் தள்ளாடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுக் காலை 7 மணிக்கு இவரை காவலக் கடமை நிறைவேற்ற படையினர் வெளியே அழைத்துச் சென்ற சமயம் அவர் தப்பிவிட்டார் என்றும் —

தப்பி ஓடிய அவர் முகாம் முற்பகுதியில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்றை எடுத்துச் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக் கலாசாரத்தை மக்கள் விரும்பவில்லை!

### தேர்தல் குறித்து ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், ஜன. 31

தேர்தல் முடிவுகள் ஆயுதக் கலாசாரமற்ற ஓர் அரசியலையே மக்கள் விரும்புகின்றார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது என ஈ.பி. ஆர்.எல்.எவ். அமைப்பு நேற்றுத் தெரிவித்தது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் இரண்டு தொடக்கம் இரண்டேகால் லட்சம் வாக்காளர்களே

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் களப் பலி!

வவுனியா, ஜன. 31

கிளிநொச்சி முன்னரங்கப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் ஒன்றில் மேஜர் கமலவன் அல்லது சொஸ்ஸா (சிற்றம்பலம் செல்லக்குமார்—கண்டி) களப்பலியானதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது. (உ-164-3)

## குருநகர் சம்பவம்: புலிகள் அறிக்கை

வவுனியா, ஜன. 31

கடந்த புதன் இரவு யாழ்ப்பாணம் குருநகரை அண்டிய கரையோரப் பகுதியில் அமைந்திருந்த படையினரின் 25 காவலரண்களையும், சவச்சாலைச் சந்தி, மடத்தடிச் சந்தி ஆகியவற்றில் அமைந்திருந்த சோதனைச் சாவடிகளையும் ஏககாலத்தில் தாம் தாக்கியதாக ''புலிகளின் குரல்'' நேற்று அறிவித்தது.

20 நிமிட சண்டையின் பின்னர் அவை தமது பூரண கட்டுப்பாட்டில் வந்தன என்றும் —

ஒன்றரை மணிநேரம் தமது கட்டுப்பாட்டில் இருந்த அந்த காவலரண்கள் பின்னர் தீயிட்டு அழிக்கப்பட்டன என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

கரையோரத்தில் இருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் குண்டுவெடிப்பு

கொழும்பு, ஜன. 31

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் நேற்று முன்தினம் இரவு குண்டு ஒன்று வெடித்தது.

இதன் எதிரொலியாக—

நேற்றுக்காலை அருகில் உள்ள ஆரையம்பதி கிராமத்தில் வீடொன்றில் இருந்து வெளியே வந்த இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கப்பல் சேவையை நடத்த 2 கம்பனிகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 31

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை நடத்த இரு தனியார் கப்பல் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் சேவையை நடத்த விரும்பியுள்ள இரு கப்பல் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ள அனுமதியில் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையிலும், காங்கேசன்துறையிலும் கப்பல் புறப்பட முன்னர் பயணம் செய்யும் பயணிகள் ஒவ்வொருவர் தொடர்பாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் பகுதியில் 4 இளைஞர்கள் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 31

கொக்குவில் பகுதியில் நேற்றுக் காலை 11.45 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் நான்கு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக படை வட்டாரங்கள் நேற்றிரவு அறிவித்தன.

இது குறித்து படை வட்டாரங்கள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் தேடுதல் நடத்திய படையினர் வீடு ஒன்றுக்குள் இருந்த நிலத்துக்குக் கீழான பதுங்கு குழி ஒன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### மேரி பிறிஜெட் றோஸ்மலர் கனகரத்தினம்

364, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி பிறிஜெற் றோஸ்மலர் கனகரத்தினம் 28.1.98 இல் திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு திருமதி மனுவல்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜோண் கனகரத்தினத்தின் அன்புமனைவியும், யுவனித்ரா (நிரா திருகோணமலை), பகிரதன் (அபுதாபி), சுரேந்திரா (அவுஸ்திரேலியா), றூபேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துரெட்ணானந்தன் (D G M. மின்சார சபை, திருகோணமலை), றஞ்சி (அபுதாபி), ஞானோ (அவுஸ்திரேலியா), தபோ (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நிரேஷ், மிருதுலா, பானுஜா, பிரதீப், வரனதி, மெலானி ஆகியோரின் பாசமிக்க பேர்த்தியும், பக்ஸ் (முன்னாள் வஸ்தியன் அச்சகஉரிமையாளர்) காலஞ்சென்ற பேரின்பம் உரிமையாளர், வஸ்தியன் புத்தகசாலை), லில்லிமலர் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாகிறெட் (அமெரிக்கா) காலஞ்சென்ற அரியமலர், N. J. ஜெயராஜா (Rtd. Customs Chief Officer) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 23, சனசி ஒழுங்கை, திருகோணமலையில் 01-02-98 ஞாயிறு அன்று நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி மாலா ஜெரோம்.

390, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (53005)

### திருமதி மேர்சி தம்பிரட்ணம்

உடுவில் மான்ஸ் வீதியில் வசித்த திருமதி மேர்சி தம்பிரட்ணம் 22-01-98 இல் கலிபோர்னியாவில் (U.S.A) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (கிளாக்கர்) தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற J T தம்பிரட்ணத்தின் (உபஅதிபர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) மனைவியும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தன், சத்தியானந்தன், கலிபோர்னியாவில் வசிப்பவர்களான ரட்ணமலர் பத்மஜெயன், சற்குணானந்தன், பிரேமானந்தன் ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களான திருமதி கனகரட்ணம், S S துரைசிங்கம் (அதிபர் அச்சுவேலி ம வி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 24-01-98 இல் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சரோசா சத்தியானந்தன்,
மருமகள் [Nee Gurupatham]

45, றக்கா ஒழுங்கை,
சுண்டுக்குளி (சி/2755)

### ராமன் வல்லிபுரம்
(தச்சன் தோப்பு)

நாவற்குழி தச்சன் தோப்பைப்பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ராமன்வல்லிபுரம் 28-1-98 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராமன் சிதேவியின் அன்பு மகனும், தெய்வானையின் அன்புக் கணவரும், சடாச்சரம் (கொழும்பு), சற்குணம் (சுவிஸ்), காலஞ் சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், மார்க்கண்டு, கனகமணி, சிவாசனா ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவநேசன், சிவமோகன், சிவதாசன் (ஜேர்மனி), சிவசுகந்தி (கொழும்பு), வசந்தகுமார், சிவலலிதா (கனடா), சாமினா, றசினா, ஜெனன், நிசானா, வேனுசன் (கொழும்பு), றஜீவன், துசானி, சயந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் நிதர்சாவின் (கனடா) பூட்டனும், காலஞ்சென்ற கந்தையா கோவிந்தன், நாகலிங்கம் (கேகாலை), லட்சுமி, சின்னம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், முருகன், பரமு, காலஞ்சென்ற அப்பையா சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 29-1-98 இல் கொழும்பில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமு மார்க்கண்டு,
(மருமகன்)

தச்சன்தோப்பு,
நாவற்குழி. (52991)

### விஸ்வநாதர் வன்னியசிங்கம்

குருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான விஸ்வநாதர் வன்னியசிங்கம் அவர்கள் 30-1-98 இல் காலமானார்.

அன்னார் செல்வலட்சுமியின் அன்புக் கணவரும், தமயந்தி, உதயகுமாரன், ஜெயந்தி, நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீலஜெயன் (கணக்காளர்), ராஜன் (கணக்காளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், கனகசபை, காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, அபிராமிப்பிள்ளைஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30-1-98 வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வ. உதயகுமாரன்.
(மகன்)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (52998)

## சமய சந்நிதியில்

ஏழாலை அருள்மிகு ஸ்ரீ வசந்த நாக பூஷணி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா இன்று முற்பகல் 10.30மணிக்கும், தீர்த்தத் திருவிழா நாளை ஞாயிறு முற்பகல் 10 30 மணிக்கும் இடம் பெறும். (உ-30)

* * *

மட்டுவில் வடக்கு லூர்து மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த திங்களன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் பூசை வழிபாடுகள் இடம் பெற்று எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை நற்கருணைப் பூசை-திருச்சொரூப பவனியுடன் நிறைவு பெறும். இவ்விழா சாவகச்சேரி பங்குத்தந்தை அருட்திரு. நேசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்று வருகிறது. (ஐ-31)

### கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

நாவற்குழி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினர் பண்டிதர் க. வேலுப்பிள்ளை, செ.குமாரசாமி ஆகியோரை அவர்களின் இலக்கியப் பணிக்காக கௌரவிக்கவுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நி. சரவணபவன் தலைமையில் நடைபெறும். மேற்படி சங்கத்தின் கூட்டத்திலேயே இந்த இருவரும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ-5)

### மேலும் ஒருவரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜன. 31

குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான தலதா மாளிகையின் இடிபாடுகளுக்கிடையில் இருந்து மேலும் ஒருவரின் சடலம் திங்கள் மாலை கண்டெடுக்கப்பட்டது.

இதுவரையில் 11 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

காயமடைந்த 23 பேரில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றதென்று கண்டி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

### இறுதிப் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், ஜன. 31

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நடத்தும் சிறு வணிக முகாமைத்துவக் கல்விக்கான இறுதிப்பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் —

கிடைக்கப் பெறாதவர்கள் பரீட்சை மண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் — யாழ். பிராந்திய இயக்குநர் ச ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (இ-7)

### லிபேட்டி சினிமா
அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
(சனி) இன்று மட்டும்
M.G.R, ஜெயலலிதா,
சோ
நடித்த
"ஒளி விளக்கு"
பழைய நேரம்
9-30. 12-30. 3-30
01-02-98 ஞாயிறு முதல்
ரஜனிகாந்த், மீனா
நடித்த
முத்து
(..705)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 06 — 1918
மறைவு: 23 — 01 — 1996

### அமரர் சுவாமிப்பிள்ளை நல்லதம்பி
(கரம்பொன், ஊர்காவற்றுறை)

திதி: 31 — 01 — 1998 சதுர்த்தி

ஈராண்டு சென்றதுவோ எமைவிட்டு நீ பிரிந்த
தீராதகவலையுடன் வாழ்கிறோம் உமை நினைத்து
வாராதோ நின் கருணை வளமாக எம் முன்னே
தாராயோ நிம்மதியை தரணிதனில் எந்நாளும்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

110/2, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2757)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி வேதநாயகி சிவதாசன்
(குடும்ப ஆலோசகர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

எமது பாடசாலையின் தாபகர் திரு நா. ஆ. சிற்றம்பலம்பிள்ளை அவர்களின் பேரன் திரு ஆ. சிவதாசன் அவர்களின் அன்பு மனைவி திருமதி வேதநாயகி சிவதாசன் அவர்களின் மறைவினை நினைவு கூருகின்றோம். அத்துடன் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ் வேளையில் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சுதுமலை
சிந்மய பாரதி வித்தியாலயம்
மானிப்பாய்.

(52952)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சோமசுந்தரம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், பளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் 29-01-98 அன்று சிவபதம்அடைந்து விட்டார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், சிவகாமசுந்தரி [H N.D A II-ம் வருடம்], ஹேமலதா (யூனியன் கல்லூரி - 96), செந்தூர்வாசன் (யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 30-01 98 இல் மல்லாகத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தற்போதைய முகவரி:
'வேதவில்லா'
ஐயனார் வீதி,
மல்லாகம். (சி/2750)

### காசிப்பிள்ளை யோகரத்தினம்
(யப்பான்)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை யோகரத்தினம் 29.01.98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை பவளரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், சித்ராதேவியின் அன்புக் கணவரும், பதிதரன், சஜீந்தினி, சஜீதரா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் கமலாம்பிகை தம்பதிகளின் மருமகனும், திரு. கணேசரத்தினம், திரு. நவரத்தினம், திருமதி புஸ்பராணி ஜெயரத்தினம், திருமதி சறோஜினி சிவகுமாரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31.01.98 காலை 10-30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
யோ. சித்ராதேவி
(மனைவி)

750 பலாலி வீதி,
திருநெல்வேலி. [53003]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்:
# ஒரு "போஸ்மோர்ட்டம்" அலசல்!

யாழ். உள்ளூராட்சித்தேர்தல்கள் முடிவடைந்து விட்டன. எதிர்பார்த்ததற்கு மாறாக் 'சுமுகமாக' முடிந்து விட்டன.

இத்தேர்தல்கள் பல செய்திகளை வெளிப்படுத்தியிருக்கின்றன என்பதுதான் உண்மை.

அரசியல் கட்சிகள் அல்லது குழுக்கள் தமது தலையில் மிளகாய் அரைப்பதற்கு தாங்கள் வெறும் ஏமாந்த சோணகிரிகள் அல்லர் என்பதை குடாநாட்டு மக்கள் வெளிப்படையாக — அப்பட்டமாக — அக்கட்சிகளுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள் என்பது பொதுவான செய்தி.

மக்கள் விருப்பத்தை மீறி, அல்லது அதனை உதாசீனப்படுத்தி, தேர்தலை மக்கள் மீது திணித்தவர்களை மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்; எப்படிப் பதிலடி தருவார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும் செய்தி இரண்டாவது.

எவ்வளவு பணத்தைக் காட்டினாலும், நிதியைச் செலவிட்டாலும், ஆசையைத் தூண்டினாலும் ஏமாளியாகும் பழைய நிலையில் குடாநாட்டு மக்கள் இல்லை என்ற செய்தி மூன்றாவது.

தேர்தல் என்று ஒன்று வந்தால் எங்களுக்குள் நாம் எந்தளவுக்கு மாறி மாறி சேற்றை அள்ளி வீசுவோம் என்பதை கட்சிகள் நிருபித்து வெளியிட்டிருக்கும் செய்தி நான்காவது.

தேர்தல் என்று ஒன்று வந்துவிட்டால் பதவி ஆசைக்காக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தேர்தல் கோஷம் என்பதாக மாற்றி, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் நோக்கத்தையும் அடியோடு அடகுவைத்து தேர்தல் சூது ஆடுவோம் என்பதை கட்சிகள் வெளிப்படுத்திய செய்தி அடுத்தது.

எவ்வளவு சாராயம் ஆறாகப் பாய்ந்தாலும்— எவ்வளவு பச்சை மயில்தாள் விசிறப்பட்டாலும்— எத்தனை லட்சங்களுக்கு அல்லது கோடிகளுக்கு வண்ணப் போஸ்டர்கள் அடித்து ஒட்டினாலும்—பாரிய தட்டிகளை கட்—அவுட்டுகளை வைத்தாலும்—அவற்றுக்கு யாழ். குடாநாட்டு மக்களில் பெரும்பாலானோர் இலகுவில் எடுபடமாட்டார்கள் என்ற செய்தி அடுத்தது.

இவ்வாறு இந்தத் தேர்தல் வெளிப்படுத்தும் செய்திகள் மேலும் பலப் பல.

### தேர்தல் கணக்கு

வாக்களிப்பைப் பொறுத்தவரை—

பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் ஐந்து லட்சத்து 71 ஆயிரத்து 486 பேர். வாக்களித்தோர் ஒரு லட்சத்து ஐயாயிரத்து 431 பேர். ஆகவே 18. 44 வீதத்தினரே வாக்களித்துள்ளனர்; ஏனையோர் தேர்தலைப் பகிஷ்கரித்து விட்டனர் என்று கூறுவது வெறும் கணக்குக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் அது உண்மையல்ல; பொருத்தமற்றது.

இந்தப் பத்தியில் நாம் முன்னர் பல தடவைகள் குறிப்பிட்டபடி யாழ். குடாநாட்டில் தேர்தல் நடந்த உள்ளூராட்சி சபைப் பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை ஐந்து லட்சத்து 70 ஆயிரம் என்றாலும்—

யதார்த்தமாக இங்கு தற்போது வசிக்கின்ற—18 வயதுக்கு மேற்பட்ட—வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர்களின் எண்ணிக்கை மூன்று லட்சத்துக்கும் சற்றுக் குறைவானவர்களாகவே இருக்கும் என்பது பொதுவான கணிப்பீடு. எனவே வாக்களித்த மக்களின் வீதத்தைக் கணிப்பிட முயல்பவர்கள் மொத்த வாக்காளர் எண்ணிக்கையை 3 லட்சத்துக்கு சற்று முன், பின்பாகக் கொள்வதே நியாயமாக இருக்கும்.

எனவே குடாநாட்டில் வாக்களிக்குழ் தகுதி பெற்று- வாக்களிப்பதற்கு வாய்ப்புடையவர்களாக — வசிக்கும் மக்களின் எண்ணிக்கையை இரண்டு இலட்சத்து 75 ஆயிரத்துக்கும் மூன்று இலட்சத்துக்கும் இடைப்பட்ட ஒரு கணியமாகக் கொள்ளலாம்.

வழக்கமாக இத்தகைய உள்ளூராட்சித் தேர்தல்களில் இரண்டு முதல் மூன்று வீத வாக்குகள் செல்லுபடியற்றவையாவது தவிர்க்க முடியாதது. ஆனால் இந்தத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 14 வீதம் (அதாவது 14 ஆயிரத்து 838 வாக்குகள்) செல்லுபடியற்றதாகியிருப்பது முக்கிய விடயம்.

தம் மீது இத்தேர்தல் திணிக்கப்பட்டதை ஆட்சேபித்துக் காட்டவும் —

தேர்தலில் போட்டியிடும் எந்தக் கட்சியும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு தகுதியற்றது என்பதை வெளிப்படுத்தவும் —

தேர்தல் நடத்துவதற்கான கால சூழ்நிலை இல்லை என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டவும் —

எந்தக் கட்சிக்கும் வாக்களிக்கத் தாங்கள் விரும்பாத போதிலும், வாக்களிக்காமல் விட்டால் தங்கள் வாக்கு வேறு கட்சிக்கு கள்ள வாக்காக மாறி விடக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் —

ஜனநாயக தேர்தல் முறையில் தமக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை அதே வழியில் பயன்படுத்த பலர் முடிவு செய்திருந்தனர் என்பது தேர்தல் களத்தில் பலரையும் சந்தித்தவர்களுக்கு நன்கு தெரியும். தமது வாக்கை பழுதற்றதாக்குவதன் மூலம் தமது முடிவை வெளிப்படுத்த பலர் முயன்றனர் என்பது உலகறிந்த உண்மை. அந்தக் காரணத்தினாலேயே அளிக்கப்பட்ட ஒரு லட்சத்து ஐயாயிரம் வாக்குகளில் 14 ஆயிரத்து 838 வாக்குகள் செல்லுபடியற்றவையாகும் நிலை ஏற்பட்டது.

அதாவது வாக்களித்த ஒரு லட்சத்து ஐயாயிரத்து 413 பேரில் 14ஆயிரத்து 838க்கும் குறைந்த ஒரு தொகையினர் இத்தேர்தலை நிராகரிப்பதாக வெளிக்காட்டியிருக்கின்றார்கள்.

ஆகவே அவர்களைக் கழித்துப் பார்த்தால் இத்தேர்தலை ஏற்று வாக்களித்தவர்கள் ஏறத்தாழ 90 ஆயிரத்துக்கும் சற்றுக் கூடிய எண்ணிக்கையினராக இருப்பார்கள். இந்த எண்ணிக்கையை வைத்துக் கொண்டு கணிப்பைச் செய்வதே சரியாக இருக்கும்.

குடாநாட்டில் தற்போது வசிக்கின்றவர்களில் வாக்களிக்கத் தகுதி பெற்றோர் சுமார் 2 லட்சத்து 70 ஆயிரம் பேர் என்றும் —

தேர்தலை ஏற்று வாக்களித்தோர் சுமார் 90 ஆயிரம் பேர் என்றும் —

கொண்டால், மூன்றில் ஒரு பங்கு வாக்காளர்கள் வாக்களித்திருக்கின்றார்கள். இது 33 சத வீதமாகும்.

இத்தனை பாதுகாப்பு கிராமங்களுக்கு மத்தியில் இத்தனை சதவீதத்தினர் வாக்களித்திருப்பது பாதுகாப்புப் படைகளையும், அரசையும் பொறுத்தவரை வெற்றி என்றே கூறலாம்.

ஆனால் தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை இது தோல்வி; அவர்கள் முகத்தில் கரி பூசப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

அதைப் பார்க்க முன்னர் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இந்திய அமைதிப்படை இங்கிருந்த காலத்திலும் இங்கு தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. தேர்தல் தினத்தன்று நண்பகல் அளவில் பல பிரதேசங்களிலும் வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர், அங்கு வாக்களித்ததை வெளிப்படுத்தும் மையை விரலில் தடவப்படாத— வளர்ந்த ஆள்களை — மந்தைகள் போல் கூட்டம் கூட்டமாகக் கூட்டி வந்து ஏதோ ஒரு வாக்களிப்பு நிலையத்துக்குக் கொண்டு சென்று, அங்கு யாருக்கு வாக்கு உண்டு, யாருக்கு இல்லை என்பதை எல்லாம் பார்க்காமல் ஆளுக்கு ஒரு வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொடுத்து வாக்களிக்க வைத்த தேர்தல் எமக்குத் தெரியும்.

ஆனால் அந்த வகையில் குடா நாட்டுத் தேர்தல்களில் ஸ்ரீலங்கா படைகள் நடுநிலைமை பேணின என்ற உண்மையை கூறித்தான் ஆக வேண்டும்.

# உள்ளும் புறமும்

## குறுமுனி

ஆங்காங்கே சில இடங்களில் பொதுமக்களை — கிராம சேவையாளர்களை— சந்தித்த இராணுவ அதிகாரிகள் தேர்தலின் போது உங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துங்கள் என்று ஆலோசனைகள் கூறினார்கள் என்பது நிஜமே. ஆனால் திட்டமிட்ட முறையில் — மக்களை வாக்களிக்க வைக்கும் — அழுத்தங்களைப் பிரயோகிக்கும் — நடவடிக்கைகள் எதிலும் அவர்கள் ஈடுபடவில்லை. தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்குவதோடு தமது பணி முடிந்தது என்றளவில் அவர்கள் தமது கடமையைப் புரிந்தனர்.

பளைப் பிரதேசத்தில் சில இடங்களில் தேர்தல் தினத்தன்று வாக்களிக்கச் செல்லும்படி பொதுமக்களைப் படையினர் வற்புறுத்தினர் என்பதைத் தவிர, வேறு பெரிய முறைப்பாடுகள் ஏதும் படையினருக்கு எதிராக தேர்தல் தொடர்பான வன்செயல்களைக் கண்காணிக்கும் குழுவிடம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஓர் இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் இவ்வாறு தனது படைகளைக் கட்டுப்படுத்தியதற்காகவும் —

குறைந்தளவு வன்முறைகளுடன் தேர்தலை இயன்றவரை சுமுகமாக நடத்தி முடிக்க வேண்டும் என்று வழங்கப்பட்ட மேலிட உத்தரவை தன்னளவில் ஓரளவு செவ்வனே பூர்த்தி செய்திருப்பதற்காகவும் — ... மேஜர் ஜெனரல் பலகல்ல பாராட்டுக்குரியவராகுகின்றார் என்று தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்காக யாழ். வந்திருந்த தென்பகுதிச் செய்தியாளர் ஒருவர் சுட்டிக் காட்டுகின்றார்.

### தமிழ்க் கட்சிகளின் நிலைமை

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் தமிழ்க்கட்சிகள் இந்தத் தேர்தலுக்கு தண்ணியாய் வாரியிறைத்தபணம், செய்த பிரசாரங்கள் எடுத்த எடுப்புகள் எல்லாவற்றுக்கும் மௌனமாகப் பதிலளித்து அவற்றின் வாயை 'அடக்கி' வாசிக்க வைத்திருக்கின்றார்கள் யாழ். குடாநாட்டு மக்கள்.

ஒரு சில ஆயிரம் வாக்குகளுடன் இந்தச் சபைகளைக் கைப்பற்றி —

நாமே குடாநாட்டு மக்களின் பிரதிநிதிகள் என்று வெறும் ஜம்பம் அடித்துக் கொள்வதிலும் பார்க்க —

ஒட்டுமொத்தமாக இத்தேர்தலை ஆரம்பத்திலேயே பகிஷ்கரித்து — அதன் மூலம் ஈழத் தமிழர் பிரச்சினை விடயத்தில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு நிற்கின்றன என்ற பலத்தை ஸ்ரீலங்கா அரசுக்கும் ஒற்றுமையாகக் காட்டி — அதன் மூலம் எமது இனத்துக்காக உரிய காலத்தில் — உரிய நடவடிக்கை எடுத்து — உரிய பணியைச் செய்கிறோம் என்று திருப்தியடைந்திருக்கலாமே என்ற எண்ணம் — காலம் கடந்த ஞானம் — நிச்சயம் தமிழ்க் கட்சிகளுக்கு இப்போதுவந்திருக்கும் என்று நம்பலாம்.

என்றாலும் அவை அதனைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளப் போவதில்லை என்பதையும் —

விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பாணியில் விளக்கங்கள், வியாக்கியானங்கள் போன்றவற்றை அவை கூறும் என்பதையும்—

கண்ணை மூடிக்கொண்டு இப்போதே நிச்சயமாக கூறி விடமுடியும்.

### ஈ. பி. டி. பி.

ஈ. பி. டி. பி. யாழ். மாநகரசபையையும், மூன்று நகரசபைகளையும் கோட்டை விட்டுவிட்டது.

ஆனால் செல்லுபடியான வாக்குகளில் 40 சதவீதமானவை அக்கட்சிக்கே விழுந்தன என்பதும்—

அக்கட்சியே தனித்து அதிக வாக்குகளையும், அதிக சபைகளையும் கைப்பற்றியது என்பதும்—

அக்கட்சிக்குக் கிடைத்த 'பிளஸ் பொயிண்ட்கள்' ஆகும்.

நாடாளுமன்றத்தில்— யாழ். குடாநாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒன்பது எம். பிக்களை அக்கட்சி வைத்திருந்த போதிலும்—

போதிய வாக்குகள் பெறாமல் எம். பி. பதவிகளைக் கைப்பற்றியவர்கள் அல்லது தக்கவைத்தவர்கள் என்ற குற்றச்சாட்டு அக்கட்சியினருக்கு உண்டு.

அந்தப் பேச்சை அடிபடச் செய்வதற்கு இத்தேர்தலை அவர்கள் பயன்படுத்த முயன்றனர் என்பதும்—

அதற்காகவே தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து இத்தேர்தலைப் பகிஷ்கரிக்கும் யோசனை முன்னெடுக்கப்பட்டபோது அதனை நாசூக்காக அவர்கள் முறியடித்தனர் என்பதும்—

பொதுவாக அனைவரும் அறிந்த விடயம். ஆனால் அந்த அபகீர்த்தியை முறியடிக்கும் முயற்சியில் கணிசமாகத்தன்னும் அவர்கள் வெற்றி பெற முடியாமல் போய்விட்டது.

ஆரம்பத்தில் இருந்த ஆரவாரத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் ஈ. பி. டி. பியே போட்டியின்றிச் சுவீகரித்துச் செல்லும் என்று ஒரு நம்பிக்கை நிலவியது.

ஆனால் ஏனைய கட்சிகள் திட்டமிட்டு அக்கட்சி மீது, சுமத்திய குற்றச்சாட்டுகள் பிரசாரங்கள், அநாமதேய துண்டு நோட்டீஸ்கள், அக்கட்சியின் புங்குடுதீவு அலுவலகம் மீது தேர்தலை ஒட்டிய காலத்தில் புலிகள் நடத்திய எதிர்பாராத தாக்குதல் பத்திரிகைச் சச்சரவுகள் என்பன ஈ. பி. டி. பிக்கு எதிரான நிலைமையைத் தோற்றுவித்ததோடு, அக்கட்சியின் கணிசமான வாக்குகளை வாரியும் விட்டன.

போஸ்டர், சுவரொட்டி என்பவற்றில் பெரும் எடுப்பாக இக்கட்சி ஈடுபட்டது தெரிந்ததே.

அதிக தேர்தல் வன்முறைகள் இக்கட்சிக்கு எதிராகவே செய்யப்பட்டன.

ஆனால் முறைகேடான வழியில் வாக்குகளை போட வைத்ததாக இக்கட்சிக்கு எதிராக — பொதுமக்கள் நம்பக் கூடிய வகையில் — குற்றச்சாட்டுகள் இல்லை என்ற உண்மையைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

### புளொட்

தேர்தல் முடிவுகளை அடுத்து, தேர்தலின்போது 'Plot Against PLOTE' (புளொட்டுக்கு எதிரானசதி) இடம்பெற்றதாக அக்கட்சியின் உபதலைவரும் யாழ். மாநகர சபைக்கான முதன்மை வேட்பாளருமான மாணிக்கதாஸன் கூறினாலும் கூட, யாழ். மக்கள் அதை நம்புவதாக இல்லை.

அரசு ஏற்பாட்டில் கூட்டணிக்கு ஆதரவான வாக்குகள் திணிக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு அடிப்படையற்றது; மக்கள் முன்னிலையில் அர்த்தமற்றது எனினும் —

யாழ். மாநகர சபைத் தேர்தல் தொடர்பாக புளொட்டின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் பொதுமக்களுக்குத் திருப்திதரவில்லை என்பதையும் —

பிழையான வழிகளில் வாக்கு சுவீகரிப்பு நடந்த விவகாரங்களுக்கு புளொட் மீதே மக்களின் குற்றச்சாட்டுப் பார்வை விழ்ந்திருந்தது என்பதையும் — மறைக்க முடியாது.

காலம் காலமாக தேர்தல் நடவடிக்கைகள் எவ்வாறு இடம்பெற்றன என்பதில் நீண்டகாலம் நேரில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர் புளொட் தலைவரும் எம். பியுமான சித்தார்த்தன் 1960 களில் இருந்தே தனது தந்தையாருக்கு உதவியாளராகப் பல தேர்தல்களைச் சந்தித்தவர் அவர். எனவே தேர்தல்களை அவர் எதிர்கொண்ட விதம், கடைசி நாள்களில் வாக்குகளை அள்ளிப்போட அவர் நாடிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

உயர் குல இந்து 36 வயது சவூதியில் பணிபுரியும் மின் இணைப்பாளருக்கு நற்பண்புடைய சதயம், அவிட்டம், சித்திரை நட்சத்திரமுடைய தொழில் புரியும் மணமகள் தேவை. படம், குறிப்பு ஆகிய விவரங்களுடன் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை. பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். ந. தில்லைநாயகம், ஏழாலை மேற்கு' சுன்னாகம். [52956]

### SPOKEN ENGLISH

சிறுகுழுப்பாக ஆங்கிலப் பயிற்சி (10 மாணவர்கள் மட்டும் அனுமதி) வாரம் நான்கு நாள்கள். புதிய வகுப்புக்கள் ஆரம்பம். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (52963)

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி Broiler) புறோயிலர் தினந்தோறும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (52950)

### ஆங்கிலம் — கணிதம்

ஆண்டு 6 — 11 வரை Literature ஆண்டு 9, (O/L வினாவிடை உட்பட) G.A.Q ஆங்கிலம் Spoken English கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (52942)

### வினாத்தாள்

25-1-98 இல் நடைபெற்ற 12 ஆம் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, வாழ் நகர். [52902]

### மகாத்மா காந்தி

திருவள்ளுவர் திருக்குறளில் சொல்லிய வண்ணம், வாழ்ந்தவர் மகாத்மா காந்தி. மிலக் வைற் மேலுறைகள் 5 கொடுத்து மகாத்மா காந்தி படமும் படிப்பினை புத்தகமும் பெற்றுக் கொள்ளுங்கள் மில்க்வைற். (சி/ 2753)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேடன், சேவல் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: NO 68, Old Park Road, Jaffna (52990)

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler), இறைச்சிக்குகந்த கோழி (GUll Bird) விற்பனைக்குண்டு சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத்தெருயாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்) (52995)

இறைச்சிக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும் ஒவ்வொரு நாளும் கிடைக்கும் (காலை தொடக்கம் மாலைவரையும்) தொடர்பு: Luck Farm Sales Centre Palaly Road, Thiranelvely. (52999)

### சிங்களம்

எழுத்து/ பேசகப் பயிற்சி புதிய வகுப்பு ஆரம்பம்:- 31—1—98 சனி பி.ப. 4.00. ஏற்கனவே 1 கட்டப்பயிற்சி முடித்தவர்களுக்கும் அடுத்த கட்டப் பயிற்சியும் ஆரம்பமாகவுள்ளது. T Sagathevan English & SinhalaClasses, 46, பிரப்பங்குளம் வேம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (52994)

## வாழ்த்துகிறோம்

ஆசிரிய உலகில் 40 ஆண்டுகளாக ஆங்கில ஆசிரியப் பணியாற்றி 14 ஆண்டுகள் எமது கல்லூரியிலும் நற்பணியாற்றி இன்றுடன் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறும் நல்லாசான்,

**திரு. அ. பாக்கியநாதர்**

அவர்கள் நலமுடன் பல காலம் வாழ வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
**யா/ நடேஸ்வராக் கல்லூரி.**

(சி/ 2754)

## திருமறைக் கலாமன்றம்
## CENTRE FOR PERFORMING ARTS

## கருத்தரங்கு

கருத்துரை:

**இளைஞர் இன்றைய நிலை**

திரு. வி. க. கந்தவேள்
(அரச மொழி பெயர்ப்பாளர்)

பிரச்சினைகளும் தீர்வுகளும்
பேராசிரியர் V. K. கணேசலிங்கம்
(பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம், தலைவர், இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை.)

நாள்: 31-01-1998 (சனி)
நேரம்: மாலை 5.00 மணி
இடம்: மன்ற கேட்போர் கூடம் 238, பிரதான வீதி, யாழ்.

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச்செயலர்.

(சி/ 2747)

## ஓராண்டு நினைவு நாள்



### அமரர் இளையவி கந்தையா

தோற்றம்: 31 - 08 - 1926
மறைவு: 11 - 02 - 1997

தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தி இருப்பதுதலே முது மொழிவாம்-கந்தையா எந்தையர் தம் ஏற்றத்தின் ஏணிப் படியது வாய் வந்துதித்தார் வாய்மை மிகு செம்மல்!

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய பப்பாவே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
தாங்கள் வாழ்ந்து காட்டிய வழியில் நாங்கள் செல்வதுதான் உங்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சாத்தாவத்தை வைரவர் ஒழுங்கை,
மானிப்பாய். [52968]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை எழிலுறு காட்சிகளுடன் வண்ணப் புகைப்படமாக்கிக் கொள்ளவும், மங்களகரமான நிகழ்ச்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்திடவும் நாடுங்கள்:

## அஜந்தா போட்டோ & வீடியோ

(முத்திரைச்சந்தையடி)
63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(52993)

## யுனிசெவ்
## வெளிக்கள உதவியாளர்
## தேவை


குழந்தைகள் தொடர்பான நடவடிக்கைகளில் அனுபவமுள்ள, ஆர்வமுள்ள ஒருவர் வெளிக்கள உதவியாளராக மேற்படி ஸ்தாபனத்திற்கு தேவைப்படுகிறார். விண்ணப்பிப்பவர் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் பேசவும் எழுதக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் ஓரளவு கணனி அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

சொந்த விவரங்களுடன் 04 - 02 — 1998 இற்கு முன்னதாக விண்ணப்பத்தை

திருமதி பெனிபுறூண்
யுனிசெவ்,
286, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(52971)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் விரசுத்தியார் பொன்னையா கார்த்திகேசு J. P. U. M
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

மலர்வு: 11 — 04 — 1931
உதிர்வு: 11 — 02 — 1997
திதி: 31 — 01 — 1998

ஆறிடுமோ உங்கள் நினைவலைகள்
ஆண்டு ஒன்று சென்றிடினும்
பாரினில் வந்துதித்து சட்டத்தரணியானாய்
பாதியில் எம்மைப் பரிதவிக்க விட்டு இறைவனிடம்
சென்றதுஏனோ?

மண்ணுலகை நீத்த எம்மாண்புமிகு தந்தையாரே!
கண்ணின் மணிபோல் காத்து நின்ற அப்பாவே!
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித்
தவிக்கின்றோம்.

பாசமும், நேசமும் பற்றும் மிகவைத்தீர்கள்
ஆசையுடன் வளர்த்து அன்பு மழை பொழிந்தீர்கள்
விதியின் விளையாட்டால் இப்போது வீதியில்
நிற்கின்றோம்.
கொழுகொம்பில்லாக் கொடி போலத்தவிக்கின்றோம்
தங்கள் திருமுகத்தின் தரிசனத்திற்கு ஏங்கித்
தவிக்கின்றோம்.
எங்கள் கனவிலே வந்து நிதம் காட்சி தருகின்றீர்
கனே அப்பா!

மனையெலாம் உமது காட்சி
மனமெலாம் உமது தோற்றம்
கனவெலாம் நீரே எங்கள்
கண்களில் உறக்கம் ஏது?
புனைவளம் நீக்கி நாங்கள்
பொலிவிழந்துள்ளோம் ஐயா!
உமை நினைந்துருகா நாளும்
உளதோ எம்மிறைவா?

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைமார்,
மைத்துனி.

24, புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி. (சி/ 2686)

**YARL HALL கல்வி நிலையம்**

(திருமறைக் கலாமன்றம் முன்பாக)

25 ஆண்டுகால இணையற்ற கல்விச் சேவையில்

இரா. செல்வவடிவேல் விஞ்ஞானம்

வகுப்புக்கள் யாவும் ஆரம்பம்:
**01 - 02 - 1998**

[52982]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் வைரமுத்து சின்னத்துரை

மலர்வு: 22 – 04 – 1915

உதிர்வு: 30 – 12 – 1997

ஆயிரம் பிறைகண்டு அகவை சேர்ந்தாலும், வாயார ஐயா! என்று அழைத்திட நீங்களில்லையே! அவனி தனில் தலை நிமிர்ந்து வாழ்ந்திடவே ஆதரித்தெமை ஆளாக்கிவிட்ட எங்கள் அன்புத் தந்தையே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

48, பழம்வீதி,
சுத்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(52916)

## நீங்காத நினைவில் ஈராண்டு

மண்ணில்: 10 – 01 – 1942



மண்ணுள்ளில்: 22 – 02 – 1996

### அமரர் செல்லையா தர்மலிங்கம்

(நிர்வாக உத்தியோகத்தர்,
சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

திதி - 31 - 01 - 1998

கல்வியில் வித்தகனாய்
கடமையில் வீரனாய்
ஒழுக்கத்தில் உத்தமனாய் வாழ்ந்து—நாம் வாழ
நேர்ப்பாதை காட்டிய எம் அன்புத் தெய்வமே!
ஊர் விட்டு ஊர் சென்றவேளை — உங்களை
பார் விட்டு அகற்றினானோ பரமனவன்
ஈராண்டென்ன ஈராயிரம் ஆண்டெனினும்
மறக்குமோ எம் நெஞ்சம்? மாறுமோ எம் துயரம்?

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

19, சீனிவாசன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

"லெபதி"
பண்ணை ஒழுங்கை,
மன்னாகம்.

## ஜி. சீ. ஈ. உயர்தரம் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, ஜன. 31

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற 1997 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் இரு வாரங்களுக்குள் வெளியிடப் படுமென்று நேற்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகமாகப் பதவியேற்ற ஆர். வி. அமரக்கோன் செய்தியாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

பரீட்சை முடிவுகளை விரைவில் வெளியிடுவதற்கு வசதியாக புதிய கணனி சாதனங்கள் பொருத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

(ஐ-9)

## சிரமதானம்

சண்டிலிப்பாய், ஜன. 31

காரைநகரில் முன்னர் வட பிராந்திய போக்குவரத்து சபையின் டிப்போ இயங்கிய இடம் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஏழு வருட காலமாக பற்றைக் காடாக இருந்து வந்த இந்த இடத்தை துப்புரவு செய்யும் சிரமதானப் பணி அங்கு அண்மையில் நடைபெற்ற போது வட பிராந்திய போக்குவரத்து சபையைச் சேர்ந்த ஊழியர்களுடன் காரைநகர் பகுதி மக்களும், கடற்படையினரும் கலந்து கொண்டனர்.

(ஐ-135)

## ஆணைக்குழுவுக்கு எழுத்துமூல முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன. 31

களுத்துறைச் சிறைச்சாலையில் நடந்த தாக்குதல் சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் இவற்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை பொது மக்கள் எழுத்து மூலம் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலையில் நடந்த தாக்குதல் சம்பந்தமாக விசாரிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேல் நீதிமன்ற நீதிபதி ராஜா நிகால் பெர்னாண்டோவை நியமித்துள்ளார். (இ-7)


நெல்லியடி

**மஹாத்மா வெண் திரையில்**

30 - 01 - 98 முதல்

சரத்குமார்
தேவயானி
நடித்த
சூரியவம்சம்



**ரெறாசோ ஷிப்ஸ் (Terrazzo Chips)**

★ கலர் பவுடர்
(Pigments)
[Holland and Germany]

★ வெள்ளை சிமெந்து
(Asano)

★ கதவுப் பூட்டுகள்
(Union English)
(Direct Importers)

**றம்சன்ஸ்**

இல: 443.
பழைய சோனகத்தெரு
கொழும்பு - 12

தொலைபேசி



ஜவுளி உலகின் முன்னோடிகள்

மங்கள வைபவங்களுக்கேற்ற தரமான பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான இடம்:

**ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ**

13, 14, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(52967)


## திரு. தா. அமிர்தலிங்கம் M. A. அவர்களின் "இணுவில் கிராமத்தின் கல்வி மரபு" நூல் வெளியீட்டு விழா

இடம்: யா/இராமநாதன் கல்லூரி மண்டபம்

காலம்: 31 - 01 - 98 இன்று மாலை 2.30 மணி

தலைவர்: திரு. பா. தனபாலன்

ஆசியுரைகள்:
- சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
- கலாநிதி சபா. ஜெயராசா
- கலாநிதி சின்னத்தம்பி
- திரு. கு. சண்முகநாதன் B.Ed. M. A.

வெளியீட்டுரை: பேராசிரியர் வ. ஆறுமுகம்

மதிப்பீட்டுரை: திருமதி கோகிலா மகேந்திரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— விழா அமைப்பாளர்கள்

(52989)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி வேதா சிவதாசன் B. A.

(ராசு)

(குடும்ப ஆலோசகர் (Family Counseller)
யாழ். சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றங்கள்)

மலர்வு: 02-02-1940

உதிர்வு: 01-01-1998

எங்கள் குடும்பத்தின் தலைவியாய், பாசத்தின் உதாரணமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து. எம்மை அன்புடன் அரவணைத்து இன்புறவாழவைத்த மானிட தெய்வப்பிறப்பே! அதிசயப்பிறவியே! மக்கள் துயர் துடைத்த மகா உத்தமியே! உங்கள் தியாகத்துக்கு ஈடு இணை இல்லை. உங்களை இழந்ததால் இந்த உலகமே எங்களுக்கு மாயையாகத்தான் தெரிகிறது. உங்கள் நினைவுகளை நம் கண்ணீர் அஞ்சலிப் பூக்களாய் உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

31-1-98 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், தாய், சகோதரன்,
சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்,
மருமக்கள்.

76, இலந்தைக்குளம் வீதி,
மாம்பழம் சந்தி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(52986)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் அதிர்வு!

பௌத்தர்களின் முக்கிய ஸ்தலமான தலதாமாளிகை மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் சிங்கள மக்கள் மத்தியில் பல்வேறு உணர்வு அலைகளைக் கிளப்பிவிட்டிருக்கின்றது.

முல்லைத்தீவில் ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான சிங்களப் படையினர் கூண்டோடு அழிக்கப்பட்ட போதும் — புனித மத தலத்தைத் தாக்குவது என்பது பலத்த கண்டனத்துக்கு உரியது என்பதை மறந்து விட முடியாது.

நவாலியில் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்த அப்பாவிகள் மீது கூண்டோடு குண்டுகளைக் கொட்டியதையோ, குருநகரில் புனித யாகப்பர் ஆலயம் குண்டுவீசித் தாக்கப்பட்டதையோ, மற்றைய பல்வேறு இந்து ஆலயங்கள் நாசமாக்கப்பட்டதையோ காட்டி தலதா மாளிகை மீதான தாக்குதலை நியாயப் படுத்திவிட முடியாதுதான்.




பொங்கியெழாத அரசு, தலதா மாளிகைத் தாக்குதலை அடுத்து கொதித்தெழுந்து புலிகளைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்து பேச்சுவார்த்தைக்கான இறுதிக் கதவையும் இறுக மூடிக் கொண்டு விட்டது..

அந்தளவுக்கு சிங்கள பௌத்த இன உணர்வின் அடிநாதத்தை தட்டித் தாக்கி எழுப்பியிருக்கின்றது இத்தாக்குதல். அதன் விளைவு என்னவென்றாறது.

தலதா மாளிகை தாக்கப்பட்டபோது எழுந்த உணர்வலைகளையும் —

அதனை ஸ்ரீலங்கா வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் பிரதிபலித்த விதத்தையும் —

புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆனால் —

அதற்குப் பதிலடியாக, கண்டியில் இந்து ஆலயம் ஒன்றும் இந்துகலாசார, மண்டபம் ஒன்றும் தாக்கப்பட்டதும் குருந்துவத்தைமுத்துமாரியம்மன் சித்திரத் தேர் தீக்கிரையாக்கப்பட்டதும் வெளியே தெரியாமல் மறைக்கப்பட்டது — அல்லது மறைந்தது— ஏன் என்பதைப் புரிந்துகொள்ளமுடியவில்லை.

''சுதந்திரப் பொன் விழா கொண்டாட்ட வைபவங்களும், அது நடைபெறும் இடங்களும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகும் அச்சுறுத்தல் உள்ளது என்பதை நன்கு உணர்ந்திருந்தும், ஒரு புனித தலம் அமைந்துள்ள பிரதேசத்தில் அந்த வைபவத்துக்கு அரசு ஏற்பாடு செய்தது ஏன்? அப்படியான ஏற்பாட்டைச் செய்ததற்காக அந்த அழிவுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்'' — என புளொட் உபதலைவர் மாணிக்கதாஸன் கூறியிருப்பதும்

**பாசுபதன்**

இங்கு கவனிக்கத் தக்கது,

தலதா மாளிகை மீதான தாக்குதல் அதிர்வு அந்த ஆலயத்தைச் சேதப்படுத்தியதோ என்னவோ ஆனால் கொழும்பு அரசியலில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்த

(7 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். உள்ளூராட்சி...

(மூன்றாம் பக்கத் தொடர்)

முறைகள், கையாண்ட நடவடிக்கைகள் போன்றவற்றில்அந்தக்காலத்து'நேர்த்தி' காணப்பட்டது.

இந்தத் தேர்தலில் அது வாக்குகளைக் குவித்தாலும் — கட்சியின் எதிர்கால நலனுக்கு ஆக்க பூர்வமான வளர்ச்சிக்கு அது உகந்ததுதானா என்பதை அவர்தான் முடிவு செய்ய வேண்டும்.

என்றாலும் குடாநாட்டில் முதலில் எதிர்கொண்ட தேர்தலில் இரு நகரசபைகளையும் இரு பிரதேசசபைகளையும் அக்கட்சி கைப்பற்றியிருக்கின்றது. அத்துடன் யாழ். மாநகரசபையை ஆக 328 வாக்குகளினால் கூட்டணியிடம் கோட்டை விட்டிருக்கின்றது. இது இரண்டும் நோக்கற்பாலது.

ஈ. பி. ஆர். எல். எவ்.

எந்தச் சபையையும் இக்கட்சி கைப்பற்றவில்லை. தேர்தலுக்காக தவறான வழி முறைகளையும் நாடவில்லை. தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் ஸ்ரீலங்கா அரசுக்கு தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமையை அதிரடியாகப் புரிய வைக்க முயன்று தோற்றதால், நாமும் போட்டியிடுகின்றோம் என்று காட்டுவதற்காகத் தேர்தலில் குதித்தது போன்று தோற்றியது.

அளவுக்கு மிஞ்சி போஸ்டர்களால் சுவர்களை நாசமாக்கியது தவிர,' வேறு தேர்தல் குளறுபடிகளில் ஈடுபட்டதாக பெரிய குற்றச்சாட்டுகள் இல்லை.

இந்திய அமைதிப் படை காலத்தில் கெடுத்துக் கொண்ட பெயரைத் துடைத்தெறிந்து புதிய சக்தியாக உருவெடுப்பதற்கு உண்மையாக முயற்சிப்பது போல மக்களிடம் இக்கட்சி காட்டிக் கொள்கின்றது. அது உண்மையானால் அதற்கு இத்தேர்தலில் கிடைத்த 13ஆயிரம் வாக்குகளும் ஊக்க சக்தியே.

ரெலோ

ரெலோவுக்கு இத்தேர்தலில் கிடைத்த வாக்குகள் 7 ஆயிரம். அது கவர்ச்சியாக வைத்த கோஷங்கள் அதிகம் எடுபடவில்லைப் போலும்.

என்றாலும் தான் முழுக் கவனம் செலுத்திய ஒரேயொரு நகரசபையான வல்வெட்டித்துறை நகரசபையை தனது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

அங்கு 13 சதவீதமானோரே வாக்களித்தனர் என்றாலும்—

புலிகளின் தலைவர் பிரபாகரனின் சொந்த இடத்தில் உள்ள நகரசபையைக் கைப்பற்றியிருப்பது ரெலோவுக்குப் பெருமையே. அக்கட்சியின் முதல்வரும் அங்கு முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டவருமான சிவாஜிலிங்கம் அந்த ஊரவர் என்பதே அக்கட்சியின் அந்த வெற்றிக்கு அடிப்படைக் காரணம்.

ஏனைய இடங்களில் ரெலோவுக்கு பெரிய அடித்தளம் இருப்பதாகத் தெரியவில்லை.

கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தளவில் கடைசி நேரத்தில் களத்தில் வந்து குதித்தவர்கள் அவர்கள். தேர்தல் என்று அவர்கள் சுதாகரிப்பதற்குள்ளேயே தேர்தல் வந்து போய் விட்டதுதான் உண்மை.

யாழ். மாநகர சபையில் கூட்டணி வெற்றியீட்டியதற்கு கூட்டணி மீதோ அல்லது அது தேர்ந்தெடுத்த வேட்பாளர்கள் மீதோ மக்களுக்கு இருந்த விருப்பு அல்லது பிடிப்பு காரணமல்ல என்பது திண்ணம். சில முன்னாள் கூட்டணித் தூண்கள் பழைய பிடிப்புக் காரணமாக சில வேளைகளில் வாக்குப் போட்டிருக்கலாம்.

ஆனால்—

ஆயுதம் ஏந்தாத வேறு மிதவாதக் கட்சி இல்லை என்ற நிலையிலும்—

ஐயோ! பாவம் ஆயுதம் ஏந்திப் பதில் சொல்ல முடியாமல்; பல தரப்பினரிடமிருந்தும் வாங்கிக் கட்டுபவர்கள் என்ற பச்சாத்தாபமும்—

இவர்களை விட்டு விட்டால் வேறு ஆயுதம் தாங்கிய குழுக்கள் முன்னுக்கு வந்து விடும் என்ற பொது மக்களின் பயமும்—

பிரசார விளம்பரங்களில் தந்தை செல்வநாயகம் காட்சியளித்ததும்—

கூட்டணியின் வெற்றிக்குக் காரணங்களாகின.

'வீக்' ஆன வேட்பாளர்கள், போதிய பிரசாரமின்மை, ஆளணி— அம்புகள் இல்லாத வசதிக் குறைவு, தேர்தலில் போட்டியிடுகின்றார்களா என்று கூட மக்களுக்கு சரிவரத் தெரியாத நிலைமை, 'கள்ள வோட்' போட வாய்ப்பு — வசதியின்மை—

இவற்றுக்கு மத்தியில்யாழ். மாநகரசபையில் கூட்டணி வென்றிருப்பதைப் பார்த்தால், சற்று நேரகாலத்தோடு வந்து, பல்வேறு இடங்களிலும் அலுவலகங்களைத் திறந்து, அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் கூட்டணி போட்டியிட்டிருந்தால் மேலும் பல சபைகளை அது கைப்பற்றியிருக்கும் என்று நப்பாசை கொட்டுகின்றனர் கூட்டணி ஆதரவாளர்கள் சிலர்!

கூட்டணி வலி. வடக்குப் பிரதேச சபையையும் கைப்பற்றியது. அதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்று அது தெரிவு செய்த பலமான தலைமை வேட்பாளர் என்றால் அது மிகையில்லை.

அத்தோடு அப்பிரதேசம் கூட்டணியின் பலமான கோட்டையும் கூட.

அத்தகைய வேட்பாளருக்கு எதிராக, அங்குபோய் பிரசாரம் செய்து என்ன பயன் என்று கருதி அங்கு பிரசாரம் செய்யச் செல்லாமல் தாங்கள் ஒதுங்கிக் கொண்டதாகக் கூறினார் மற்றொரு கட்சித் தலைவர்.

★

## அதிரடி அரங்கு

நேற்று முன்தினம் நடந்த உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி யாழ். நகர் உட்பட பல்வேறு இடங்களில் கட்சிகளின் உபயத்தில் சாராய ஆறு பெருக்கெடுத்து ஓடியது யாழ். மக்களுக்குத் தெரிந்ததே.

இது மற்றொரு சாராய சமாச்சாரம்:-

யாழ். உள்ளூராட்சித் தேர்தல்களில் பணியாற்றுவதற்காக தென்னிலங்கையிலிருந்து பல நூற்றுக் கணக்கில் அதிகாரிகள் அழைத்து வரப்பட்டிருந்தனர். கடந்த செவ்வாயும் வியாழனும் அவர்கள் இலங்கை விமானப்படை விமானம் மூலம் இரத்மலானையிலிருந்து பலாலிக்கு கொண்டு வரப்பட்டனர். இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் பணியாற்ற முன்வந்த தென்பகுதி அதிகாரிகளுக்கு ஐயாயிரம் ரூபா முற்பணமும் அரசு வழங்கியிருந்தது.

இவ்வாறு புறப்பட்டு வந்த அதிகாரிகள் தங்கள் பணி 'சிறப்பதற்கு' உதவியாக ஆளுக்கொரு மதுப் புட்டியையும் எடுத்துவர விரும்பினர். யாழ்ப்பாணத்தில் பயப் 'பிராந்தி' இன்றி பணியாற்ற அது உதவும் என்பது அவர்களின் நம்பிக்கை போலும். அத்தோடு தேர்தலை ஒட்டி புதனும் வியாழனும் யாழ்ப்பாணத்தில் மதுபானக் கடைகளுக்கு மூடுவிழா என்பதும் அடுத்த நாள் (நேற்று) ஹஜ்ஜுப் பெருநாளை ஒட்டி மதுபானக் கடைகள் திறக்கப்படமாட்டா என்பதும் கூட அவர்களுக்குத் தெரியும்.

எனவே விமானத்தில் ஏற இரத்மலானைக்கு வந்த அதிகாரிகள் பலரும் கை 'காவலாக' ஆளுக்கொரு போத்தலோடு வந்து சேர்ந்தனர். ஆனால் விமானப்படை விமானத்தில் மதுப்புட்டி கொண்டு செல்ல முடியாது என்று தெரிவித்து அவற்றை அனுமதிக்க விமானப்படை அதிகாரிகள் மறுத்து விட்டனர். தேர்தல் பணிக்கு வந்த அதிகாரிகளுக்கோ குழப்பம். எடுத்து வந்த மதுப்புட்டிகளை விமானத்தில் கொண்டு செல்ல முடியாது விட்டால் இரத்மலானை விமான நிலையத்திலாவது வைத்து விட்டுப் போய், பிறகு வந்து எடுக்கலாம் என்றால் அதற்கும் வசதி இல்லை. வேறு வழி இல்லாததால் தாம் எடுத்து வந்த மதுப்புட்டிகளை வீணாக்க விரும்பாத அதிகாரிகள், விமான நிலையத்திலேயே புட்டிகளை ஒரு கை பார்த்து காலியாக்கினார்கள்.

விளைவு?

விமானம் பலாலியில் வந்து இறங்கியதும் விமானத்திலிருந்து அதிகாரிகளை — நோயாளிகளை அம்புலன்ஸில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வது போல — தூக்கிப் போட்டு கொண்டு செல்ல வேண்டியதாகி விட்டது!

★ ★ ★ ★

யாழ். நகரை அண்டிய ஓர் ஒதுக்குப்புற ஒழுங்கையில் அமைந்திருக்கின்றது அக்கோயில். கோயிலுக்கு முன்னால் ஒரு சிறு கொட்டகை. சன சந்தடியற்ற இடம். யாருக்கு இது வாய்ப்பு என்று நினைக்கின்றீர்கள்? இளம் வட்டங்களுக்குத்தான்; காதல் ஜோடிகளுக்குத்தான்.

சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்து கோயிலுக்கு முன்னால் உள்ள—பஸ் தரிப்பிடம் போன்ற—கொட்டகைக்குள் நின்று மணிக்கணக்காக காதல் ரசம் கொட்டப் பேச்சுகளும் சிணுங்கல்களும். அயலவர்கள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். நாளொரு ஜோடியும் பொழுதொரு வண்ணமாகவும் தினசரி கனி ரசங்களின் படையெடுப்பைத் தாங்க முடியாது தமது பகுதி கிராம சேவை அதிகாரியிடம் முறையிட்டனர். இப்போது அங்கு விளம்பர அறிவித்தல் தொங்க விடப்பட்டுள்ளது.. அதில் எழுதப்பட்டுள்ள வாசகம் இதுதான்:- ''இது காதலர்கள் சந்திக்கும் இடம் அல்ல; மீறி நடப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். — கிராம சேவையாளர்'' — இவ்வாறு தெரிவித்து கிராம சேவையாளரின் பிரிவு இலக்கமும் குறிப்பிடப்பட்டு ஒரு விளம்பரப் பலகை அந்தக் கொட்டகையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது!

★ ★ ★ ★

யாழ். தேர்தலில் வாக்குகளை அள்ளிக் குவிப்பதற்காக சில இடங்களில் 'சீல்' உடைக்காத 'திறம்' சாராயம் விநியோகித்தார்கள்; பெருங்குடி மக்களுக்கு பேருவகை பெருக்கெடுத்து ஓடியதை தேர்தல் தினத்துக்கு முதல் நாளில் இருந்தே யாழ். நகரில் சர்வ சாதாரணமாகக் காண முடிந்தது.

சில இடங்களில் 'கள்ள வோட்' போடுவதற்கு வசதியாக வாக்காளர் அட்டைகளை சேகரிக்கும் பணியும் மும்முரமாக நடந்தது. ஒரு வாக்காளர் அட்டைக்கு ஆயிரம் ரூபா என்ற அடிப்படையிலும் 'தான தருமம்' செய்யப்பட்டது.

ஒரு 'நொந்த' கட்சியின் அலுவலகத்தில் கிடைத்த தகவல் இது. தேர்தல் செலவுக்கே அங்கு, இங்கு என்று பணத்தைச் சுரண்டி செலவழித்த கட்சி அது என்பதால் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்த கட்சித் தொண்டர்களைக் காயவைத்து விட்டது. யாழ்ப்பாணத்தைப் பற்றி சரியாகத் தெரியாமல் கட்சி அலுவலகத்தில் வெறுத்துப் போய் கருவாடாய்க் கிடந்த அந்தத் தொண்டர்களுக்கு, மற்றொரு கட்சியினர் வாக்காளர் அட்டைகளுக்குப் பணம் வினியோகிக்கும் தகவல்கிடைத்து விட்டது. அவ்வளவுதான்!

வெளியூரில் இருந்து வந்த அடிமட்டத் தொண்டர்கள் அவர்கள் என்பதால் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு அவர்களைத் தெரியவில்லை. அதைப் பயன்படுத்திக் கொண்டு — ஏனைய சில இடங்களில் தாங்கள் சேகரித்த வாக்காளர் அட்டைகளுடன் சம்பந்தப்பட்ட பணக்காரக் கட்சியின் அலுவலகத்தில் அப்பாவிப் பொது ஜனம்போல் போய்க் குதித்தனர்; அந்தக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் போல் காட்டிக் கொண்டு, வாக்காளர் அட்டைக்குரிய சன்மானத்தையும் அறவிட்டுக்கொண்டு, நைஸாக தங்கள் கட்சி அலுவலகத்துக்குள் வந்து பதுங்கிக் கொண்டார்கள். ஐந்து வாக்காளர் அட்டைகளை ஒப்படைத்து தாம் பெற்றுக்கொண்ட ஐந்து மயில் தாள்களைக்காட்டி தமது வீரத்தை பிரபலாபித்துக் கொண்டார் அத் தொண்டர்களில் ஒருவர். வாழ்க அவரின் கட்சி விசுவாசம்!

- மின்னல் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னகுளத்தில் காணாமற்போன

# 5 படையினர் சடலங்கள் எலும்புக்கூடுகளாக மீட்பு

வவுனியா, ஜன. 31

புளியங்குளத்துக்கு வட-மேற்கே மன்னகுளம் பகுதி முகாம் மீது கடந்த டிசம்பர் 6 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் போது காணாமற் போனதாகக் கருதப்பட்ட அதிரடிப்படை கொமாண்டோக்களில் 5 பேரின் சடலங்களை அப்பகுதியில் இருந்து படையினர் மீட்டுள்ளனர்.

எலும்புக் கூடுகளாக கைப்பற்றப்பட்ட அச்சடலங்கள் பின்னர் அங்கே புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21-3)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31

கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் கூட்டம் இன்றுகாலை 10 மணிக்கு யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள பொஸ்கோ கல்வி நிலையத்தில் இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டம் சங்க அலுவலகத்தில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (உ-3)

## கொழும்பு பாடசாலைகள் மூடப்படும்

சுதந்திர பொன்விழாவைப வங்கள் இடம்பெற இருப்பதை முன்னிட்டு கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சகல பாடசாலைகளும் அடுத்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் மூடப்பட்டிருக்கும் என்று கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-8)

**நாளை**

**தை 19**

ஞாயிற்றுக்கிழமை

திதி: பஞ்சமி பின்இரவு 2.21 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி முன்இரவு 10 20 வரை.

சுபநேரம்: 9.56-11.06

ராகுகாலம் 5 06 6 36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## குடும்பஸ்தர் வீடு திரும்பவில்லை

கடந்த புதனன்று ஆடுகள் மேய்ப்பதற்காக சென்ற நபர் நேற்று முன்தினம் நண்பகல் வரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர் தம்முடன் கூட்டிச் சென்ற ஆடுகள் மாலையாகியதும் வீடு திரும்பியுள்ளன.

முகமாலை பொந்தர் குடியிருப்பைச் சேர்ந்த கதிரமலை (வயது 40) என்பவரே வீடு திரும்பவில்லை எனத் தெரியவருகிறது. (ஐ-117)

## புலிகளுடன் பேச்சு இல்லை

லண்டன், ஜன. 31

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் மேற்கொள்ளப்படமாட்டாது என நீதி மற்றும் அரசமைப்பு அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பி.பி.சியின் உலகசேவைக்கு வழங்கிப் பேட்டியில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகை மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலால் பொதுமக்களிடையே உருவான கடும் எதிர்ப்பே புலிகள் அமைப்பைத் தடைசெய்யப் பிரதான காரணமாக அமைந்தது என்றும் அமைச்சர் தெரிவித்தார் (ஐ-10)

# நல்லூர்ப் பகுதிக்கு புதிய ஜெனரேற்றர்

திருநெல்வேலி ஜன. 31

நல்லூர்ப் பகுதி மின் விநியோகத்தை சீர் செய்வதற்காக இவ் வாரம் இலங்கை மின்சார சபையினால் 250 கே. வி. வலுவுள்ள புதிய ஜெனரேற்றர் பொருத்தப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இங்கு 100 கே. வி. வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்றே இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. இதனை அடுத்து இப் பகுதிகளில் மின் விநியோகம் ஓரளவு சீரடைந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## சம்பள நிலுவை

பனை பனைநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு புதிய சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம் ஆறு மாத சம்பள நிலுவை அண்மையில் வழங்கப்பட்டதாக சங்கப் பொது முகாமையாளர் க. கணேசலிங்கம் தெரிவித்தார்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 29 | 29 |
| — | — |
| 04 | 12 |
| — | — |
| 1940 | 1997 |

**திருமதி கனகமணி மருதலிங்கம்**

எம்மையெல்லாம் அன்புடன் வழிநடத்தி உறுதுணையாயிருந்த அன்புத் தெய்வம் மறைந்த 31 ஆம் நாள் வீட்டுக் கிருத்திகை வைபவம் 31-1-98 இன்று சனிக்கிழமை நடைபெற இருப்பதால், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் இன்றைய மதிய போசன வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள் மருமக்கள்,

கனகசபை வீதி,
மானிப்பாய்.

(சி/2759)


# தலதா மாளிகை...

(6 ஆம் பக்கத் தொடர்)

மட்டும் தவறவில்லை என்பதை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் இராஜினாமா வரை சென்றுள்ள நிலைமை ஐயந்திரிபற எடுத்துக் காட்டுகின்றது.

தலதாமாளிகைத் தாக்குதலின் விளைவுகள் தொடர்பான நிலைப்பாட்டில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சிங்கள மதகுருமாரின் பக்கத்தில்—தமது ஒன்றுவிட்ட சகோதரரும், ஜனாதிபதியின் மாமனாரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தைக்கு எதிர்ப்புறத்தில்—நிற்பதாகக் கூறப்படுகின்றது. அதன் விளைவே ரத்வத்தையின் இராஜினாமா நாடகம் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தலதாமாளிகைத் தாக்குதல்களை அடுத்து புலிகளைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக அரசு அறிவித்திருக்கின்றது. ஆனால் அது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் என்னவென்று இக்கட்டுரை வரையப்படும் வரை இன்னும் தெளிவாகவில்லை; வெளியாகவில்லை.

என்றாலும் ஒன்று மட்டும் நிச்சயம். ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் செயற்படும் புலிகள் இயக்கத்தையும் அதன் தலைமைத்துவத்தையும் இந்தத் தடை உத்தரவு உடனடியாகப் பாதிக்கப் போவதில்லை, அவர்களைச் செயலிழக்கச் செய்யப் போவதுமில்லை.

ஆனால் இந்த அறிவிப்பை அடுத்து, புலிகள் தொடர்பாக வரக்கூடிய சட்ட ஏற்பாடுகள்—

ஆழ்கடலுக்கும், பிசாசுக்கும் மத்தியில் நின்று கத்தி மீது நடப்பது போலச் செயற்பட்டு வரும் பத்திரிகைகளின் கைகளுக்குக் கட்டுப்போட்டு அவற்றைச் சிக்கலில்கொண்டு போய் மாட்ட வைப்பதாக அமையக்கூடும் என்று எச்சரிக்கின்றார் சட்டம் தெரிந்த மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.

சட்ட ஏற்பாடுகள் என்ன? எது? — என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


★ ★ ★

புலிகளின் ஆட்லறிகள், மோட்டார்கள், றொக்கட்டுகள் போன்றவற்றை ஏவும் தளங்களை துல்லியமாகக் கண்டு பிடித்துக் காட்டக் கூடிய ராடர்களை ஸ்ரீலங்காவுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா முன்வந்திருப்பது —

ஸ்ரீலங்கா அரசு — புலிகள் யுத்தத்தில் ஸ்ரீலங்கா அரசுப் பக்கம் அமெரிக்கா முற்றாகச் சாய்ந்துவிட்டது என்பதை ஊர்ஜிதப்படுத்துகின்றது.

இந்த ராடர் ஒன்றின் விலை சுமார் 77கோடி ரூபா. எத்தனை ராடர்களை ஸ்ரீலங்கா வாங்கப்போகின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால் அரசப் படைகளுக்கு இந்த ராடர் கருவி கிட்டுவது, வன்னி யுத்த முனையில் புலிகளுக்குப் பெரும் பாதிப்பையும் — பின்



விளைவுகளையும் — தருவதாக அமையும் என்று இராணுவ விமர்சகர்கள் கூறுவதில் அர்த்தம் அதிகம் உண்டு.

இடத்துக்கு இடம் நகர்த்தக்கூடிய PTQ — 36 ரகத்தைச் சேர்ந்த ராடரையே ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்கின்றது.

இது தவிர, றொக்கட், பீரங்கி குண்டுச் சிதறல்களை எதிர்கொள்ளக் கூடிய — 18 ஆயிரத்து ஐந்நூறு எண்ணிக்கை கொண்ட—ஜக்கெட்டுக்களை சுமார் இருபது கோடி எழுபது லட்சம் ரூபா செலவில் பிரிட்டனிடமிருந்து பெறுவதற்கும் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. ராடர் மற்றும் ஜக்கெட்டுகளைக் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீலங்கா பாதுகாப்புப் பிரிவு காட்டும் முனைப்பு, புலிகளின் பீரங்கி, றொக்கட், மோட்டார் தாக்குதல்கள் தொடர்பாக தீர்க்கமான நடவடிக்கை எடுக்க ஸ்ரீலங்காத் தரப்பு முடிவு செய்திருப்பதையே காட்டுகின்றது.

இதன் விளைவு என்ன? புலிகள் எடுக்கப் போகின்ற பதில் நடவடிக்கைகள் என்ன? — போன்றவற்றைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

வன்னிக் காட்டில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காக பல கோடி ரூபா செலவில் மோட்டார்களை அரசுத் தரப்பு கொள்வனவு செய்து களத்துக்குக் கொண்டு சென்றது. அந்த நிலைகளைத் தாக்கி, அந்த மோட்டார்களையே கைப்பற்றி அரசுப் படைகளுக்கு எதிராக அவற்றைத் திருப்பி விட்டார்கள் புலிகள்.

இப்போது புலிகளைத் தாக்குவதற்காக பல கோடி ரூபா செலவில் தான் வாங்கிய மோட்டார்களை அழிப்பதற்கு மேலும் பலகோடி ரூபா செலவில் ராடர்களைக் கொள்வனவு செய்கின்றது அரசுத் தரப்பு.

அதற்கு புலிகள் எடுக்கப் போகும் பதில் நடவடிக்கை என்ன? தமது மோட்டார்களுக்கு பதிலீடு கொடுப்பார்களா? காத்திருந்தால் தெரியவரும்.

★


# தவறிவிட்டது

திரு. த. ஞானலிங்கம் ஆகிய எனது மூக்குக் கண்ணாடி 30-01-98 அன்று நாயன்மார்கட்டுச் சந்திக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

இல. 6, சங்கிலியன் வீதி, நல்லூர்.

(53004)

# அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரண்டாம் வருட "A" பிரிவு மாணவர்களுக்கான கலந்துரையாடல் மாணவர் பொது அறையில் காலை 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது. மாணவர்கள் தவறாது சமூகம் தரவும்.

இரண்டாம் வருட மாணவர் பிரதிநிதி,
விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(53008)

# புலமைப் பரிசில் - 1998

மாதிரிப்பரீட்சை 11 இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்:

★ வி. ஜனனி ]— 174 புள்ளி
★ க. பூர்ணிமா
★ கே. துளசிகா — 171 புள்ளி
★ சி. கஸ்தூரி — 167 புள்ளி
★ கு சாளினி — 161 புள்ளி
★ த. பிரியந்தன் ]— 158 புள்ளி
★ ஞா. சுகவரதா

வெளி மாணவர்களில்

★ சோ. ஜெசிந் — 169 புள்ளி
★ இ. ஞானசக்தி — 165 புள்ளி
★ கி. யாதவராஜா — 158 புள்ளி

அடுத்த பரீட்சை 01-02-98 ஞாயிறு காலை 8-00 மணி

**நாவலர் கல்வி நிலையம்**

நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(53006)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசு சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டம் நாட்டில் குழப்பத்தை உருவாக்கும்

## ஐ. தே. கட்சி நிராகரித்து அறிக்கை

கொழும்பு, ஜன. 31

தத்தமக்குத் தனித்துவமான கலாசாரமும், வரலாறும் கொண்ட பல இனங்களைக் கொண்டது எமது நாடு. எம்மிடையே உள்ள சிறந்தவற்றை ஒன்று சேர்ப்பதே நல்லது. இந்த இலக்கை அடைவதற்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து கொள்வது மட்டும் போதாது; எல்லாச் சமூகங்களும் தமக்குரிய பங்கினை அனுபவிக்கும் விதத்தில் மத்தியிலும் அதிகாரம் பகிரப்பட வேண்டும்:

அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் திட்டத்தை நிராகரித்து, உத்தியோக பூர்வமாக நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வுத் திட்டம் வடக்கு—கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையமாட்டாது. இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் அத்தகைய தீர்வு பெரும் குழப்பத்தையே உண்டாக்கும் — என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையில் அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரே அணியில் நின்று செயற்படுவது என்று செய்யப்பட்ட இணக்கத்துக்கு அரசு மதிப்பளிக்கவில்லை என்றும்—

இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்துக்கு அப்பாற்பட்டு அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை கொண்டுவர அரசாங்கம் சமிக்ஞை காட்டியுள்ளது. நாம் அதனைக் கடுமையாக எதிர்க்கின்றோம். அத்தகைய முயற்சியை எதிர்க்கும் ஏனைய சக்திகளுடன் ஒன்று சேர்ந்து அதனைத் தடுக்க எமது முழு சக்தியையும் பிரயோகிப்போம் என்றும் — அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுயோசனை வருமாறு:-

★ சிறுபான்மையினருக்கு மூன்றில் ஒரு பகுதிக்குக் குறையாத பிரதிநிதித்துவம் கொண்ட இரண்டாவது சபையை அமைத்தல்.

★ மத்திய அமைச்சரவையில் சிறுபான்மையினருக்கு போதிய அளவு பிரதிநிதித்துவம்.

★ சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஜனாதிபதிக்கு மேலதிகமாக இரண்டு உப ஜனாதிபதி பதவிகளை உருவாக்குதல்.

★ தேசிய மட்ட அமைச்சுகளில் சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் நிர்வாகக் குழு முறையை நடைமுறைக்குக் கொண்டு வருதல். (அ)

# பிரிட்டனிலும் புலிகளை தடை செய்யக் கோரிக்கை

கொழும்பு, ஜன. 31

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்யுமாறு அங்கு விஜயம் செய்துள்ள நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கோரியுள்ளார்.

அங்கு அவர் சந்தித்துப் பேச்சு நடத்திய உயர் மட்டத் தலைவர்களிடம் இது குறித்து கோரிக்கை விடுத்துடன் இலங்கையில் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்டமை குறித்தும் எடுத்து விளக்கியுள்ளார் என்று கூறப்பட்டது. (உ-3)

# இளவரசர் சாள்ஸின் இலங்கை விஜயம் உறுதி!

## அமைச்சர் சமரவீர தகவல்

கொழும்பு, ஜன. 31

எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறும் சுதந்திரதின பொன் விழா நிகழ்ச்சிகளில் பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் கலந்து கொள்வது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தபால், தொலைத்தொடர்பு தகவற்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்று நடத்த வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இளவரசர் சாள்ஸின் வருகைக்கான முன்னேற்பாடுகளைக் கவனிக்க அவரின் மெய்ப்பாதுகாவலர்களும் ஸ்கொட்லன்யாட் பொலீஸாரும் இலங்கை வந்துள்ளனர். (இ-10-3)

## மூவர் கைது

கண்டி தலதா மாளிகை மீதான குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் மூன்று பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தேக நபர்களை விசாரணை செய்ததன் மூலம் குண்டுவெடிப்புப் பற்றிய முக்கியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்ததாகக் கண்டிப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-7)

## தாக்குதலில் பொலீஸார் பலி!

அம்பாறை மாவட்டம் களுவாஞ்சிக்குடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 7.20 மணிக்கு விடுதலைப்புலிகளின் பிஸ்டல்குழு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் உயிரிழந்ததாக பலாலி இராணுவ தலைமையக செய்திக் குறிப்பு தெரிவித்தது

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 31

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் பட்டமேற்கல்வி டிப்ளோமா, சட்டத்துறையியல் ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் யாழ். மத்திய கல்லூரியிலும், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (ஜ-7)

### தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

டோம். இலங்கை அரசு இத் தேர்தல் மூலம் யாழ். குடா நாட்டு மக்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களை நிராகரித்துள்ளனர் என்றும், தொடர்ந்து நிராகரிப்பார்கள் என்றும் ஒரு நிலையை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டவே மிதவாத கட்சியினருக்காக இச்சதியை செய்துமுடித்தது.

ஐந்து நாளில், ஐந்து பேர் வந்து, ஐந்து சதமும் செலவு செய்யாது, இவ்விதம் முதன்மை இடத்தை பிடித்து விடுவதென்பது எந்த வகையிலும் சாத்தியமாகாததாகும்.

எப்பேர்ப்பட்ட முறையிலாவது தெரிவு செய்யப்பட்டிருக்கும் கூட்டணியினர் உட்பட ஏனைய அனைத்துக் கட்சியினரும் இன்றைய யாழ். குடாநாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டு — பொறாமையின்றி — போட்டியுடன் செயல்படவேண்டும் என்றும்—

அதற்கு எமது தரப்பில் அனைத்து ஒத்துழைப்புகளும் இடைக்கும் எனவும் —

தெரிவித்துக் சொல்வதுடன் எமது தேர்தல் கால பிரசாரத்தின்போது நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை எமது இயக்கசக்திக்கு உட்பட்டவகையில் செய்து தருவோம் என்றும் உறுதி கூறுகின்றோம் —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### நன்றி...

(முதலாம் பக்கத் தொடர்)

வடக்கு பிரதேச சபைப் பகுதிக்குரிய வாக்காளர்களுக்கு கூட்டணி தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

யாழ். நகரத்தை நவீன நகருக்குரிய பழைய சிறப்பியல்புகளுக்கு மீள்விக்கச் செய்வதற்கான திசையில் பணியாற்றுவோம் என்று யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் வடக்கு மக்களுக்கு நாம் உறுதி கூறுகின்றோம்,

மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யக் கூடியதாக, தமிழர் பிரச்சினைக்கு சமாதான — நிரந்தர — தீர்வு இட்டுவதற்கு தொடர்ந்து நாம் பணியாற்றுவோம்

வடக்கின் உள்ளூராட்சி நிர்வாகம் தொடர்பான நீண்ட கால வரலாற்றில் யாழ்ப்பாணத்தின் மேயராகத் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண்மணி திருமதி சரோஜினி யோகேஸ்வரன் என்பதையும் எமது கட்சி சுட்டிக்காட்ட விரும்புகின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காலியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

படும் உப்புல்சாந்தஎன்பவரின் வீட்டுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்திய கிராமவாசிகள் அவரின் வீட்டை தீயிட்டுக் கொளுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நடந்த பகுதியில் நேற்று பொலீஸ் சோதனை நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. (உ-21-3)


**விற்பனைக்கு**

வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன-புதிய

**SANYO -3 LCP COLOUR PROJECTOR**

உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

திரு. M சூரி

114, ஏ.வி. றோட்,

அரியாலை.

யாழ்ப்பாணம்.

(52930)


### ஆயுதம்...

(முதலாம் பக்கத்தொடர்)

உள்ளனர். அதில் ஏறத்தாழ ஐம்பது வீதமானோர் வாக்களித்துள்ளனர்.

தேர்தல் அறிவித்த காலத்தில் இருந்தே தேர்தல் நடக்குமா? நடக்காதா? மக்கள் வாக்களிப்பார்களா? என்ற கேள்விகளே பரவலாக இருந்தன. ஆனால் ஐம்பது வீத மக்கள் வாக்களித்தமை ஜனநாயகத்தின் மேல் மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகின்றது.

அளிக்கப்பட்ட வாக்குகளில் ஈ. பி. ஆர். எல். எவ்விற்கு பதினைந்து வீதமான வாக்குகள் கிடைத்ததும்—

தமிழர் விடுதலைக் கூட்டணி எந்த வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் யாழ். மாநகர சபையையும், வலி. வடக்குப் பிரதேச சபையையும் தமதாக்கிக் கொண்டதும்—

மக்கள் ஆயுதக் கலாசார மற்ற ஓர் அரசியலையே விரும்புகின்றார்கள் என்பதையே கோடிட்டுக் காட்டுகின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியும் ஆயுதமற்ற ஒரு ஜனநாயக— அரசியலையே எமது உடனடித் தேவையென வலியுறுத்தி வந்ததையும் நீங்கள் அறிவீர்கள். இவ்வகையில் இது எமது நிலைப்பாட்டுக்கு கிடைத்த வெற்றியெனவே நாம் கருதுகின்றோம்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், கௌரவமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கும், ஐக்கியப்பட்ட தலைமைத்துவம் ஒன்றைக் கட்டி எழுப்புவதில் ஈ. பி. ஆர். எல். எவ். தீவிரமாகப் பாடுபடும் என்பதை மீண்டும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

பல மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்ட கவர்ச்சிகரமான இத் தேர்தலில் எமது கொள்கைகளையும், கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டு எமக்காதரவளித்த சகல தமிழ் மக்களுக்கும் எமது அன்பு கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

வும் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்றும் —

கப்பல் புறப்படுவது தொடர்பான தகவலை பாதுகாப்பு அமைச்சுக்கு தெரியப்படுத்தியேசேவையை ஆரம்பிக்க வேண்டும் என்றும்—

பாதுகாப்பு அமைச்சு அந்த நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளது.

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் சமயம் கப்பல்களுக்கு கடற்படை எந்தவிதப் பாதுகாப்பையும் வழங்காது என்றும் —

சொந்தப் பாதுகாப்புடனேயே சேவையை மேற்கொள்ள வேண்டும் என்றும்—

அந்த அமைப்புக்களுக்கு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-3)

### தள்ளாடி...

(முதலாம் பக்கத் தொடர்)

இச் சம்பவம் குறித்து பொலீஸார் மன்னார் நீதிவான் எஸ் இளஞ்செழியனுக்கு தகவல் கொடுத்தனர்.

நேரடியாக வந்து சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட நீதிவான் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து கைதிகள் மற்றும் பொறுப்பான இராணுவ அதிகாரிகள் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார். (உ-164 3)

### ஈழத்தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

வண. ஜோசப் சந்திரகாந்தன், பேராசிரியர் ஏ. ஜே வில்சன், அமெரிக்க விஸ்கான்சின் பல்கலைக்கழகப் பேராசிரியர் மனோகரன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர்.

பின்வரும் தலைப்புக்களில் கருத்துரைகள் வழங்கப்படவிருக்கின்றன.

★ சுயநிர்ணய உரிமையும் இலங்கைத் தமிழர்களுக்கான தேசமும்.

★ இலங்கைத் தமிழினப் படுகொலையும் சர்வதேசப் பதிலும்.

★ ஈழத் தமிழ்த் தேசியம்.

★ மனித உரிமைகளும் மனிதப்பொறுப்புக்களும்.

★ தமிழ்ச் சமுதாய ஆளுமையும் இன்றைய அவலப் பாடும்.

★ அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் துரோகம்.

கனடாயாப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றமும் ஏனைய சில அமைப்புக்களும் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளன. கலாநிதி வண. ஜோசப் சந்திரகாந்தன் இக் கருத்தரங்குக்கான சகல ஏற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருந்து செயற்படுகின்றார். (உ-7)

### குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினரின் ஐந்து சிறிய படகுகள் அழிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

25 குதிரைச் சக்தி வலுவுள்ள படகு இன்ஜின், 5 ஆயிரம் நடுத்தரவைகள், சார்ஜ் டோர்ச், கே 400 ரகக் குண்டுகள், சீருடைகள் ஆகியன தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும் —

இத்தாக்குதலில் தமது தரப்பில் கப்டன் பிரணவன் அல்லது மோகன் (செல்லைத்துரை மோகன் — யாழ்ப்பாணம்) களப்பலியானதாகவும் —

புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது. (உ-164-3)

### கொக்குவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

றைக் கண்டு பிடித்தனர்.

பதுங்குகுழியின் வாசலுக்கு மேலாக கட்டில் ஒன்றை வைத்து வாசல் மறைக்கப்பட்டிருந்தது. அங்கு புலிகள் ஒளித்திருக்கவில்லை என வீட்டில் இருந்தோர் தெரிவித்தனர். அந்த வாசலை படையினர் திறக்க முற்பட்ட போது உள்ளேயிருந்த புலிகள் படையினரை நோக்கிச் சுடமுற்பட்டனர். படையினர் துரிதமாகச் செயற்பட்டு உள்ளேயிருந்த நான்கு புலிகளையும் சுட்டுக் கொன்றனர், அந்த இடத்திலிருந்து பின்வரும் பொருள்கள் படையினரால் கைப்பற்றப்பட்டன.

★ ரைபிள்கள் — இரண்டு
★ கிரனேட்டுகள் — 18
★ வானொலி செட் — 01
★ மகஸின் — ஐந்து
★ ரவைகள் — நூறு
★ கிரனேட் பெல்ட் — 2
★ கிளைமோர் கண்ணி — 1
★ சில துண்டுப்பிரசுரங்கள்
★ மருத்துவக் கருவிகள் — ஐந்து

உயிரிழந்த புலிகள் வெண்ணிலவன், ஆனந்தன், கவி, புவனன். இந்த நான்கு புலிகளும் கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் செயற்பட்டு சிவில் நிர்வாகத்தையும் உள்ளூராட்சித் தேர்தல்களையும் குழப்பி வந்தனர் என்று இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம்—

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் லோட்டஸ் வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவித்து நான்கு இளைஞர்களின் சடலங்கள் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. (உ-ரி-8)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள [illegible] 31-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி சஞ்சிகை

31 – 01 – 1998 சனிக்கிழமை




ராகம்ஸ் பட்டுச்சோலை

யாழ் நகரில் தரமான புடைவைகளுக்குத் தலை சிறந்து விளங்குவது; தரமான திருமணப் பட்டுப் புடைவைகளுக்கு தன்னிகரில்லாத ஸ்தாபனம்:

ராகம்ஸ் பட்டுச் சோலை

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி–2737)


## கருத்துக் கலசம்

மயூரா

### பாலர் கல்வி

இன்றைய குழந்தைகள் நாளைய பிரஜைகள்; நாளைய தலைவர்கள். அவர்கள் நற்பிரசைகளாக, நல்லறிவு உள்ளவர்களாக, நல்லொழுக்கம் உடையவர்களாக வளர்ந்தாலே — வளர்க்கப்பட்டாலே — நாடு செழிப்படையும்; முன்னேறும். அவர்களுக்கு அடுத்த சந்ததியும் அவர்களைப் பின்பற்றி வாழையடி வாழையாக நற்சமுகங்கள் உருவாகும்.

முன்னர் குரு–சிஷ்ய கல்வி முறை இருந்த வேளை, ஒரு குழந்தையின் கல்வி, நல்லொழுக்கம், வாழ்க்கை முறை யாவற்றையும் புகட்டும், வளர்க்கும் பொறுப்பு குருவையே சார்ந்திருந்தது.

இப்போது கல்வி பல நிலைப்பட்டது; பல குருக்கள் வழி வருவதாக மாறிவிட்டது.

இதில் முதலாவது படி பாலர் கல்வி அல்லது முன்பள்ளிக் கல்வி. இதுவே குழந்தையை நல்லறிவு, நற்பழக்கம் உடைய நற்பிரஜை ஆக்குவதற்கான அத்திவாரம். அத்திவாரம் உரிய முறையில், தக்க தரத்துடன் அமைக்கப்படா விட்டால் கட்டடம் ஆட்டம் கண்டுவிடும்.

ஆனால் எமது பிரதேசத்தில் பாலர் கல்வியில். முன்பள்ளிக் கல்வியில் உரிய கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை. பாலர் பாடசாலைகளை நடத்துவதற்கான அடிப்படை வசதிகள், போதனை முறைகள், பாட அல்லது பயிற்சி விதானம், பொழுது போக்கு வசதிகள், பிள்ளையின் உள்ளார்ந்த திறமைகளை இனங்காணுதல், அவற்றை வெளிக்கொணர்தல், நல்லொழுக்க போதனை என்பன குறித்த, ஒழுங்கு சீரான அமைப்பு முறைகள், விதிகள் கடைப் பிடிக்கப்படுவதாக இல்லை.

பாலர் பாடசாலைகளைக் கண்காணிக்கவும் அவற்றுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும், ஆசிரியர்களை நிறைவான பயிற்சிக்கு உட்படுத்தவும் பூரணமான, ஸ்தாபன ரீதியான கட்டமைப்பு எதுவும் இல்லை.

பாலர் பாடசாலைகள் நடைபெறுகின்றன. வீட்டில் சின்னஞ்சிறுசுகள் குழப்படி செய்யாமல், தொல்லை கொடுக்காமல் அங்கு போய் வரட்டும் என்று பெற்றோர்களும் குழந்தைகளை பாலர் பாடசாலைகளுக்கு அனுப்புகிறார்கள். அதுவே இன்றைய கோலம்.

குழந்தைப் பருவம் மிகவும் பசுமையானது; பசுந்தளிர் போன்றது. குழந்தை, உலகத்தை எட்டிப் பார்த்துப் புதிதாக பல விடயங்களை அறிந்து இரசிக்கும் காலம். அதன் உள விருத்திக்குப் புத்துணர்ச்சி ஊட்ட வேண்டிய காலம். அதன் உளவியல் தேவைகளை இனங்கண்டு, அதற்கேற்ற வகையில் வழி நடத்த வேண்டிய காலம்.

இதற்கான விசேட பயிற்சியும் ஆற்றலும் உள்ளவர்களே பாலர் வகுப்பு ஆசிரியர்களாகப் பணியாற்றத் தகுதி உடையோராவர்.

பாலர் கல்வி ஒரு சீரமைக்கப் படாவிடில் நற்பிரசைகளை உருவாக்குவதுகடினமானகாரியமாகிவிடும். சமூக நலனில் அக்கறை உள்ளோர் கவனம் எடுக்க வேண்டிய துறை இது.

# பாழ் கடல் ஆகிறது நமது 'ஆழ் கடல்'!

வேறு எந்த கோளிலும் இல்லாத நீர்வசதியைப் பெற்றிருக்கும் பூமியின் நீர்ப் பரப்பு, சிறிது சிறிதாக நச்சடைந்து வருகிறது. தினந்தோறும் சில லட்சம் கோடி தொன் கழிவுகள் கடலில் கலக்கின்றன. இதன் விளைவாக கடல் நீரின் தன்மை மாறி வருகிறது. ஒரு கன றர் மீற்றர் நீரில் இருக்க வேண்டிய ஒட்ஸிஜன். ஹைட்ரஜன், குளோரின், சோடியம், மக்னீஷியம், சல்பர் கால்ஷியம், பொட்டாஷியம், ப்ரோமைன், கார்பன், ட்ரான்ஷியம், சிலிக்கான், போரான், போன்றவற்றின் அளவு இனி கனவாய்ப் போகும். கடல் வாழ் உயிரினங்கள், நீர் மாசுகளால் கடுமையாகப் பாதிக்கப்படுவதால், சில வகை உயிரினங்களை இனி பாடப் புத்தகத்தில் மட்டுமே பார்க்க முடியும் என்ற நிலை ஏற்படலாம்.

உணவுக்காகவும் பிற உபயோகங்களுக்காகவும் ஷார்க்லினி, காட்லினி, சீல், திமிங்கிலம், டொல்பின், டுகாங்ஸ், நண்டு, ஆமை, முதலைகள் என்று வகை தொகை இல்லாமல் உயிரினங்களைக் கொல்லும் மனிதன் நீர்ப்பரப்பின் மிகப் பெரிய எதிரியாய் மாறி வருவதே அச்சமூட்டும் உண்மை.

கடல்களில் கலக்கும் கழிவுகளில் 90 வீதம் நதிகள் மூலமாகவும், 10 வீதம் காற்று மற்றும் மழை, நிலநடுக்கம் போன்றவையாலும் கலக்கின்றன. அத்துடன் சமீப காலத்தில் ஏற்பட்ட சரக்குக் கப்பல் விபத்துகளால் பல லட்சம் தொன் கணக்கில் மசகு எண்ணெய் மற்றும் இரசாயனப் பொருள்கள் கடலில் கலந்துவிட்டன.

நுளம்பு மற்றும் பூச்சிகளைக் கொல்ல பயன்படுத்தப்படும் டி. டி. ரி., காகிதக் கூழ், நீரைத் தூய்மையாக்க உபயோகப்படும் குளோரிக், பி.எச்.சி, ஆல்ட்ரின், டிரை ஆல்ட்ரின் போன்ற பல்வேறு மருந்துகள் கடல் மாசுபடுவதற்கு காரணங்களாக உள்ளன. ஆனால், இவை எல்லாவற்றையும் விட பேராபத்தானது 'பாப்' (P. O. P.) தான். 'பெர்சிஸ்டெண்ட்' ஆர்கானிக் பொலியூடென்ட்ஸ்' என்றழைக்கப்படும் இந்த இரசாயனக்கழிவு பயங்கரமானது. 'கரி–பாக்' (Carry Bag) என்றழைக்கப்படும் பொலிதீன் பைகளும் இவ்வகையைச் சார்ந்தவையே.

'ஐக்கிய நாடுகள் சூழல்' திட்டம் (U.N.E.P.) அமைப்பைச் சேர்ந்தோர் சமீபத்தில் அபாயகரமான 12 வகை 'பாப்' களை வகைப்படுத்தினர். இவற்றைத் தயாரிக்க, பயன்படுத்த தடை போட நினைத்தாலும் மாற்று வழி கண்டுபிடிக்கப்படாததால் அந்த எண்ணத்தைத் தள்ளிப்போட வேண்டி வந்தது.

கடல் நீர் மாசுபடுவதால் உருவாகும் ஆபத்து கடலோடு நின்றுவிடுவதில்லை. அது பெரும் வளையம் போன்றது. கடல் மாசுபட்டால் அதற்கு முதல் பலியாவது மீன் இனம். அதற்கு அடுத்த பலி, கடல் உயிரினங்களை உணவாகக் கொள்ளும் மனிதர்கள். அத்துடன் ஆவியாகும் கடல் நீர் மேகமாய் மாறி மழை பொழியும் போது, நீர் நிலைகளும், வேளாண் நிலம் மற்றும் பயிர்கள், மனிதர்கள் என்று பாதிப்பு ஏற்படும் சாத்தியக் கூறுகள் உண்டு. உலகின் 60 சதவிகிதம் பேர் கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நீர் மாசுபடுவதால், நரம்பு மண்டலம் சம்பந்தமான நோய்த் தாக்குதல்கள் அதிகரிக்கும். தோல் நோய் மற்றும் புற்றுநோய்களும் ஏற்படும்.

### தாய்ப்பாலில் குளோரின்

கடலோரப் பகுதிகளில் வசிப்போரை ஆய்வு செய்ததில் தாய்ப்பாலில் குளோரின் கலந்திருப்பது தெரியவந்தது. இது தாய்மைகளின் வளர்ச்சியைப் பெருமளவு பாதிக்கும்.

பெரு, சிலி, வங்கதேசம், இந்தியா மற்றும் ஆசியாவின் வெப்ப மண்டலப் பகுதிகளில் உள்ள கடலோரப் பகுதிகளில் 'பாதோஜென் மைக்ரோ ஆர்கானிஜென்ஸ்' போன்ற இரசாயனப் பொருள்களால் காலரா போன்ற தொற்று நோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் கடற் பரப்புகளில் நிலைமை படுமோசமானதாக இருக்கிறது. உலக அளவில் நதி நீருடன் ஒப்பிட்டால் இந்திய நதிகள் வெறும் 5 சதவிகித நீர் கொண்டவை. ஆனால் இந்த நதிகள் மூலமாய் கடலில் கலக்கும் கழிவுகளோ 35 சதவிகிதம்.

இந்திய நதிகளில் சுரங்கக் கழிவு நீர் குழாய்கள் மூலம் கழிவு நீர் கடலில் சேர்க்கப்படுகிறது. இப்படி நதிகள் மூலம் ஆண்டுதோறும் 1,645 கன கிலோ. மீற்றர் நதி நீரில் சேரும் கழிவுகளோ, 1, 35,000 மெட்ரிக் தொன் என்றால் மொத்தக் கழிவின் அளவைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

'மத்தளத்துக்கு இரு பக்கமும் அடி' என்பதைப் போல், கடல் மாசுகளால் வாழ்வதற்கே சிரமப்படும் நீர்வாழ் உயிரினங்கள், மறுபுறம் புற்றீசல் போல் புறப்படும் வேட்டைக்காரர்களிடம் சிக்கித் தவிக்கின்றன. உணவுக்காகவும், பிற பயன்களுக்காகவும் மனிதர்கள் அவற்றை வேட்டையாட நவீன ஆயுதங்கள் மற்றும் சாதனங்களுடன் புறப்பட்டுக் கொன்று குவித்து வருகிறார்கள்.

**-ஐ. அமீர்-**

மீன் வேட்டை என்பது காலந்தோறும் தவிர்க்க இயலாததாக இருப்பது உண்மைதான். ஆனால், தற்போது அது பெருந்தொழிலாகவே மாறி விட்டுள்ளது. எவ்வளவு பெரிய மீனாக இருந்தாலும் வேட்டையாடி கொல்லும் திறன் மிக்க 'கில்லர் போட்'கள் (கொலைகாரப் படகுகள்), கடலின் ஆழத்தில் குண்டுகள் வெடிக்க வைத்து மீன்களை கூட்டம் கூட்டமாய் வேட்டையாடும் கொடூரங்கள், 'சயனைட்' போன்ற கொடிய நச்சுப் பொருள்களைப் பயன்படுத்தி பெரிய மீன்களை செயலிழக்கச் செய்து உயிருடன் பிடிக்கும் நூதன வழிகள் போன்றவற்றால் கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதுகாப்பு என்பது அறவே இல்லாமல் போனது.

மீன் எண்ணெய்க்காக சுறா மீன்கள், பெலுகா திமிங்கிலம், குட்டித் திமிங்கிலம், டுகாங், டொல்பின்கள் மற்றும் சீல் மீன்வகைகள் எல்லாம் கொல்லப்பட்டு நாளுக்கு நாள் அவற்றின் இனம் அருகி வருகிறது. மீன் வளர்க்கும் பொழுதுபோக்கின் பெயரால் நடக்கும் வியாபாரத்தில் 'கடல் குதிரைகள்' போன்ற அரிதான மீன் இளம் பூண்டோடு அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உலகம் முழுவதும் ஆண்டுக்கு பத்தாயிரம் கோடி ரூபாவுக்கு மேல் மீன்வளர்ப்புப் பொழுது போக்குத் தொடர்பான வணிகம் நடப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஹொங்காங், பிலிப்பீன்ஸ், ஆஸ்திரேலியாவின் சிட்னி போன்ற இடங்களின் கடற் பகுதிகளில் சோடியம் சயனைட் மீன்கள் மீது செலுத்துகிறார்கள். இதனால் மீன்கள் பாதிக்கப் படுவதுடன் மனிதர்களும் கேடுகளுக்காளாகிறார்கள். பிலிப்பீன்ஸில் மட்டும் ஆண்டுக்கு மீன் வேட்டையில் ஈடுபடும் 6,000 பேர், ஒன்றரை லட்சம் கிலோ சயனைட்டை கடல் நீரில் கலக்கிறார்கள்.

எண்ணெய் தாங்கிகள் விபத்துகளுக்குள்ளாகாமல் பார்த்துக் கொள்வதும், உடையாத பலமான தாங்கிகளை கட்டுவதும், விபத்து

(XI ஆம் பக்கம் பார்க்க)

### எண்ணெயை உண்ணும் புதிய நுண்ணுயிரிகள்!

ஒரு புறம் சுயநலம் மற்றும் அறியாமையால் வாழும் சூழலை மனிதன் மாசுபடுத்திக் கொண்டிருந்தாலும், அதே மனிதன் மற்றொரு புறம் மாசு நீக்குவதற்கான வழிமுறைகளையும் ஆய்ந்து வருவது நிம்மதி அளிக்கிறது.

கடலில் கலக்கப்படும் கழிவுகளையே உணவாய்க்கொண்டு உயிர் வாழும் நுண்ணுயிரிகளைக் கண்டறியும் ஆய்வுகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளனர்.

அமெரிக்காவின் ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனத்தில் பணி புரியும் இந்தியர் ஆனந்த் சக்கரவர்த்தி. இவர் நுண்ணுயிரியல் துறை சார்ந்த மருத்துவர். கடலில் மிதக்கும் மசகு எண்ணெய் படலத்தை உணவாகக் கொள்ளும் நுண்ணுயிரிகளை 1972 இல் கண்டறிந்தார். இவை சிலவகை நுண்கிருமிகள் (பாக்டீரியா) துணையுடன் உருவாக்கப்பட்டன.

நீரிலிருந்து எண்ணெயை உறுஞ்சிய பின் இந்த நுண்ணுயிரிகள் இறந்து விடுகின்றன. அப்படி இறந்தவை, பிற உயிரினங்களுக்கு உணவாகின்றன. இதனால் எண்ணெய்ப் படலத்தின் அடையாளம் சுத்தமாய்' இல்லாமல் போகிறது.

1989 இல் அலாஸ்காவிலும், குவைத்தின் எண்ணெய் சேகரிப்பு கிடங்குகளிலும் புதிய நுண்ணுயிர்கள் பரிசோதிக்கப்பட்டு வெற்றி காணப்பட்டது. ஆனால், இந்த நுண்ணுயிர் தயாரிப்பின் உரிமையை யார்பெறுவது என்பது தொடர்பான காப்புரிமை நடைமுறைச் சிக்கல்களால் இத்திட்டம் இன்னும் நடைமுறைக்கு வராமல் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அதிபர் கிளின்ரனின் பதவியை அச்சுறுத்தும் பாலியல் குற்றச்சாட்டுக்கள்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் பாலியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை எதிர் நோக்கி வருகிறார்.

அடுத்தடுத்து சுமத்தப்பட்டுள்ள இத்தகைய குற்றச் சாட்டுக்கள் காரணமாக தமது பதவிக் காலத்தில் இல்லாத பெரும் நெருக்கடிகளை அவர் எதிர்நோக்கி வருகிறார்.

FBI எனப்படும் சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்



கிளின்ரன்

துள்ளனர். இதனால் உலக நாடுகளில் இது பரபரப்பான செய்தியாகப் பேசப்பட்டு வருகிறது.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள பெரும்பாலான குற்றச்சாட்டுக்களை கிளின்ரன் மறுத்து வருகிறார்.

கடந்த புதன்கிழமை அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸில் தனது வருடாந்த உரையை நிகழ்த்தியபோது தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து கிளின்ரன் கருத்துத் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் கிளின்ரன் அவை குறித்து எதுவுமே வாய் திறக்கவில்லை.

தற்பொழுது கிளின்ரனின் மனைவி ஹிலாறி தமது கணவர் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து பிரசாரம்ஆரம்பித்துவிட்டார்.

வெள்ளை மாளிகையின் வேண்டும் என்றும் — ரெவிவிஷனுக்கு ஆற்றிய உரையில் ஹிலாறி தெரிவித்துள்ளார்.

**3 பெண்கள் சம்பந்தம்**

கிளின்ரன் பாலியல் ரீதியாக குற்றமிழைத்ததாக இதுவரை மூன்று பெண்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

இவர்களில் மொனிக்கா லுவின்ஸ்கி விவகாரமே கிளின்ரனின் பதவிக்கு வேட்டு வைக்கும் அளவுக்கு சூடுபிடித்து வருகிறது.

அமெரிக்க சமஷ்டி புலனாய்வுப் பிரிவினர் மொனிக்கா லுவின்ஸ்கியின் ஆடைகளை எடுத்துச்சென்று அதில் படிந்துள்ள விந்து எவருடையது என்பதை பரிசோதனை செய்யும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

பாலியல் விவகாரம் தொடர்பாக கிளின்ரன் மீது குற்றஞ்சாட்டி உள்ள ஏனைய பெண்களில் ஒருவர் பௌலா ஜோன்ஸ் (PAULA JONES) மற்றையவர் ஜெனிபர் பிளவர்ஸ் (GENNIFER FLOWERS)

அமெரிக்காவின் ஆர்க்கன்சாஸ் மாநிலத்தில் கிளின்ரன் ஆளுநராக இருந்த சமயம் பௌலா ஜோன்ஸ் அங்கு அரச அதிகாரியாகக் கடமையாற்றியவர்.

மற்றையவரான ஜெனிபர் பிளவர்ஸ் விருந்து வைபவங்களில் நடனமாடும் ஓர் ஆடல் அழகி.

பெண்களுடன் சம்பந்தப்படுத்தி அடுத்தடுத்து வெளிவந்த இக்குற்றச சாட்டுக்கள் கிளின்ரனுக்கு எதிரான திட்டமிட்ட சதி என்று கிளின்ரனின் வழக்கறிஞர் றொபர்ட்பெனட் குற்றஞ் சாட்டி உள்ளார்.

**மொனிக்கா லுவின்ஸ்கி**

வெள்ளை மாளிகையின் உதவியாளர் மொனிகா லுவின்ஸ்கி (வயது 21) தொடர்பாக கிளின்ரனுக்கு எதிராக பலதரப்பட்ட குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

மொனிக்கா லுவின்ஸ்கியுடன் கிளின்ரன் பாலியல் உறவு வைத்திருந்தார் என்றும் —

தம்முடன் பாலியல் உறவு வைக்கவில்லை என்று சொலலும் படி மொனிக்கா லுவின்ஸ்கியை பொய் சொல்லத் தூண்டினார் என்றும் — குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.



ஆடல் அழகி ஜெனிபர் பிளவர்ஸ்ஸை சட்ட நிபுணர் ஒருவர் விசாரணை செய்கிறார்

முன்னாள் உதவியாளர் மொனிக்கா லுவின்ஸ்கி (MONICA LEWINSKY) விவகாரம் தொடர்பாக தமது கணவருடன் தாம் விரிவாகப் பேசி உள்ளதாகவும் —

உண்மை வெளிவந்தே தீரும் என்பதால் மக்கள் பொறுமையாக இருக்க

அமெரிக்க சமஷ்டிபுலனாய்வுப்பிரிவினர் மொனிக்கா லுவின்ஸ்கியின் வாக்கு மூலத்தை இரகசியமாகப் பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் மொனிக்கா லுவின்ஸ்கியின் அறையையும் புலனாய்வுப் பிரிவினர் சோதனை செய்தனர். அந்த அறையில் இருந்து கம்பியூட்டர் ஒன்று, ஆடைகள், தங்க ஆபரணங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

மஷாசூசெட் மாநிலத்தில் உள்ள ''பிளைக் டோக் கிப்ட்'' (BLACK DOG GIFT) என்றும் வர்த்தக மையத்தில் இப்பொருள்கள் கிளின்ரனால் வாங்கப்பட்டவை

**சஞ்சாரன்**

என்று சமஷ்டி புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

தாம் மொனிக்கா லுவின்ஸ்கிக்கு ஆடை மட்டும் வாங்கிக் கொடுத்ததாக கினின்ரன் ஒப்புக் கொண்டுள்ளார்.

சமஷ்டி புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ள மொனிகா லுவின்ஸ்கியின் ஆடையில் விந்து அடையாளம் இருப்பதால் கிளின்ரன் மீதான குற்றச் சாட்டுக்கு அது அவசியம் என்று சமஷ்டி புலனாய்வுப் பிரிவினால் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன வழக்குத் தொடருநர் கென்னத் ஸ்ரார் தெரிவித்துள்ளார்.

மொனிக்கா லுவின்ஸ்கியுடன் கிளின்ரன் தொலைபேசியில் பேசியதும் ஒலிப்



மொனிக்கா

பதிவு செய்யப்பட்டுள்ளது.

**தொலைபேசியில் பாலியல் உரையாடல்**

கிளின்ரன் மொனிகா லுவின்ஸ்கியுடன் இரவுநேரங்களில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாலியல் ரீதியான கீழ்த்தரமான வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமக்கும் மொனிக்கா லுவின்ஸ்கிக்கும் இடையிலான வார்த்தைப் பரிமாறல்கள் வெறும் பாலியல் உணர்வே தவிர வேறொன்றும் இல்லை. இதனை பாலியல் விவகாரமாக தாம் கருதவில்லை என்று கிளின்ரன் தெரிவித்திருப்பதாக அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

**கருத்துக் கணிப்பு**

அமெரிக்க நிறுவனம் ஒன்று சமீபத்தில் கிளின்ரன்— மொனிக்கா லுவின்ஸ்கி விவகாரம் குறித்து கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது.

அதன்படி மொனிக்கா லுவின்ஸ்கியுடன் கிளின்ரன் பாலியலில் ஈடுபட்டிருந்தார் என்பதை பெரும்பாலான அமெரிக்கர்கள் நம்புகின்றனர். அதற்காக கிளின்ரன் பதவிதுறக்கத் தேவையில்லை என்று மூன்றில் இரண்டு அமெரிக்கர்கள் தெரிவித்திருக்கின்றனர். 23 சதவீத [illegible] கிளின்ரன் பதவி துறக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

**பௌலா ஜோன்ஸ்**

கிளின்ரன் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்ட மற்றைய பெண் பௌலா ஜோன்ஸ்.

1991 மே 8 ஆம் திகதி கிளின்ரன் தம் மீது பாலியல் அவதூறு புரிந்ததாக பௌலா ஜோன்ஸ் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஆர்க்கன்சாஸ் மாநிலத்தில் கிளின்ரன் ஆளுநராக இருந்த சமயம் இச்சம்பவம் இடம் பெற்றது. பௌலா ஜோன்ஸ் அப்பொழுது அந்த மாநிலத்தில் அரச ஊழியராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்தார்.

இது தொடர்பான விசாரணை எதிர் வரும் மேமாதம் நடைபெற இருப்பதாக அமெரிக்க நீதிபதி சுவாவெபர் அறிவித்துள்ளார்.

இந்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக வெள்ளை மாளிகையில் வைத்து கிளின்ரனை விசாரணை செய்வதற்காக அந்தரங்க நீதிமன்ற அழைப்பாணை ஒன்றும் கிளின்ரனுக்கு அனுப்பப்பட்டது.

பௌலா ஜோன்ஸ் என்ற பெண்ணை சந்தித்ததாகவே தமக்கு ஞாபகமில்லை என்று விசாரணையின்போது கிளின்ரன் தெரிவித்து விட்டார்.

தம்மை "அவமானப்படுத்த இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும்—

வழக்கைத்தள்ளுபடிசெய்யுமாறும்—கடந்தமாதம் கிளின்ரன் சார்பாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

**ஜெனிபர் பிளவர்ஸ்**

விருந்துகளில் நடமாடும் அழகியான ஜெனிபர் பிளவர்ஸ் என்பவருடனான உறவுகள் குறித்து கிளின்ரன் இதுவரை மறுப்புத் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

1992 அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்திலேயே இந்த விவகாரம் அடிபட்டது. தற்பொழுது



பௌலா ஜோன்ஸ்

மீண்டும் கிளப்பப்பட்டு வருகிறது.

''செக்ஸ்'' விவகாரங்களில் ''ஜோக்'' அடிப்பதில் கிளின்ரன் பிரபல்யமானவர் என்று கூறப்படுகிறது.

கடைசியில் அந்த விவகாரமே அவரது அரசியல் வாழ்வுக்கு முடிவைத் தேடிக் கொடுக்கும் ஆபத்தை இந்தப் பாலியல் குற்றச்சாட்டுக்கள் ஏற்படுத்தியுள்ளன. ★

## புகையைக் கக்காத புதிய ரகக் கார்

புகையை வெளியிடாத, சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பில்லாத புதிய ரகக் கார்களை ஜெர்மனியின் 'டெய்ம்லர் — பென்ஸ்' நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தக் கார்கள் சிறிதளவு நீராவியையும், காற்றையும் மட்டுமே வெளியிடும்.

ஆக்ஸிஜன், ஹைத்ரஜன் வாயுக்கள் இணைந்து நீர் உண்டாகிறது. இவ்விரு வாயுக்கள் இணையும் போது சக்தியும் வெளிப்படும். அந்த சக்தியில் இயங்கும் வகையில் இப்புதிய ரகக் கார்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கனரக வாகனங்களில் மட்டுமே பரீட்சார்த்த ரீதியில் பயன்படுத்திப் பார்க்கப்பட்டுள்ள இப்புதிய உத்தியை அடிப்படையாகக் கொண்டு கார்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதுவே முதல்முறை. சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத இப்புதிய ரகக் கார்கள் வர்த்தக ரீதியில் 2005–ஆம் ஆண்டில் விற்பனைக்கு வெளிவரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ★

## பால் உற்பத்தியில் பாரதத்துக்கு முதலிடம்

இந்தியாவில் தரமான வீதிகள் கிடையா. சர்வதேசத் தரத்திலான விமான நிலையங்கள் இல்லை என்று புலம்புபவர்களுக்கு ஆறுதலளிக்கும் விஷயம் ஒன்றுதானிருக்க முடியும். உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது என்பதே அது.

சர்வதேச உணவு மற்றும் வேளாண் அமைப்பு இத் தகவலை வெளியிட்டுள்ளது. 1997—98 ஆம் ஆண்டில் இந்தியாவின் பால் உற்பத்தி 71 கோடி தொன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியில் இது வரை முதலிடத்திலிருந்தது அமெரிக்காதான்.

சர்வதேச அளவில் கடந்த ஆண்டு (1997) பால் உற்பத்தி ஒரு சதவிகிதம் அதிகரித்துள்ளது. பல ஆண்டுகளாக பால் உற்பத்தியில் தேக்க நிலை நிலவியது. காமன் வெல்த் நாடுகள் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் பால்உற்பத்தி வீழ்ச்சியடைந்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

இந்தியாவில் பாலின் தேவை அதிகரித்ததே உற்பத்திப் பெருக்கத்துக்குக் காரணம் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் உபதேசித்த கீதை அதன் வழி நடந்த கர்ணன்!

கர்ணன் என்ற பெயர் உள்ளவர்களே நல்ல பண்புகள் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால் தீயவர்களின் நிழலில் அவர்கள் வாழ நேரிடும். பின் அவர்கள் ஆதரவில் இருந்த செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்க, அவர்கள் கடைசியில் தங்கள் உயிரை ஈந்து கடமையை முடிப்பார்கள்.

மகாபாரதத்தில் வரும் கர்ணன், விகர்ணன் ஆகியோருக்கும் இராமாயணத்தில் வரும் கும்பகர்ணனுக்கும் இது பொருந்தும்.

உலகறியத் தேர்ப்பாகன் மகனாகவே வளர்ந்து, பிறகு துரியோதனனால் அங்க தேச அரசனாக ஆக்கப்பட்ட கர்ணனின் ஒரே குறை, தன்னை எல்லோரும் தாய் — தந்தை யார் என்று தெரியாத அநாதை என்று அழைப்பதுதான். மகாபாரதம் முழுவதுமே கர்ணனை வேறுவகையில் வில்லம்பு கொண்டு வெல்ல முடியாதவர்கள், இந்தச் சொல்லம்பைக் கொண்டுதான் மடக்குகிறார்கள்.

கர்ணனுக்கு மனவேதனை தரும் இந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுபட அவனுக்கு ஒரு வாய்ப்பைத் தருகிறார் கர்ணன். ஆனால் அதுவும், கண்ணனுக்கு ஒரு சோதனையாகவே வருகிறது. கர்ணனைப் பெற்ற தாய் தானே என்று சொல்லிக் கொண்டு வருகிறாள் குந்திதேவி. தனது ஐந்து பிள்ளைகளையும் காப்பாற்றத் தனது மூத்த மகனை இழக்கச் சித்தமாகி விடுகிறாள்.

''மகனே! உன்னிடம் இரண்டு வரங்கள் வேண்டும் தருவாயா?'' என்று கேட்கிறாள்.

''நான், யார் எதைக் கேட்டாலும் கொடுப்பவன். தாயாகிய நீ கேட்டுமறுப்பேனா? கேள் அம்மா?'' என்று பதில் சொல்லுகிறான் கர்ணன்.


''மகனே! உன்னிடம் நாகாஸ்திரம் இருக்கிறது அல்லவா? அதை நீ அர்ஜுனன் மீது ஒரே ஒரு முறைதான் பிரயோகம் செய்ய வேண்டும். இரண்டாவது தடவை பயன்படுத்தக் கூடாது. இது முதலாவது வரம். அர்ஜுனனைத் தவிர வேறு யார் மீதும் இந்த அஸ்திரத்தையோ, வேறு போர்க்கலன்களையோ நீ ஒரு போதும் பயன்படுத்தக் கூடாது. இது இரண்டாவது வரம் கொடுப்பாயா?'' என்று கேட்கிறாள்.

சிறிது தயங்குகிறான் கர்ணன். குந்திக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கர்ணனா கொடுப்பதற்குத் தயங்குகிறான்? என்ன காரணம்?

''கொடுத்தேன் தாயே! ஆனால், சிறிது தயங்கினதற்கு என்ன காரணம் தெரியுமா?'' என்று குந்திதேவியை நிமிர்ந்து பார்க்கிறான் கர்ணன். ''நான் துரியோதனனுக்காகப் போர் செய்து, அவனுக்கு வெற்றியைத் தேடித்கொடுக்க வேண்டியவன். அதற்குப் பயன்படுத்த வேண்டிய ஒரு முக்கியமான ஆயுதத்தை முழுவதும் நான் உபயோகிக்க மாட்டேன் என்று சொல்லுவதும் — அதையும் அவனுடைய அனுமதி இன்றி சொல்லி என்னைக் கட்டுப் படுத்திக் கொள்வதும் — நான் அவனுக்குச் செய்யும் துரோகம் அல்லவா? அதனால் தான் தயங்கினேன். ஆனால் பிறகு ஒப்புக் கொண்டேன். ஏன் தெரியுமா? ஒரு சுத்தவீரன் தன்னுடைய முக்கியமான போர்க்கலத்தை ஒரு முறை உபயோகித்துப் பயன் பெறாவிட்டால், அதை மறுபடியும் பயன்படுத்தமாட்டான். அதனாலேயே சம்மதம் கொடுத்தேன். பாண்டவர்களில் மற்ற நான்கு பேருடன் போரிட வேண்டாம் என்று சொன்னாயே அம்மா! அதைப்பற்றி எனக்குத் தயக்கமே இல்லை. ஏன் தெரியுமா? அவர்கள் என்னோடு சமமாக நின்று போரிடத் தகுதி வாய்ந்தவர்கள் இல்லை. அர்ஜுனன் ஒருவனே எனக்கு நிகரானவன்!''

குந்தி கர்ணனிடம் கண்ணீர் விட்டு விடை பெற்றுக் கொண்டு திரும்புகிறாள். அவளைப் பார்த்துக் கொண்டே நின்றான் கர்ணன்.

''அம்மா; என்னிடம் மட்டும் வரங்களை வாங்கிக் கொண்டு போய்விட்டாயே? 'மகனே உனக்கு ஏதாவது வேண்டுமா?' என்று ஒரு வார்த்தை கேட்கவில்லையே?'' என்று கேட்கிறான்.



குந்தி அழுது கொண்டே ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டு ''எது வேண்டுமோ கேள் மகனே!'' என்று தடவிக் கொடுக்கிறாள்.

''எனக்கு இரண்டு வரங்கள் வேண்டும் அம்மா; முதலாவது வரம் இது. போரில் நான் தான் வெற்றி பெற வேண்டும். என்று ஆசைப் படுகிறேன். ஆனால் முடிவு நம் கையில் இல்லை. நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்துபோய் விடாது. ஒரு வேளை நான் போர்க்களத்தில் உயிரிழக்க நேரிட்டால், எல்லோரும் என்ன சொல்லுவார்கள்? 'அங்கதேசத்து அரசன் விழுந்து கிடக்கிறான் என்றோ, துரியோதனின் ஆருயிர் நண்பன் உயிரிழந்தான் என்றோ' சொல்லமாட்டார்கள். 'தாயார் பெயர் தெரியாத அநாதை தொலைந்தான்' என்று தான்சொல்லுவார்கள். அப்போது நீ என்னை மடிமீது வைத்துக் கொண்டு புலம்பி 'மகனே! என்னை விட்டுப் போய் விட்டாயே?' என்று கதறி அழுது நீதான் எனக்குத் தாய் என்பதை உலகறியச் செய்ய வேண்டும் அம்மா! இரண்டாவது வரம் இது நான் இறக்கும் வரையில் நான் தான் உன் மூத்தபுதல்வன் என்பதைப் பாண்டவர்களிடம் சொல்லக்கூடாது. சொல்லி விட்டால் அவர்கள் போரிட மாட்டார்கள். இராஜ்ஜியத்தை எனக்கே கொடுத்து விடுவார்கள். அப்படியும் நான் அந்த உரிமையை வாங்கித் துரியோதனனுக்குக் கொடுக்கலாம். ஆனால், துரியோதனன் எவ்வளவு உயர்ந்தவன்? அவனுக்கு நான் நன்கொடையாக இராஜ்ஜியத்தைக் கொடுப்பதா? என்னுடைய திண்தோள் வலிமையைப் பயன்படுத்தி ஜெயித்துக் கொடுப்பது தானே முறை?'' என்கிறான் கர்ணன்.

> கர்ணன், விகர்ணன், கும்பகர்ணன் — இவர்கள் மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களில் வரும் 'கர்ணன்' பாத்திரங்கள். இந்தப் பெயர் கொண்ட பாத்திரங்கள் நல்ல பண்புள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் தீயவர்களின் நிழலில் வாழ நேரிட்டு, அந்தத் தீயவர்களுக்கு செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக கடைசியில் தங்கள் உயிரையும் ஈந்து கடமையை முடிப்பார்கள்.

குந்தி அழுதபடியே அந்த இரண்டு வரங்களையும் கொடுத்துவிட்டுச் செல்கிறாள். கடமை உணர்ச்சியை முன்னால் வைத்து, செய்யும் காரியத்தில் பற்று இல்லாமல் ஈடுபடவேண்டும் என்பதைப் பின்னால் பகவான் பார்த்தனுக்குக் கீதையாக உபதேசம் செய்கிறார். ஆனால் அதைக் கேளாமலேயே உணர்ந்து, கீதை வழி நடந்தவன் கர்ணன்தான். இதைக் காட்ட போர்க்களத்தில் இன்னொரு நிகழ்ச்சி வருகிறது.

கண்ணன் பார்த்தனிடம் ''இதோ தேரைக் கர்ணனுக்கு மிக அருகில் கொண்டுபோய். அவனை மடக்கி நிறுத்துகிறேன். நீ அம்பெய்துகர்ணனை வீழ்த்தி விடு!'' என்று சொல்லி, மிக லாவகமாகக் கொண்டுபோய் நிறுத்துகிறார். அர்ஜுனன் வில்லை எடுத்து நிமிர்ந்து பார்த்து, சிறிது தயங்கிக் கலக்கத்துடன், ''கிருஷ்ணா! என்னால் அம்பைத்தொடுக்க முடியவில்லை. திரும்பி விடு'' என்று சொல்லி விடுகிறான். கண்ணன் தேரைத் திருப்பிக்கொண்டு வந்து விடுகிறார்.

பாசறைக்குச் செல்லும்வழியில் பகவான் பார்த்தனிடம் ''அர்ஜுனா! உனக்கு ஏன் மறுபடியும் இந்தக்கலக்கம்? கீதை உரையைக் கேட்ட பின்பும், உனது உள்ளத்தில் தெளிவில்லையா?'' என்று கேட்கிறார்.

அர்ஜுனன் அவரிடம் ''ஐயனே! உமது யோசனையை ஆணையாக ஏற்று அம்பைப்போடத்தான் எண்ணினேன். ஆனால் கர்ணனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தபோது, எனக்கு என் தமையனார் தருமரைப் பார்ப்பது போலிருந்தது. அம்பைத் தொடுக்க மனம் வரவில்லை?'' என்று சொல்கிறான்.

உண்மையும் அதுதானே? ஆனால் உண்மையை அறியாதவன் பார்த்தன். இருந்தும் ஓர் இனம் புரியாத உணர்ச்சியில் மனம் வசப்பட்டுத் தன் கடமையைச் செய்யமுடியாமல் கலங்குகிறான். ஆனால், கர்ணனுக்கோ தனது அருமைத் தம்பியே அர்ஜுனன் என்று தெரியும். ஆயினும் அவன் குழப்பமடையவில்லை. தனது கடமையே குறியாக நின்று, பந்த பாசங்களை ஒதுக்கிப் போர் செய்கிறான். இப்போது கீதை வழி நடந்தவன் கர்ணனே என்பது தெரிகிறது அல்லவா?

★ ★ ★

கர்ணன் தனது வீரப் போரின் கடைசி நிலையை அடைகிறான். தேரோட்டும் சல்லியன் இறங்கிப் போய் விட்டான். பரசுராமரின் சாபத்தால் அவனுடைய வில் வீரம் பழுதுபடுகிறது. தேர்ச் சக்கரம் சிக்கிக் கொள்கிறது. அப்போது அர்ஜுனன் அவன் மீது அம்பு மாரி பொழிகிறான். ஆனால் கர்ணன் செய்த புண்ணியம்—கொடையால் வளர்த்த தருமம்—

**-புலவர் கீரன்-**

அவனைக் காத்து நிற்கிறது. அதையும் நீக்கக் கர்ணனிடம் அந்தண வடிவில் வந்து யாசகம் கேட்கிறார் கண்ணபிரான். ''ஐயா அந்தணரே! என்னிடம் இப்போது கொடுக்க ஏதும் இல்லையே! இந்தப் பாவியை மன்னியுங்கள்'' என்கிறான் கர்ணன். பிறகு, ''இப்போது என்னால் கொடுக்கக்கூடிய ஏதேனும் ஒன்றை நீங்கள் கேட்க முடியுமானால், உங்களுக்கு மனமார நன்றி சொல்வேன்'' என்கிறான்.

''கர்ணா! நீ செய்த தருமங்கள் தந்த புண்ணியம் இருக்கிறதல்லவா? அதைக் கொடேன்'' என்று கேட்கிறார் கண்ணன்.

ஆனந்தக் கண்ணீர் சொரியக் கர்ணன் ''நன்றி பெரியவரே! செய் புண்ணியம் அனைத்தும் தந்தேன்'' என்று தாரை வார்க்கிறான்.

செய் புண்ணியம் என்றால் செய்த புண்ணியம் —செய்து கொண்டிருப்பது — செய்யப் போவது மூன்றும் சேர்ந்தது என்று பொருள். அதாவது அப்போது கண்ணனுக்குத் தானம் செய்ததால் கிடைக்கும் நற்பலனையும் கூடக் கொடுத்து விடுகிறான் கர்ணன். எத்தகைய கொடை அது?

பகவான் கர்ணனிடம் தானம் பெற்று அவனுக்கு விசுவரூபத்தைக் காட்டித் தரிசனம் கொடுக்கிறார்.

பாரதத்தில் மூன்று இடங்களில்தான் பகவான் விசுவரூபத்தைக் காட்டுகிறார் முதலாவது துரியோதனனிடம் தூது சென்றபோது, அவனிடம் தனது வல்லமையைக் காட்டி அச்சத்தைத் தோற்றுவிப்பதற்காக. இரண்டாவது அர்ஜுனனிடம் தனது உண்மை வடிவத்தைக் காட்டி அவனது மனக்குழப்பத்தை நீக்குவதற்காக. இவை இரண்டும்கூட அடுத்த பட்சம்தான். ஆனால் கர்ணனுக்குத் தந்ததோ, அந்தப் புண்ணியவான் கண்டு மகிழக் காட்டும் புண்ணிய தரிசனம். இதுவேமிகமேலானது.

பகவான் கர்ணனிடம், ''உனக்கு எது வேண்டுமோ கேள்!'' என்கிறார்.

'கண்ணா நான் மடியப் போகிறேன். இப்போது எனக்கு வரம் கொடுக்கிறாயா? அப்படியானால் நான் இன்னொரு பிறவியை அடைந்து அதன் பலாபலன்களை அனுபவித்துத்தான் ஆக வேண்டும் என்பது பொருளா? ஆகட்டும். அப்படி நான் மீண்டும் பிறந்தால் எனக்கு, என்னிடம் 'இல்லை என்று கேட்டு வருபவர்களுக்கு இல்லை' என்னாமல் கொடுக்கும் உள்ளம் இருக்க அருள வேண்டும் சுவாமி!'' என்கிறான் கர்ணன்.

கர்ணனைவிடச் சிறந்த கொடையாளி இல்லை. பொதுவாகத் தமிழ்ப்புலவர்கள் சிறந்த கொடையாளியை மேகத்துக்குத்தான் ஒப்பிடுவார்கள். ஏனென்றால் மேகம் மறுபலனை எதிர்பாராமல் கொடுப்பது. அதன் பலனைப் பெறுபவர் யாரென்றும், எந்த வேளை என்றும் பாராமல் கொடுப்பது. அதனால் மேகமே மிகச் சிறந்த கொடையாளிக்கு நிகராகக் கூறப்படுகிறது. ஆனால் வில்லிப்புத்தூரரோ கர்ணனை 'மேகத்தைக் காட்டிலும் சிறந்த கொடையாளி' என்று குந்தியின் வாய்ச் சொல் மூலம் புகழ வைக்கிறார்.

அது எப்படிச் சரியாகும்? மேகத்தைப் போலக் கர்ணனும் யார் வந்து கேட்பினும், எந்த வேளையானாலும் கொடுக்கும் பண்பு கொண்டவன். ஆனால், மேகம் சமயமறிந்து பொழிவதில்லை. அதனால் சில வேளைகளில் அதன் பலன் கெடுதலாகவும் போய் விடுகிறது. ஆனால் கர்ணனோ சமயமறிந்து கொடை தந்து உதவுபவன். அவன் கொடுத்த கொடை யாருக்குமே கெடுதலாக வந்து முடிவதில்லை. அதனால் மேகத்தையும் விடச் சிறந்த, மிக உயர்ந்த கொடையாளி அல்லவா கர்ணன்? ★

நன்றி:- ஞானபூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகைச் சுருக்கி வீட்டுக்குள் நுழைத்து விடும் 'இன்ரர் நெற்'

"நான் ஜப்பானிலுள்ள எனது நண்பருடன் 'செஸ்' விளையாடி விட்டு இப்பொழுது தான் வந்தேன்"

"நான் இப்பொழுது மலேசிய வானொலியை கனடாவிலிருந்தபடி கேட்டுக் கொண்டிருக்கிறேன்"

"இந்தியாவிலுள்ள ஒரு நிறுவனத்துக்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் ஒரு தபால் அனுப்பினேன். அதற்கு அவர்கள் அனுப்பிய பதில் எனக்கு ஏற்கனவே கிடைத்துவிட்டது."

"அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பற்றி இலங்கையிலுள்ள ஒருவரும், ஜப்பானிலுள்ள ஒருவரும் என்னுடன் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்."

> ஆக மொத்தத்தில் உலகம் மிகவும் சுருங்கி விட்டது. உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் சம்பவத்தை அல்லது அது பற்றிய தகவலை உலகின் வேறு ஒரு மூலையில் இருந்து கொண்டு சில கணப்பொழுதில் — வீட்டுக்குள் — பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு உலகத்தைச் சுருக்கி விட்டது 'இன்ரர் நெற்'.

இவையெல்லாம் 21ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான யுகத்தைப் பற்றிய ஒரு கதையில் இடம்பெறுபவை என எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? இல்லை. இவையெல்லாம் இப்போது உங்கள் கையின் முன்பே வந்து விட்டன. 'இன்ரர் நெற்'' பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இன்ரர் நெற்றில் இதுவெல்லாம் சர்வசாதாரணம்.

Canon நிறுவனம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள கமராவைப் பற்றிய தகவல்கள் உங்களுக்குத் தேவைப்படுகிறது என வைத்துக்கொள்வோம். அந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து தபாலில் அந்த Camara விற்கான Catalog ஐ பெறுவதற்கு உங்களுக்கு 2,3 அல்லது அதற்கு மேற்பட்ட தினங்கள் அல்லது வாரங்களாவது செல்லும். இன்ரர்நெற் மூலம் உடனடியாக வர்ணப்படங்கள் அடங்கிய Catalog ஒன்று உங்களுக்குக் கிடைத்துவிடும். உங்களிடம் Colour Printer ஒன்று இருப்பதாத வைத்துக் கொள்வோம். நீங்கள் காகிதப் பிரதியாகவே அந்த Catalog ஐ நிமிட நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். புதிய வகை Honda Accord கார் பற்றித் தகவல்கள் தேவை. அது எங்கே எந்த வகையான Mortgage Planeஇல் கிடைக்கிறது என்ற தகவல்கள் தேவை என்று வைத்துக் கொள்வோம். இது கூட இன்ரர்நெற் மூலம் சாத்தியம்.

இதைவிட முக்கியமாக கொழும்பிலிருந்து வெளிவரும் Daily News பத்திரிகையை இங்கிருந்தபடியே நீங்கள் வாசிக்கலாம். இலங்கை நேரப்படி ஏறக்குறைய அதிகாலை 2,3 மணியளவில் அன்றைய Daily News பத்திரிகையை நீங்கள் இங்கிருந்தபடியே வாசிக்கும்போது அங்கு அது அச்சில் வெளிவந்திருக்காது.

அந்தப் பத்திரிகையில் வெளியான கட்டுரை தொடர்பாக நீங்கள் பதில் கடிதம் ஒன்றை அனுப்ப விரும்புகின்றீர்கள். அதுகூட கணனியூடாகவே நீங்கள் செய்து கொள்ளலாம். 'என்வலப்' தேட வேண்டிய தேவையோ முத்திரை வாங்கும் செலவோ இனிக் கிடையாது.

இரவு! — வெளியே பனி கொட்டிக்கொண்டிருக்கிறது. Boring. நீங்கள் உங்கள் கணனியூடாக, இன்ரர்நெற் மூலம் உலகின் ஏதாவது ஒரு மூலையிலுள்ள யாருடனாவது கதைத்துக் கொள்ளலாம். புதிய பல தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம். அற்புதமாக இருக்கிறதா? இப்போது இன்ரர் நெற் என்றால் என்னவென்று அறிந்து கொள்ள ஆவலாக இருப்பீர்கள்.

ஏறக்குறைய 30 வருடங்களுக்கு முன்னர் Rand என்ற அமெரிக்க நிறுவனம் இன்ரர்நெற் பற்றி சிந்தித்தது. இன்ரர்நெற் என்பது பல கணனிகளுக்கிடையேயான வலையாக்கம் எனக் கொள்ளலாம். 1969 இல் முதலாவது Network ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் இந்த வலையாக்கமானது Text ஐ அடிப்படையாகக் கொண்டதாகவும் விஞ்ஞானிகளால் மட்டுமே விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும் அமைந்திருந்தது. ஆணைத் தொடர்களின் கடினமான தன்மை பாரிய இடர்ப்பாடாக இருந்தது. இந்த முதலாவது வலையாக்கம் ''Arpanet'' என அழைக்கப்பட்டது. ஏறக்குறைய 90 களில் இன்ரர்நெற் ஆனது சாதாரண மனிதர்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் அமைந்தது.

''இன்ரர்நெற்'' இல் முக்கியமான அம்சங்கள் சில ''ஈ—மெயில்'', ''யூஸ் நெற்'', ''www'' ஆகியவை. நீங்கள் இன்ரர்நெற் தொடர்பு ஒன்றைப் பெறும்போது உங்களுக்கு E-mail adress ஒன்றும் (பொதுவாக) தரப்படும். இந்த முகவரி விளங்கிக் கொள்ள முடியாத வகையில் அமைந்திருக்கலாம். உதராணமாக aruqa@texmas. com. இப்போது உங்களுக்கு வேண்டிய கடிதம் ஒன்றைக் கணனியில் எழுதுங்கள். கடிதம் சேரவேண்டியவரின் E-mail முகவரியைப் பெற்றுக்கொள்ளுங்கள். (அவரிடம் இன்ரர் நெற் இருக்கவேண்டும்) கடிதத்தில் முகவரியை அதற்குரிய இடத்தில் எழுதிப் பின் Send என்ற பட்டனை Click செய்யுங்கள். ஆயிற்று. இப்போது உங்கள் நண்பர் கணனியைப் பாவித்த வண்ணம் இருப்பாரேயானால் அவருக்கு கடிதம் கிடைத்திருக்கும். சில செக்கன்களில் எல்லாம் முடிந்து விட்டது. அவர் கணனியைப் பாவிக்காது இருந்தால், அவருடைய தபால் பெட்டியில் (Electronic mail box) அது போடப்பட்டிருக்கும். அவர் மீண்டும் கணனியைப் பாவிக்க ஆரம்பிக்கும் போது தபால் ஒன்று வந்திருப்பதாக அறிவிக்கப்படுவார்.

தொலைநகலும் (Fax) இதைத்தானே செய்கிறது என்று நீங்கள் கேட்கலாம். 50 பக்கங்கள் கொண்ட ஒரு கடிதத்தை அல்லது ஓர் ஆவணத்தை தொலைநகலில் அனுப்பப் போகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். முதலில் வர்ணத்தில் உள்ள ஒரு படத்தை நீங்கள் அனுப்ப முடியாது. 50 பக்கங்கள் தொலைநகலில் அனுப்ப ஏராளமான நேரம் எடுக்கும். நீங்கள் அனுப்புமிடம் தூர நாடு ஒன்று என்று வைத்துக் கொண்டால் நீங்கள் ஏராளமான தொலைபேசிக் கட்டணத்தை செலுத்த வேண்டி நேரலாம். எழுத்துக்கள் துல்லியமாக இருக்காது. ஒரு வகை Filmy paper இல் தொலைநகல் அங்கு கிடைக்கும். அந்த ஆவணத்தைப் பெற்றுக் கொண்டபின் அதில் உங்களால் திருத்தங்கள் செய்ய முடியாது.

E-mail இல் இதுவெல்லாம் சாத்தியம். 50 பக்கங்களை நீங்கள் தயார் செய்துமுடித்ததும் அடுத்தகணமே அனுப்பிவிடலாம். சர்வதேச தொலைபேசிக் கட்டணங்கள் கிடையா. எந்தச்செலவுமில்லை. (இன்ரர்நெற்றிற்கான மாதாந்த கட்டணம் தவிர) இங்கிலாந்திலுள்ள உங்கள் உறவினருக்கு தினசரி தபால் அனுப்பலாம். இனிச் செலவு கிடையாது. உங்களிடம் ஒரு Laser Printer இருப்பின் துல்லியமாக அதை நீங்கள் பிரதியும் எடுக்கலாம். தேவையாயின் நீங்கள் அதில் திருத்தமும் செய்யலாம்.

அடுத்ததாகW W W(World wide wep) உதாரணமாக நீங்கள் இன்ரர்நெற் தொடர்பு ஒன்றைப் பெறும்போது ''Netscape'' அல்லது அதையொத்த ஒரு மென்பொருளும் (Softwere) உங்களுக்குக் கிடைக்கும்.

> கனடாவிலிருந்து வெளிவரும் 'காலம்' சஞ்சிகையின் கடந்த இளவேனில் பருவவெளியீட்டிலும் அதற்கு முன் 'ரோஜா' இதழிலும் வெளியான கட்டுரை இது.
>
> எழுதியவர்: கருணா.

உலகில் அநேகமான அரசுகள், நிறுவனங்கள், அமைப்புகள் என்பன தமக்கென ஒரு பகுதியை (Website) இங்கு வைத்துள்ளன. இவற்றிற்கு தனித்தனியே முகவரிகள் (Intemet Address) உண்டு. உதாரணமாக இலங்கைச் செய்திகளைப் பெறுவதற்கான இன்ரர்நெற் முகவரி http://www. lanka-web. com. இப்போது நீங்கள் மென்பொருளில் சரியாக முகவரிப்படுத்தும் போது இந்தத் தொடர்பு உங்களுக்குக் கிடைக்கும்.

சரி உங்களுக்கு இந்த முகவரி தெரியாது என வைத்துக் கொள்வோம். இப்போது என்ன செய்வது? உங்களுக்குத் தேவையான முகவரிகளைக் கண்டுபிடிப்பதற்கு வழிகாட்டிகள் Seearch engins) உள்ளன. உதாரணமாக Yahoo, Webcrawler, Lycos என்பவை. http:/www. yahoo-com என்ற முகவரியூடாக இந்த வழிகாட்டியை நீங்கள் அடையலாம். பின்னர் உங்களுக்குத் தேவையான நிறுவனத்தின் பெயரை அல்லது அதுதொடர்பான சில சொற்களை நீங்கள் கொடுக்கும்போது அந்தச் சொல் தொடர்பான சகல முகவரிகளையும் இந்த வழிகாட்டி தரும். உதாரணமாக ''News Paper'' என்ற சொல்லைக் கொடுக்கும் போது இன்ரர்நெற்றில் உள்ள சகல பத்திரிகைகளையும் அவை எந்த நாடுகளிலிருந்து வெளிவருகின்றன என்ற விவரத்துடன் இந்த வழிகாட்டி தரும். பின்னர் ஏதாவது ஒரு பத்திரிகையை நீங்கள் தெரிவு செய்யும் போது நீங்கள் அந்தப் பத்திரிகையை வாசிக்கலாம்.

''Usenwt'' இங்கு ஏராளமான தலையங்கங்களில் தொகுப்புக்கள் உண்டு. நீங்கள் தெரிவு செய்யும் ஒரு தலையங்கத்திற்கூடாக ஒரு குழுவிற்கு சென்று உங்கள் விடயங்களைப் பதிவுசெய்யலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட விடயங்களை வாசிக்கலாம். இந்தப் பகுதியிலும் ஏராளமான தகவல்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

இன்னோர் அற்புதம் ''Chatting''. இந்தப் பகுதியில் நீங்கள் உலகின் பல பகுதியிலுமுள்ள மக்களுடன் நேரடியாக உரையாடும் வாய்ப்பினைப் பெறுகிறீர்கள். இங்கு வயது வாரியாக, நாடுவாரியாக, இன்னும் பல வகைகளில் அறைகளுண்டு. இந்தவகை கணனியியல் அறைகளுக்குச் செல்லும்போது அந்த அறைகளில் ஏற்கனவே உள்ளவர்களுடன் நீங்கள் நேரடியாக உரையாடலாம். எப்படி உரையாடுவது? ''Hello How are You?'' என்று Typeபண்ணும்போதுஏனைய சகலருக்கும் (அந்த அறையில் உள்ளோர்) தமது கணனித் திரையில் அந்தத் தகவல் கிடைக்கும். நீங்கள் புகைப்படக் கலையில் ஆர்வமுள்ளவர் என்று வைத்துக் கொண்டால் Chatting மூலம் புகைப்பட நிபுணர்களிடம் நேரிடையாகவே பல சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஏராளமான தொலைபேசிக் கட்டணத்தைச் சேமிக்கலாம். மிகுந்த சுவாரசியமான பகுதி. பலர் இப்பொழுது இந்தப் பகுதியில் தான் தங்கள் வாழ்க்கைத் துணையையே அமைத்துக் கொள்கிறார்களாம்.

சரி. இனிஎப்படி இந்த 'இன்ரர் நெற்' தொடர்பை பெற்றுக் கொள்ளலாம்? அதற்கு நிச்சயமாக உங்களுக்கு ஒரு கணனி தேவை. அநேகமான வகைக் கணனிகள் இன்ரர் நெற் தொடர்பிற்கு இயங்க வல்லவை. ஒரு 14400 bps அல்லது அதைவிட வலுவான Modem ஒன்றும் தேவை. இவையெல்லாம் உங்களிடம் இருப்பின் நீங்கள் இன்ரர் நெற் தொடர்பை சாதாரண தொலைபேசி இணைப்பினூடு பெற்றுக் கொள்ளலாம். இன்ரர் நெற் தொடர்பைத் தரும் பல நிறுவனங்கள் இங்குஉள்ளன. இதற்கான கட்டணம் அவ்வளவு அதிகம் அல்ல.

இணைப்புக் கிடைத்தவுடன் நீங்கள் தயார். இந்த நூற்றாண்டில் தகவல் பரிவர்த்தனையில் ஏற்பட்ட பாரிய அதிசயத்தை நீங்களும் பாவித்துப் பாருங்களேன்.

பலருக்கு ஒரு சந்தேகம். இன்ரர் நெற் மூலம் உங்கள் கணனிக்கு வைரஸ் தொற்றுமா? (அதுசரி! அது என்ன வைரஸ் என்று கேட்டுவிடாதீர்கள். கணனியில் வைரஸ் என்ற மென்பொருள் மிகப் பிரபலம். இது தொற்றினால் உங்கள் கணனிக்கு சளி, தடிமன் ஏற்படும். சில சமயங்களில் பைத்தியமே பிடிக்கலாம்.) நிச்சயமாக இல்லை. வைரஸ் தொற்றாது. நீங்கள் ஏதாவது ஒரு கோப்பை (File) Download செய்யும்போது சாத்தியமுண்டு. சாதாரணமாக நீங்கள் உபயோகிக்கும்போது இன்ரர்நெற் மூலம் வைரஸ் தொற்று ஏற்படாது.

வெளிநாட்டுக்கு E-mail அனுப்பும் போது அல்லது www வினூடாக தொடர்பு கொள்ளும்போது சர்வதேச தெலைபேசிக் கட்டணங்கள் ஏதும் கிடையா. வேறுயாராவது உங்கள் கணனியில் உள்ள தகவல்களைப்பார்க்க முடியுமா? முடியாது. உங்களுக்கு வந்துள்ள தபாலையும் யாரும் பார்க்கமுடியாது.

ஆக மொத்தத்தில் உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. சில கண நேரத்தில் உங்களுக்குத் தேவையான தகவல்கள் யாவற்றையும் பெற்றுக் கொள்ளலாம். சில வானொலிகள் கூட இன்ரர் நெற் மூலம் ஒலிபரப்புச் செய்கின்றன. தமிழில் மலேசிய வானொலி தனது ஒலிபரப்பை இன்ரர்நெற் மூலம் செய்கிறது. தெளிவான ஒலியில் நீங்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். திரைப் படங்களிலுள்ள சில முக்கிய காட்சிகளையும் பார்க்க முடியும். (உங்கள் VCR இல் பார்ப்பது போல) விரைவில் இன்ரர்நெற் மூலம் திரைப் படங்களையும் பார்க்க முடியும். இன்னும் பல, இன்ரர் நெற்றில் விரைவில் வரவுள்ளன. சுவாரசியமான இந்த இன்ரர் நெற்றில் நீங்களும் இணைந்து கொள்ளலாமே!

★


## மன அழுத்தத்தை கட்டுப்படுத்தும் கணனி

மன உளைச்சல், மன அழுத்தம் ஆகியவற்றை முற்றிலுமாகத் தவிர்க்க முடியாது என்றாலும் மருத்துவ உதவியுடன்குறைக்க முடியும்.

உயிரித் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு கணனி மூலம் மன உளைச்சலைக் குணப்படுத்த முடியும் என்று லண்டன் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இத்கைய உயிரித் தொழில் நுட்ப மருத்துவ சிகிச்சை முறை லண்டனில் இரண்டு மருத்துவ மனைகளிலும் இஸ்ரேலில் டெல் அவிவ்மருத்துவ மனையிலும் தற்போது பின்பற்றப்படுகிறது. இத்தகைய உயிரித் தொழில் நுட்பம் அல்ட்ராமைன்ட் தொழில் நுட்பம் என்றழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழிகாட்டிகள்

''மாணவர்களாகிய நீங்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாய் இருக்காது, பல்வேறு துறைகளில் ஆர்வங்காட்ட வேண்டும். விளையாட்டுக்கள், கலைகள் சம்பந்தமான நிகழ்வுகளிலும் உங்களை இணைத்துக் கொள்ளவேண்டும். போட்டிகளில் பங்குபற்ற வேண்டும். போட்டிகளிலும் வெற்றியீட்டுவது முக்கியமாயினும் பங்குபற்றுவது அதனிலும் மேலானது. தோல்விகளை, வெற்றிகளின் படிகளாக வைத்து நீங்கள் வளர வேண்டும். இந்த ஏட்டுக் கல்வியால் என்ன பலன் என்று நீங்கள் எதிர்காலத்தில் எங்களையும் எங்கள் கல்வி முறையையும் திட்டித் தீர்க்காமல், நடைமுறை வாழ்விற்கு ஏற்ப தொழில் முயற்சிகளுக்கு இக் கல்வி முறையை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்''

ஆசிரியர் நித்தியின் அறிவுரைகள் நீண்டு கொண்டு சென்றன. கணீர்க் குரலில் கவர்ச்சியாகப் பேசும் திறன் அவருக்கு இல்லாவிடினும், தனது மன உளவுகளின் உணர்வுகளை உரையாக்கினார்.

''ஒயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்'' என்றவுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த மாணவ முணுகல் நிசப்தமானது. ''இது பாரதி சொன்னான். இங்கே பாரதி எதைச் சொல்ல வந்தான் என்பது உங்களுக்குப் புரியும். உழைப்பு! உழைப்பு... இது ஒன்றே மனிதனை மகிழ்விக்கும், உன்னத நிலைக்கு உயர்த்தி வைக்கும். ஆகவே மாணவர்களே நன்றாகக் கற்றுக் கொள்ளுங்கள்; நல்லதைச் சிந்தியுங்கள்; நல்லவற்றை மட்டும் நன்றாகப் பற்றுங்கள். தண்ணீர் கலந்த பாலில் தண்ணீரை அகற்றிப் பாலை அருந்தும் அன்னத்தைப் போல நல்லவற்றைச் சுமந்து நகருங்கள். தீயவை திகைத்துப்போகும்......''

காலைக் கூட்டம் கலைந்தது. பாடசாலை ஆரம்ப நாள் என்றபடியால் வெளி வேலைகள் வெகுவாக இருந்தது. ''மிஸ்ரர் நித்தி அந்த மனையியல் கூடப்பக்கம் ஒருக்கா கவனியுங்கோ'' அதிபரின் அன்புப் பணிப்பு.

''ஓம்சேர்'' அடக்கத்துடன் பதில் கூறியபடி புறப்பட்டார் நித்தி.

அந்தப் பாடசாலையில் இளைய ஆசிரியர் நித்தி தான். விளையாட்டுப் போட்டிகள், சிரமதானங்கள், சாரணியம் போன்ற நிகழ்வுகள் என்றால் நித்தி தான் நின்று பிடிப்பார் என்பது அனைவரும் அறிந்த விடயம். கடந்த வருடம் மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டிகளிலும் அவர் பழக்கிய அணிதான் முதல் இடத்தைப் பெற்றது. ஆளணியில் சிறிய பாடசாலையாக இருந்தாலும், இப்போதெல்லாம் பிரசித்தி பெறுவதற்கு நித்தியின் செயற்பாடுகளும் முக்கியமாயிற்று. பாடசாலை நேரங்களை விட அவர் பாடசாலை முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட நேரம் அதிகம். பாடசாலையில் கடமை புரிவது அவருக்குச் சொந்த வீட்டில் கடமை புரியும் சொகுசு போலும்.

அவசர அவசரமாக ஆண்கள் வாளியும் நீருமாக வகுப்பறையைக் கழுவும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்......

மழைக்குள் நனைந்து கறுத்த இரண்டு உருப்படியான கதிரைகள் இரண்டு மனையியல் கூட வெளிப் பக்கமாக அழுது கொண்டிருந்தன.

''பிள்ளைகள் இஞ்ச வாங்கோ...... யார் அங்க வேலை செய்யாமை நிக்கிறது? இஞ்ச வாங்கோ, அந்த வதனியும் சுகந்தியும், அந்தக் கதிரைகளைப் பாருங்கோ கவலைக் கிடமாய்க் கிடக்கு. எடுத்து வடிவாகக் கழுவிப் போட்டு அந்த மனையியல் கூடத்துக்க போடுங்கோ. இதுவும் உங்கட சொத்துத் தான்...''

நித்தியின் சொற்படி ''ஓம் சேர்'' என்றவாறு அந்த மாணவிகள் இருவரும் சென்றார்கள். ஒவ்வொருவராக இரண்டு கதிரைகளையும் தூக்கிக் கொண்டு அலட்சிய நடை நடந்தனர். தவறிய கதிரை ஒன்று வதனியின் கால்விரல்களைப்பதம் பார்த்தது. ''ஓ......'' என்றபடி அப்படியே இருந்து விட்டாள் வதனி. மாணவர் கூட்டம் வதனியை முற்றுகையிட்டது.

''ஏனடி கவனமாத் தூக்கத் தெரியாதே''

''அங்கை பார் விரல் வீங்கிக் கொண்டு வருது''

''ஆர் உனக்கிந்த வேலை சொன்னது...?''

மாணவர் கதைகள் அவளது காயத்தை மேலும் மோசமாக்கியது.

''என்ன அதில் கூட்டம். எல்லாம்அங்காலபோங்கோ'' நித்தியின் விசாரணை வதனியின் கண்கள் கலங்கியது.

''அது ஒன்றுமில்லைப் பிள்ளை வதனி...அது ஆர் பிள்ளை, சுகந்தி ஓடிப்போய் 'ஒவ்பீசில்' இருக்கிற அந்த ''பெஸ்ட் எய்ட் பொக்ஸ்'' ஐத் தூக்கிக் கொண்டு வாரும்...''

முதலுதவிப் பெட்டிக்குள் இருந்த மருந்தை எடுத்து ஆசிரியர், சக மாணவர்களின் உதவியுடன் காலுக்கு மருந்திட்டார்.

''அது சரியாகிவிடும். கொஞ்சநேரத்தில் வீக்கமும் வத்திவிடும் யோசிக்காதை பிள்ளை'' அன்றைய தினம் பெரும்பாலும் பாடசாலை சிரமதானத்திலேயே கழிந்தது.

★ ★ ★

வீடு சென்ற வதனிக்கு காலின் காயத்தை எப்படி மறைக்க முடியும்? அப்பாவுக்கு தெரிந்தால்தான் துள்ளுவார். அம்மாவிடம் சொல்லுவம் என நினைத்த வதனி அம்மாவிடமே விடயத்தைக் கூறினாள். கூறிமுடிப்பதற்கு முன்னதாகவே வதனியின் அம்மா

''இஞ்சருங்கோ, இஞ்சருங்கோ...ஒருக்கா வந்து பாருங்கோ பிள்ளையின்ரை காலை''

''என்ன...என்ன நடந்தது...?''என்றவாறு வந்தார் தகப்பன் சிவபாதத்தார்.

''ஒண்டுமில்லையப்பா, பள்ளிக் கூடத்தில கதிரை தூக்கேக்கை...'' என்றவாறு தயங்கினாள் வதனி.

''ஆரடி உன்னைக் கதிரை தூக்கச் சொன்னது?'' சிவபாதத்தார் சீறினார். ''உங்களைப் படிக்கத்தான் பள்ளிக் கூடத்துக்கு அனுப்புறது. கண்ட நிண்ட வேலை செய்யிறதுக்கில்லை. நான் நாளைக்கு ஒருக்கா பள்ளிக் கூடத்திற்கு வாறன் பொறு. ஆர் அந்த வாத்தியார் உன்னைக் கதிரை தூக்கச் சொன்னவர்? ஒருக்கா அவரிட்ட ரெண்டு கேள்வி கேக்க வேணும். அவரை ஒரு கை பார்க்க வேணும். இந்த சீனித்தம்பி சிவபாதம் ஆர் எண்டு ஒருக்காக் காட்ட வேணும்.''

''வேண்டாம் அப்பா; நாங்கள் இருந்து படிக்கிற கதிரைகளை நாங்க தானே கவனமா வைச்சிருக்க வேணும்......நீங்கள் சும்மா இருங்கோ. பள்ளிக்கூடம் வராதேங்கோ''

வதனியின் மறுமொழி சிவபாதத்தாருக்குச்சுட்டது.

''எனக்கு நீ புத்திமதி சொல்றியோ. உது தான் உங்கப் பள்ளிக் கூடத்தில படிக்கிறா போல. இப்பத்த படிப்பும் அது......வாத்திமாரும் அது....நீங்களும் அது.... சரி சரி எல்லாம் நாளைக்கு பாப்பம்...''

**-மானியூர் ரட்ணேஸ்-**

★ ★ ★

அழகிய முகத்துடன் மறுநாள் அனைவரையும் பாடசாலை வரவேற்றது.

மணி அடித்தது, வகுப்புகள் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

வதனி பாடசாலை வந்திருப்பதை நித்தி ஆசிரியர் உறுதி செய்து கொண்டார்.

நான்காம் பாடவேளை.

''எங்க புறிஞ்சிப்பல் நிக்கிறார். அவருக்கொரு மோட்டச் சைக்கிளும் ஆளும்...''

சிவபாதத்தின் சீறல் அரங்கேறுகிறது. மைதான வாசலில் நின்ற மாணவர்கள் சற்றுத் தயக்கத்துடன் காரியாலயத்தைக் காட்டினார்கள்.

சீறிக்கொண்டு சென்ற சிவபாதத்தார்.

''நீங்களோ புறிஞ்சிப்பல். உங்களை என்ன வேலைக்கு இஞ்சை விட்டது. ஒழுங்கா பிள்ளைகளுக்கு படிப்பிக்கிறத்துக்கோ இல்லாட்டி வேலை வாங்கிறதுக்கோ...? பிள்ளேன்ர காலைப் பார்த்தனீரே நீர், என்ன பாடு பட்டுக் கிடக்குது. உங்கட பிள்ளைகள் எண்டா இப்படி வேலை வாங்குவியளே......

(X ஆம் பக்கம் பார்க்க)

# சஞ்சீவி சிறுகதைகள்

# வேண்டுதல்

''அரோகரா'' ஓசை வானைப் பிளந்த வண்ணம் இருந்தது. கையிரண்டையும் தலைக்கு மேலாக உயர்த்தி; கண்களை மெதுவாக மூடியபடி ''முருகா'' என்று உள்ளம் உருக வேண்டிக் கொண்டான் சின்ராசு. சனநெரிசலில் பிதுங்கிவிடாது, தன் மகன் மிதுனனை தன்னோடு ஆதரவாக அணைத்து, தோள்களிலே தூக்கி எடுத்தான். தந்தையின் உயரமான தோள்களிலே வீற்றிருந்தவாறே அனைவரையும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டே அவர்களின் நடவடிக்கைகளைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தான் மிதுனன்.

''மிது சாமியைக் கும்பிடுங்கோ'' என்று சொல்லி, அவனது சின்னஞ்சிறு கைகளினை ஒன்றாக இணைத்து விட்டான் சின்ராசு. கோயில் அலங்காரங்களை கண்களால் மேய்ந்தவாறே, சிறிது நேரம் இறைவனைப் பார்த்துக் கைகூப்பிவிட்டு, போதுமா... என்பது போல் தந்தையைப் பார்த்தான். திருப்தியோடு கூடிய மெல்லிய புன்னகை ஒன்றினைப் பதிலாகப் பெற்றுவிட்ட மகிழ்ச்சியில், மீண்டும் நிகழ்வுகளை இரசிக்கத் தொடங்கினான்.

தீர்த்தத் திருவிழா என்பதால் அதிகாலையிலிருந்தே பக்தர் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. சன நெருக்கத்துடன் வாசலிலே நின்று கொண்டிருப்பது, உசிதமில்லாத காரியமென்பதால் மெல்ல... மெல்ல விலகி பழநியாண்டவரை நோக்கி நடக்கத் தொடங்கினான், சின்ராசு.

நல்லை முருகனின் பக்த அடியார்களே! இன்னுஞ் சிறிது நேரத்தில் எம்பெருமான் தீர்த்த உற்சவத்திற்காக தீர்த்தக்கேணிக்கு எழுந்தருவார்... சனநெருக்கம் அதிகமாக உள்ளதால் உங்கள் உடைமைகளைப் பத்திரமாகப்பாதுகாத்துவைத்திருக்கவும்...'' என்றவாறெல்லாம் ஒலி பெருக்கி சத்தமிட்டுக் கொண்டிருந்தது.

தீர்த்தக் கேணியின் படிகளை ஆண், பெண், இளையோர், முதியோர் என்ற வேறுபாடின்றி முற்றுகையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் முருகப் பெருமான் தீர்த்தமாட இறங்கியதும், கேணிக்குள்ளே குதிப்பதற்கான தயார் நிலையில் இருப்பது தெரிந்தது. பக்தியின் உச்சக்கட்ட விம்பங்களை பலரது முகங்கள் உள்வாங்கியிருந்தன. தீர்த்தக் கேணியின் மறுபுறத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தார் சிலர் ஒலி வாங்கிகள், படப்பிடிப்புக் கருவிகள் சகிதம் நின்றவண்ணமிருந்தனர். ஆலயச் சூழல் பற்றிய நேர்முகவர்ணனைகளை ஒலிபெருக்கி அறிவித்துக் கொண்டிருந்தது. இந்தக் காட்சிகளை எல்லாம் பருகிக் கொண்டு சென்ற சின்ராசு, பழநி ஆண்டவரைச் சுற்றி சனத்திரள் நிறைந்திருந்ததால் தன்னை சிறிதுதப்படுத்திக் கொண்டான்.

பழநியாண்டவருக்கு பின்புறமிருக்கும்பாதை மிகச் சிறிய ஒற்றையடிப்பாதையாக இருந்தமையால்...பக்த அடியார்கள் பலர் மிகவும் ஆறுதலாகவும், அமைதியாகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இடித்துத்தள்ள முற்பட்ட சில இளவட்டங்களைக் கண்டபோது சின்ராசுவுக்கு எரிச்சல்...... எரிச்சலாக வந்தது.

''என்ன இதுகள்...சங்கக் கடையில...இடிச்சுத் தள்ளுற மாதிரி இஞ்சையும் செய்யிதுகள்......எங்கட சனத்திற்கு கோயிலுக்கு வந்தாலும், பழக்கம் மட்டும்போகாது'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான். ஒருவாறுபழநியாண்டவரை முழுமையாகக் கும்பிட்டு முடித்துக் கொண்டு, கேணிக்கு மேற்குப் பக்க மூலையில் பாதுகாப்பான ஓரிடந்தேடி...... நிற்பதற்கு முனைந்தான். முருகன் தீர்த்தக் கேணிக்கு வருவதற்கு சிறிது நேரம் இருப்பதாக தோன்றியது. தோளிலே சாய்ந்திருந்த மிதுனனுக்கோ...அங்கு நடைபெற்ற நிகழ்வுகளெல்லாம் நல்ல தீனியாக அமைந்தது. சின்ராசுவுக்கு அருகே நின்று கொண்டிருந்த இரு புதுமணத் தம்பதிகள் ஏதேதோ சொல்லி...தாழ்ந்த குரலில் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களைப் பார்த்போது அவனுக்கு ராசாத்தியின் நினைவுகள் வந்தன. இதயப் பாறைகளில் பழைய நதிகள் சல சலக்கத் தொடங்கின.

நல்லூர்த்திருவிழாக்களுக்கு அவளோடு சேர்ந்து வந்த நாள்கள்...தும்பிகள் போல அவனைச்சுற்றி வந்தன. கண்களை நீர்த்திவலைகள் நிறைப்பது போன்ற உணர்வு வர.. வந்த நினைவுகளை சிரமப்பட்டுத் துரத்தியடித்தான். தன்னை யாராவது கவனிக்கிறார்களா... என்று பார்த்தபின் சால்வையின் ஓரத்தினால் விழிகளைத் துடைத்துக்கொண்டான்.

ஒலிபெருக்கியில் யாரோ... ஒருவர் — தேவாரம் ஒன்றினைப் பாடிக் கொண்டிருந்தார். மிதுனன் முகத்தில் அளவு கடந்த மகிழ்ச்சி தென்பட்டது. அவன் அப்பம்மா சொல்லிக்கொடுத்த தேவாரந்தான் அது. அவன் தன்னை மறந்து ஒலி பெருக்கியோடு சேர்ந்து பாடத் தொடங்கினான். பக்தர்களின் அரோகராச் சத்தங்கள், தேவாரப் பாடல்களின் ஓசைகள், ஒலி பெருக்கி ஒலிகள் என்பவற்றுக்கிடையே ஓர் உலங்கு வானூர்திச் சத்தமும் கொஞ்சங் கொஞ்சமாகக் கலந்து கொண்டிருந்தது. வர... வர... சத்தம் அதிகரித்துக்கொண்டு வந்தது. மிதுனனின் முகமோ... பீதியைச் சிறைப்பிடிக்கத் தொடங்கியது. தந்தையின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, ''அப்பா...... அப்பா'' என கதற ஆரம்பித்தான். ''அழாதேங்கோ... மிது அழாதேங்கோ. அது ஒண்டும் செய்யாது'' என்றெல்லாம் சின்ராசா எத்தனையோ தேறுதல்களைச் சொல்லிப்பார்த்தான். யாவும் பயனற்றுப்போயின. அவன் வீறிட்டுக் கத்திக் கொண்டிருந்தான்.

உலங்கு வானூர்தியோ... அழகாக இருமுறை ஆலயத்தை வட்டமிட்டுத் தாழப் பதிந்தது. வானத்திலிருந்து பலவகையான மலர்கள் தீர்த்தக்கேணியை நோக்கிச் சொரியப்பட்டன. பக்தர்களின் முகமெங்கும் பூரிப்புக்கள் மையமிட்டிருந்தன.

**-உச்சிற்கிழான்-**

(Xஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தும் கடலலையே கரையேற்றமாட்டாயோ?

நினைவிருக்கா?
நேற்றிந் நெடுங்கடலில் வலைவீசிக்
கனவுகளில் நீந்திக் களித்தோமே... நினைவிருக்கா?
வெள்ளை நுரைபொங்கி வெள்ளிதொடுஞ் சாமத்தில்
நல்ல நிலா நாளில்...,
நாதஸ்வரச் சீதளமோ
உப்பு வெடில் கலந்து உடல்குளிர்த்தும்; சிறுதுண்டு
மப்பு முகில் வந்தெம்
மனசில் மட்டும் மழைதூவும்.
ஆழக் கடலழைக்கும்; ஆடுகின்ற படகேறி
''ஏலேலோ''ப்பாடி இனித்தோம்; அன்றென்னபயம்?
பாரை, சுறா, ஒட்டி, பாலை
அறக்குளா, கணவாய்
குப்பையெனக் கொண்டந்து குவிப்போமே என்னசுகர்?
'வாடை'யெனில்
'மீன்பட்டு' வருகுதெனில்... நிதம்ருசியாய்
நெய்த்திருக்கைக் கறியும், சிங்கிறால் வறை, சொதியும்
செத்தவர்க்கும் வாயூறத் தின்போமே...
என்ன 'பதம்'?

ஏய் அலையே...!
நேற்றிருந்த 'இதம்' உனக்கு நினைவிருக்கா?
பாய்மரங்கள் பாறிப் பழுதடைந்த கரைநெடுக
நாய்போல் அலைகின்றோம் நாம்;
எம்மைத் தெரியலியா?
ஏனெமக்குச் சாபம் இட்டாய் சொல்?
நம்முறவு காதலுறவெல்லோ...
கைவிட்ட காரணஞ்சொல்?
நீண்ட கடல்நெடுக நிரைநிரையாய் மீன்குவியத்
தூண்டிலுடன் கரையில்
துவண்டெம் நா செத்தது காண்!
நல்ல கறிதின்று நாளாச்சு!
வெறும் கூடை,
சல்லித் திரளிதின்று 'புளிப்பேப்ப' வயிறாச்சு!
ஏய்... அலையே! நேற்றை இதம் மீண்டும் காட்டுக!
ஓம்...,
நல்ல சுறாவுக்கெம் நாஏங்கும்.
முன்போல்நின்
துள்ளும் முதுகேறித் துடுப்பசைக்கக் கைதவிக்கும்.
வல்ல முரல்பிடிக்க வலைதுடிக்கும்.
வா... அலையே
நல்ல வரம் நல்கு!
நமை அணைத்துக் கரையேற்று!!

— த. ஜெயசீலன்

# முட்கம்பி விடுதூது!

வேட்டுக் கோதினைப் போல நிறத்தவள்
வெட்சத் தில் ''பரா லைற்றாய்'' ஒளிர்பவள்
றோட்டுச் சோதனைச் சாவடி போலவென்
இரவு தூக்கப் பயணம் தடுப்பவள்
காட்டிக் காட்டி முகத்தை மறைப்பதில்
கண்ட தீர்வுப் பொதியினைப் போன்றவள்
வீட்டைத் தேடிப் பிடித்துமே எந்நிலை
விரைந்து சொல்லி வருகமுட் கம்பியே!

இந்தக் காலத்துப் பாட்டு வரிகளாய்
இடையது புரியாமலே நின்றிடும்
முந்த நாள்வந்த கட்சிகள் போலவள்
முகத்தி லேஎழில் மூக்கதும் நின்றிடும்
வந்து போகிற கப்பல் ஒழுங்குபோல்
வார்த்தைகள் வெகு அருமையாய்ப் பேசுவாள்
எந்தன் தேவியைக் கண்டுமே எந்நிலை
எ..குக் கம்பியே சொல்லிவா சீக்கிரம்!

மேசை லாம்புச் சிமினியைப் போலவள்
மேனிக் கட்டு வளைவு நெளிவதும்
ஆசைப் பிள்ளை ஏற்றமாய் அன்னவள்
அங்க ஜாடையும் குரற்குளிர் ஓடையும்
பாஷை யூர்மணல் போலவள் பற்களில்
படிந்து நின்றதோர் வெற்றிலைக் காவியும்
தேச மெங்கும் வலம்வரும் கம்பியே
தேடி நீ கண்டு திரும்பிவா வந்துசொல்!

மாட்டு வண்டியின் கீழுள்ள லாந்தராய்
மங்கையின் நடை ஆடி அசைந்திடும்
நோட்டுத் தேடி அலைந்திடும் மாந்தராய்
நூறு வாட்டியும் பின்னல் உலைந்திடும்
தேட்டந் தேடிடும் மானிடர் வாழ்க்கையில்
தேயும் புன்னகை போலதில் மல்லிகைக்
கூட்டம் வாடிக் குவைந்து மணத்திடும்
குறிப்பினை வடிவாகநீ கேட்டுசொல்.

ராணி சோப்பின் நுரையினைப் போலவென்
ராணி புன்னகை தன்னைத் தரிசிக்க
தோணி ஏறக் கிளாலியில் நின்றவர்
தொகையைப் போல ஒருகியூ இங்குதான்
ஏணி யோடு திரிந்துமே ஏறிடா
எங்க ளூர் ''கரண்ட்'' பவரினைப் போலவே
நாணி சைக்கிளில் ஏறித் திரியிறேன்
நங்கை நெஞ்சிலே இன்னுமேன் ஏறலை?

முந்த நாளிரு வண்டை அனுப்பினேன்
மூட வண்டவை கண்களைச் சுற்றின.
அந்த ரித்து நிலவை அனுப்பிட
அக்கா என்று நிலவு மறுத்தது!
பிந்தி நானும் குயிலை அனுப்பினால்
பேச்சுக் கற்ற குருவிடம் செல்லுமா?!
எந்தன் ஊரெல்லாம் ஓடிடும் கம்பிநீ
இரும்பு அல்லவா? சென்றுவா வென்றுவா!

—ச. முகுந்தன்

# 'சுருதி'

ஆதாரமாய் நீயிருந்து
அனைவருக்கும் சுகமளித்து,
மாதாவாய் இசையுலகில்
மயக்கிவரும் ஒலியே!
காதாலுனை மாணவர்கள்
கனிந்து உணர்ந்திடின்
மேதையாய் இசைபெறுவர்
மனமகிழ்ந்து வாராய்!

சீதையாய்ச் சுருதியும்
ஸ்ரீ இராமனாய் லயமும்
நாதமாய் இவ்வுலகில்
நயந்து இசை பாடவே
பாதைகள் யாவுமே
பரமனவன் துணைவரக்
காதலால் வணங்குவேன்
கருதிய சுருதியே!

அளவையூர்,
ஜே. எஸ். சிவஞானராஜா

# சூடு காணாத பூனைகள்

சோகமா யிரம் சூழ்ந்த தீவிது.
சூடுகண்டபின் கூடமாறலை,
சாவினோடுதான் அன்பு கொள்ளுது.
தாழ்ந்து சீரழிந் தின்று நாறுது.
தாகப்பட்டவர் நாவறண்டபின்
சாய்ந்து விக்கினார்...வேரறுந்ததால்
வாடும் நாற்றதன் வாழ்வு போனது.
வஞ்சம் பொய்களே வாகை சூடுது.

சொந்தக் காணியைச் சொந்தமென்றுமே
சொல்லல் பாவமாம்! ''சொப்பனத்திலே
கண்ட ஆசைகள் கையிலில்லை ஏன்?''
என்று கேட்பதும் இங்க நீதியா!
தந்த சீனி, மா போதுமென்றுதான்
தலையை ஆட்டினால் நல்ல பிள்ளையாம்.
தின்னல், தூங்கலே சொர்க்கமென்றிடில்
'செம்மல்' பட்டமும் எம்மை எட்டுமாம்!

நாயைக் கட்டியே வைத்தடித்திடல்
நாய் திமிறும்...கயிறை அறுத்திடும்
'வாயை வைத்திடும்'...என்றறிந்திடா
மர்மம்...மண்ணினை மீண்டுங்கட்டுது.
காயமாறுமுன், கண்கள் வற்றுமுன்
'கலக்கவே' 'சுயம்வரமும்' வந்தது.
சூடுகண்டிடாப் பூனையால்...இனிச்
சொர்க்கம் தோன்றுதல்...சுணங்கிப் போகுது.

—தேரடிச்சித்தர்.

# தொங்கும் இழைகள்

அவன் எனக்கு நண்பனாயிருந்தான்.
பல பொழுதுகளில்
பிரியாத பந்தமெனக்கதையளந்தோம்.
பரிவும் தண்மையும் பூத்த
இருகிளைகளெனக்கற்பிதம்செய்தோம்.
ஒரு ஜீவனே நம்முள் புகுந்திருப்பதாய்க்
களி கூர்ந்தோம்.
பாடசாலையும்
எங்கள் வீடுகளும்
வழுக்கியாற்று மதகும்
இன்ன பிறவும்
நட்பின் இழைகளாயின.

ஒரு வசந்தப் பொழுதில்
அவன் திருமணமானான்.
அக்கணமே
காணாமற் போனான்.
பின்,
நட்பின் இழைகள் அறுந்து தொங்கின.
எனதும் அவனதும் வீடாகவும்,
பாடசாலையாகவும்,
வழுக்கியாற்று மதகாகவும்,
நானாகவும் அவனாகவுங் கூட!

-இயல்வாணன்-

# சங்கிலி மன்னா இங்கு பார்

எழுந்தாய் சிறப்புடனே எழிலார்ந்த நல்லூரில்
விழுந்தாய் சிரசுடைந்து வீரவாள்தான் முறிந்து
நிந்தன் பதியிலேயே நீ கிடந்த கோலமென்ன?
தந்தையே, தமிழுலகின் கோமகனே!

மேற்குலகின் மிக்க ''மேன்மை மிக்க மனிதர்'' சி
தாற்பரியம் புரியாது தமிழ்மகள் மீது கை வைக்க
தோற்றோடும் புத்திவிட்டு, சமர்க்களத்தில் பெரும்
காற்றாகி நின்றவனே, சாவலனே!

பண்டைதொட்டு இன்றுவரை '' பண்புமிக்க எம்ம
அண்டை அயலவரை அண்ணனைத் தம்பியை
முந்திநின்று காட்டி பின் தன் ''முதுகு சொறிந்து
கந்தல்க் குணத்திற்காளாகிப் போனவனே!

எத்தனையோ சாதனைகள் நின்புகழ் பாடும்.
அத்தனையும் சேர்ந்துன்னை மீளெழுப்பி விட்டாலு
நீ காத்த தமிழ்க் குடியே நின்முன்னே
நீறாகிப் போகிறதே, நிமிர்ந்து பாரய்யா!

சோதனைகளெங்கள் சொத்தாகிவிட்டதையா
பாதையிலே, வாழ்விலே, பாடசாலை, பல்கலையி
வேதனைகளுற்றாலும்வேந்தனேநீயும் ''சாவடியில்
கதறாதே! பரியின் கடிவாளம்பற்றி இங்குபார் எம்மி

— அனலையூர்ச் சேந்த

# மயக்கம்!

துள்ளியதும் துருவியதும் கயலோ கண்ணோ?!
துள்ளுவதும் துவள்வதுவும் கொடியோ இடையோ
கள்ளியவள் உண்மையிலே கள்ளோ கரும்போ?!
காண்பதுவும் உண்மையிலே கனவோ நனவோ?!

தள்ளுவதும் தளப்புவதும் குடமோ குறும்போ?!
தண்மையும் வெம்மையும் தானதன் இயல்போ?!
கிள்ளுவதால் கிடைப்பதும் கிளுப்போ கிறுக்கோ?!
கிடைப்பதில் பெறுவதுவும் செருக்கோ செருப்போ

பள்ளியிலே படிப்பதன் பயனும் அதுவோ?!
பார்வையிலே பட்டதனால் பயமோ பணிவோ?!
சுள்ளித்தடி எரியவரும் ஒலியோ ஒளியோ?!
சுழல்வீச்சில் அகப்பட்ட விழியோ பழியோ?!

எண்ணியதை முடிப்பதிலே தடையோ முடையோ?!
இளமனதை கொள்ளையிடல் தகுமோ முறையோ
கண்ணியதில் சிக்கியதும் மனமோ மதியோ?!
கருத்தினிலே கால்கொண்ட கதியோ சுதியோ?!

— கி. வாயு

# யாழ். திருநகரச் சிற

வானில் நிலாக் குளிர்காய கண்விழித்து
வண்டமிழர் குழாம் நிறைந்து – போர்நிறைந்த
பட்டிமன்றம் கவியரங்கம் வீதியிலே
தான்நடப்ப தெப்போதோ சொல்?

கோயில்சுவர் குழந்தைகளும் பெரியவரும்
தாய்க்குலமும் தமிழறிய முழங்கியவர் – தலைநக
நீட்டி விழாவெடுத்து நிறைவு பெற்றதன்பின்
மீண்டு வருவாரோ கேள்?

இல்லையெனில் இளைய தமிழ்க்குழாமெழுந்து
மெல்லநடந்து தெள்ளுதமிழ் பிரசவிக்க — தொல்
வல்லவரைத் தானணுகி வகையாக இனிமேல்
வழி தொடர்வாரோ பார்?

ஆசாரம் நல்லொழுக்கம் கீழ்ப்படிவுயாவும்
பாதாளம் தாண்டிப் படுகுழியில் – போகுமுன்னே
கற்றார் நிறைபண்ணில் கலாச்சாரமோங்க
வற்றாத சொல்மாரி பொழி!

செ சத்திய

# தமிழ் மழை வேண்டு

ஆண்களுக்கு வெளித்தடவல் பெண்களுக்குத் தனித்த
காண்பாரெலாம் புலியென்று பயத்துடனே இராணுவ
பாண்பெட்டி முதற்கொண்டு மீன்பெட்டியீறாக குத்திக்
கண்ணி விதைத்திருக்கும் கவின்மிகு சங்கிலியன்பதி.

ஆளுயரச் செடிமுளைத்துக் கறையானும் புத்தெடுத்து
வெள்ளெருக்குப் பூத்து வேதாளம் குடிபுகுந்து
வௌவால்கள் வட்டமிட்டு வளமாகக் குடியேறும்
நிலக்கண்ணி விதைத்திருக்கும் மனை.

இம்மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்
எப்பொருள் கையில்லில்லா நிலையிலுமே – ஆயினு
உயிரினும் மேல் என்று சிந்தை கொள்ளும் அடையா
ப
ஊர்க்குருவிதானும் இம்மண்ணில் வாழ்தல்இடர்.

காலையிலும் மாலையிலும் பஸ்ஏறும் கன்னியரும்
மணமான மங்கையரும் நசுக்கப்பட்டு தடவப்பட்டு
காளையரால் மட்டுமல்ல மீசை நரைத்திடினும் ஆசை ந
கிழவனது காளையராலும் உபசரிக்கப்படும் புண்ணியபூ

— இ

# கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுமைகள் இறங்குவதில்லை

மு - சிவநேசன்

பாகம் — 2

பெத்த வயிறு பத்தி எரியுது. அவன்தான் கெட்டுப் போனான். பாவம் சுபியை நான் அனுப்பி வச்சன். அவளுக்கு போய் வந்த பாட்டிலை எத்தினை சிக்கல்கள்? எல்லாத்தையும் ஒரு மாதிரிச் சமாளிச்சு தப்பி வந்திட்டாள். நல்ல வேளையா ஏதும் விபரீதம் நடக்கவில்லை.

அண்டையோடை நான் கூடப்போகாமல் இனி இவளை ஒரு இடமும் விடுறதில்லை எண்டு முடிவு கட்டியிட்டன். இப்ப சாகக் கிடக்கையுக்கை இனியார் இவனிடம் போய் ஆறுதல் சொல்லுவார்களோ? மாணிக்கத்தார் தான் உருகி நிற்பாரோ? சத்யன் என்ன ஆவானோ?— இப்படி மனதிலே பதில் இல்லாத கேள்விகள் எழுகின்றன...

நான் இடைக்கிடை இப்பிடி வந்து வார்ட்டிலை நிற்கிறது வழமை ஆகி வருகிறது. வந்திட்டால் சுபி படுகிறபாட்டுக்குக்குறைவில்லை. படிப்பு அது இதெண்டு போகாமல் மூண்டு நேரமும் சாப்பாடு, தேத்தண்ணி சுமந்து, சைக்கிள் வலிச்சு என்னட்டை வர வேணும். இந்த முறை உதவிக்கு மாணிக்கத்தாரும் நிற்கிறார். ஏதும் தொல்லையும் குடுக்கப் பாக்கிறாரோ தெரியாது.

எனக்கு வருத்தம். மனச் சுமைகள் ஆகாது. எதையும் சொல்லாமல் சமாளிக்கத் தான் பார்ப்பாள் சுபி. இவர் உருகி நடிக்கிற நடிப்பு என்னைவிட அவளுக்குத் தான் கூட விளங்குகிறது. அவள் அன்று பயணத்தில் நடந்ததெல்லாம் சொன்ன போது கலங்கிப் போனேன்.

கப்பல் பயணம் திருகோணமலையிலிருந்து கொழும்புப் பயணம். இப்படி போகை

**சஞ்சீவி குறுநாவல்**

யில் இடை வழித் தங்கல்கள் இவற்றுக்கிடையே மாணிக்கத்தாரின் சபலங்கள். எல்லாவற்றையும் நாசூக்காகச் சமாளித்தபடி பலகாலம் காணாத அண்ணனை காண கொழும்பு வந்து சேர்ந்திட்டாள் அவள்.

அண்ணனின் அறையிலே தங்கிவிடலாம் என்ற நினைவிலேதான் அவள் வந்தாள். அறைக் கதவைத் திறக்க முன்னரே பொப் இசை ரேப் றெக்காட்டில் காதைப் பிளந்தது.

மணியை அழுத்தினாள். கதவு திறந்து கொண்டது. உள்ளே அண்ணனும் மூன்று நண்பர்களும் போத்தல்கள், கிளாஸ் சகிதம் இருந்தனர். டீப்போவில் ஒரு சிரிஞ்சும் சில புட்டிகளும் கூட தென்பட்டன.

நீண்ட நாள்களாக அண்ணனைக் காண என ஆவலில் புறப்பட்டு வந்தவள் அவள். வரும் வழியில் மாணிக்கத்தாரே வாழ்க்கையை வெறுக்க வைத்து விட்டார். இங்கே வந்தால் நிலைமை இப்படி?

''யார்இந்தப்புதுக்குட்டி?'' — கேட்டான் ஒருவன். உற்று உற்றுப் பார்த்து குட்டியை அடையாளம் காண முயன்று தோற்றான் அண்ணன். இவள் என்ன செய்வாள்? பாவம்.



இதற்கிடையில் மாணிக்கத்தார் உள்ளே வந்திட்டார். அவரை 'டக்'கெண்டு அடையாளம் கண்டிட்ட சத்யனுக்கு சுபியை — சொந்தத் தங்கச்சியை — மாணிக்கத்தார் அறிமுகம் செய்து வைக்க வேண்டிய நிலைமை.

சுபிக்கு மாணிக்கத்தாரினதும் சத்தியனினதும் உறவுகள் பிடிபடத் தொடங்கின. மாணிக்கத்தார் பார்ட்டியில் பங்கு கொள்ளத் தொடங்கி விட்டார். ஒரே கலகலப்பும் கும்மாளமும், கண்ட கண்ட வார்த்தைப் பிரயோகமும் தான்.

சுபி சங்கடத்தில் நெளிந்தாள். கெட்ட மிருகங்கள் இருக்கிறகூட்டுக்குள்–பொறிக்குள் அகப்பட்டுக்கொண்ட நிலைமைஅண்ணன்அவளைப் பற்றியேகவலைப்படவில்லை. ஒரு வார்த்தை ஆசையாகப் பேசவில்லை. மாணிக்கத்தாரும் அவனும் கட்டி அணைத்துத் தழுவி விழுந்து புரண்டு சாராயத்திலே தோய்ந்தனர்.

மது நெடி வயிற்றைக் குமட்டியது. பயணக்களை பசிவேறு. அங்கே சாப்பிட ஏதும் கிடைக்கும்போல் இல்லை. அண்ணனின் நண்பன் ஒருவனின் பார்வை மிகவும் கேவலமாக இருந்தது. உதட்டைச் சுழிக்கிறான். அடிக்கடி கண் அடிப்பு வேறு. இதுகள் எப்ப போகுங்கள் என்று நினைத்தாள்.

ஏதோ நொறுக்குத் தீனிகளைக் கொட்டிச் சிந்தி மூக்கு முட்டக் குடித்துக் கூத்தாடி முதலில் சத்யன் தான் மயக்கம் போட்ட மாதிரி உறங்கிப் போனான். போதையில் மாணிக்கத்தார் மனதை மேலும் வெறுக்க வைத்தார். இவரை நம்பி வந்தால் இவரும் இப்படிப் போனாரே...!

நண்பர்கள் மூவரும் பார்வையையும் விடுவதாக இல்லை. நிதானமும் இல்லை. நடக்கவே இயலாமல் திணறிக்கொண்டு இருந்தார்கள்.

இவளுக்கோ ஆடை மாற்றக்கூட வழி இல்லை. அப்படியே ஏங்கியபடி இருந்துவிட்டாள். பாத்ரூமை தேடிப் பார்த்தாள் தென்படவில்லை. இரவு 'பொலீஸ் வந்தால்' என்ற ஏக்கம் வேறு.

கதிரையில் இருந்தவள்

(XI ஆம் பக்கம் பார்க்க)

# பீமன் - திரௌபதி கர்வபங்கம்

இறைவன் தன் பக்தர்கள் துன்பத்தில் திளைக்கும் போதெல்லாம், அவர்களிடம் கருணை கொண்டு, அவர்களுக்கு அருள் புரிவது போலவே, தனது பக்தர்கள் கர்வம் கொள்ளும்போது அவர்கள் கொள்ளும் கர்வத்தினால் அவர்களுக்கு அழிவு ஏற்படாத வண்ணம் பகவானே நேரில் வந்து அவர்களைத் தடுத்தாட்கொள்கிறார் என்பதை விளக்கும் மகாபாரதக் கதை இது.

அது பாண்டவர்கள் சூதாடித் தோற்று, வனவாசம் மேற்கொண்டிருந்த காலம். பஞ்ச பாண்டவர்களும், திரௌபதியுடன் துவைத வனம் என்ற வனத்தில் வனவாசம் மேற்கொண்டிருந்த காலம்.

வசந்தகாலத்து இளந்தளிர்களுடன் அளந்தறிய முடியாதபடி, செழித்து வளர்ந்து வானோங்கி உயர்ந்த பசுமையான மரங்களும், மரங்களைச் சுற்றித் தழுவிய பசுங்கொடிகளுமாக, அழகுறத் திகழ்ந்த அந்த வனத்தில், குன்றுகளிலிருந்து குதித்தோடும் அருவிகளில் தேவமாதர்கள் வந்து நீராடிச் செல்வார்கள்.

தேவமாதரை அந்த அளவுக்குக் கவர்ந்த அந்த அழகிய வனத்தில், ஓங்கி வளர்ந்த ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்தபடி, ஆழ்ந்த யோசனையில் இருந்தான் வாயு மைந்தன் பீமன்.

அவன் மனதில், துரியோதனன் அரசவையில் அன்றைக்கு அனுபவித்த அவமானங்களெல்லாம் நினைவு வலம் வந்தன. அவனை அறியாமலேயே அவனுக்குள் சினம் மூண்டு எழுந்தது.



''அடே துரியோதனா! உனக்கு அழிவுக்காலம் வந்து விட்டது. அதனால்தான் அன்றைக்கு நீ அந்த ஆட்டம் ஆடினாய். இரு! இரு! இந்த வனவாசக் காலம் முடிந்த பின் நான் சபதம் போட்டபடி உன் தொடையைப் பிளந்து உன் உயிர[illegible] பேன்; உன் தம்பி [illegible] னனின் உடலைப்பிழிந்து, பெருகும்இரத்தத்தைநாயும், நரியும் குடிக்கச்செய்வேன்!'' என்று பித்தனைப் போல் பிதற்றினான். அப்படி அவன் கோபாவேசத்துடன் பிதற்றியது, அந்த வனத்தில் எதிரொலித்தது. அவன் தன் மனதிற்குள் தனது தோள் வலிமையை எண்ணி மிகுந்த கர்வம் கொண்டான். அவன் கொண்ட கர்வத்தை உணர்ந்த, துவாரகைக் கண்ணன் தனக்குள் குறுநகை புரிந்தார்.

அதே காலம் —

பீமன் கர்வம் கொண்ட [illegible] பொறுத்து, [illegible] வேயப்பெற்ற குடிசை ஒன்றில் அமர்ந்திருந்த திரௌபதியின் மனதிலும் அன்று துரியோதனன். சபையில் ஆன்றோர்களும், அறிஞர்களும் சூழ்ந்திருக்க, பாவி துச்சாதனன் தன் துகிலினை உரித்து, தன்னை மானபங்கப்படுத்த முயன்றதையும், தான் 'கிருஷ்ணா!' என்று அபயக்குரல் கொடுத்ததுமே, கிருஷ்ணபகவான் பல வண்ணப் பட்டாடைகளைத் தந்தருள் புரிந்து, தன் மானம் காத்ததையும் எண்ணிப் பார்த்தாள். அவளுக்குள் 'ஸ்ரீகிருஷ்ண பக்தியில் தன்னை மிஞ்சியவர்கள் யாரும் இல்லை' என்ற எண்ணம் கர்வமெனத் துளிர்த்தது.

இதற்கும் துவாரகைக் கண்ணன் குறுநகை புரிந்தார். அத்துடன் நிற்காமல், தன் பிரியத்துக்கு உரியவர்களின் மனதில் புகுந்துவிட்ட கர்வத்தை களைந்து, அவர்களின் இதயத்தைப் பக்குவப்படுத்த வேண்டி, துவாரகையிலிருந்து, துவைதவனம் நோக்கிப் புறப்பட்டு விட்டார் கிருஷ்ணபகவான்!

திடும் பிரவேசமாகத் தங்கள் முன் வந்துவிட்ட ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டு பஞ்ச பாண்டவர்களும், பாஞ்சாலியும் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

திரௌபதி கண்ணனைப் பார்த்து, ''தாங்கள் மிகவும் களைப்படைந்தவர் போல் காணப்படுகின்றீர்கள். சற்றுப் பொறுங்கள். வெந்நீர் வைக்கிறேன். களைப்புத் தீர நீராடிய பிறகு தாங்கள் உணவு அருந்தலாம்'' என்றாள். கண்ணபிரானும் சரியென்று சொல்லிவிட்டார்.

உடனே பீமன் ஒரு முனிவரிடமிருந்து பெற்ற பெரிய அண்டா நிறைய நீரை நிரப்பிக் கொண்டு வந்தான். திரௌபதி மூன்று கல்லை அடுப்பாக அமைத்து, அதன் மீது பீமன் நிரப்பிக்கொண்டு வந்த அண்டா நீரைவைத்து, கட்டைகள் வைத்து எரித்தாள் அடுப்புத்தான்எரிகிறதே தவிர தண்ணீர் என்னவோ குளிர்ந்தே தான் இருந்தது. பீமன் மேலும் மேலும் மரங்களை வெட்டிக்கொண்டுவர, திரௌபதி அவற்றையும் அடுப்பில் வைத்து எரித்து, எரித்துக் களைத்து விட்டாள். இருந்தும் தண்ணீர் லேசாகக் கூடச் சுடவில்லை.

திரௌபதியும், பீமனும் என்ன செய்வது, ஏது செய்வது என்று புரியாமல் தவித்தபடி இருந்தனர். அவர்கள் தவிப்பை உணர்ந்தவராய் தமக்குள் சிரித்துக் கொண்ட பகவான். ''என்ன பாஞ்சாலி! இன்னுமா வெந்நீர் தயாராகவில்லை. என்னால் பசி பொறுக்க முடியவில்லை. நான் அருவிக்குச் சென்று நீராடி வருகிறேன். உணவு தயார் செய்து வை!'' என்று கூறிக் கிளம்ப எத்தனித்தார்.


உடனே திரௌபதியும், பீமனும் கண்ணன்முன்வந்து, நடந்ததைக் கூறினர். அதைக் கேட்டு, ''அப்படியா?''

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 35



சொற்சிலம்பம் இல. 35
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 06 — 02 — 1998

**இடமிருந்து வலம்**

1. உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்று. 7. பாம்பு வசப்படுத்தும் கருவி. 8. முக்கனிகளுள் ஒன்று. 10. சிரசு. 11. நிலைக்குத்துக்கு மாறானது. 12. தன்மை — பன்மை. 13. மகிழ். 15. தேறல். 16. சரஸ்வதி. 17. சடப்பொருளின் மூன்று நிலைகளுள் ஒன்று. 18. வகுப்பு. 20. பொன். 21. சங்கீதத்துடன் தொடர்புடையது. 23. ராமர் பாலம் கட்ட உதவிய சிறிய பிராணி. 24. மிருகங்களுக்கு தற்காப்பு உறுப்பு; சத்தம் எழுப்பும் கருவியும் கூட.

**மேலிருந்து கீழ்**

1. மனைவியின் தந்தை; அம்மாவின் சகோதரர். 2. சிரி. 3. தபால். 4. கூட்டம் 5. பச்சைக்கிளி. 6. தேகம். 9. பொருள்கள் விற்பனையாகும் நிலையம். 12. பத்துக்குள் ஓர் எண். 13. இப்போது விஞ்ஞானங்களின் அரசி இந்தப் பாடம்தான். 14. பூரணையின் பின் மதி இவ்வாறு ஆகும். 15. வானிலிருந்து வந்த மங்கை. 17. இடப் பெயர்வுக்கு உதவுவது. 19. பலம். 22. கடினமாகிவிட்ட மண்ணின் கூட்டம்.

**சொற்சிலம்பம் 33 — விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. தூமகேது. 5. பிசாசு. 7. துண்டிப்பு. 9. வடி. 10. புத்தகம். 12 பிரதிட்டை. 13. தரவு. 15. தந்தி. 16. கணையாழி. 18. குதி. 19. விண். 20. கல். 21. திரிகல். 22. ராம்.

**மேலிருந்து கீழ்**

1. தூதுவன். 2. மண். 3. கோடி. 4. துப்புரவு. 6. சாக்கடை. 8. புத்தி. 11. தட்சணை. 12. பிரதி. 13. தந்திரி. 14. எழில். 15. தகுதி. 16. கண். 17. யாகம். 19. வில்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: சிவானந்தம் அஸ்வினா,
நக்கா வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு: லூசியன் லோறன்ஸ்,
மே.பா.எஸ்.ஏ.ஈ.இரத்தினராசா,
கரம்பொன், ஊர்காவற்றுறை.

★ மூன்றாம் பரிசு: சக. சுதர்சனக்குரு,
சிவன் கோவிலடி,
ஆவரங்கால், புத்தூர்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 34 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம். எனவே தன்னைக் காத்தலும் அதனால் அடுத்தவருக்காக பாடுபடும் வல்லமையை பெறுதலும் இல்லறத்தின் அம்சம் ஆகிறது.

தன்னை அழித்து — தான் தேய்ந்து— முற்றாகத் தியாகம் செய் என்று இல்வாழ்பவனிடம் போய் வள்ளுவர் சொல்லவில்லை. தனக்கு மிஞ்சித்தான் தானம்! உனதும் குடும்பத்தினதும் தேவைகளையும் சரிவர நிறைவு செய் என்றுவிட்டார்.

குடும்பக் கடமைகளை தனித்தொரு குடும்பமாக நின்றும் செய்துவிடல் இயலாது. எனவே துணைக்குச் சுற்றத்தை அன்பாக வைத்துக்கொள். சுற்றத்தாரை (ஒக்கல்) வேண்டிய வகை பேணி ஓம்பி நடந்துகொள் என்றார்.

விருந்தினர்கள் வந்து குதித்து விட்டால் ஓடி ஆடி உபசரித்து — நிலைமை உணர்ந்து— சமாளிக்க வேண்டியது இல்லறத்தான் கடமை. அவர்களின் தேவையை உணர்ந்து உதவிட வேறு யாரால் இயலும்?

தெய்வத்தைக் கைவிட முடியுமா? கோயிலிலே விழா எடுப்பவர்கள் உதவிக்கரம் நீட்டி நிற்காவிட்டால் பூசைகள் நடைபெற முடியுமா? வீட்டில் இருந்து உதவிகள் கிடைக்காத வேளை ஆலய வாசல் திறக்குமா?

தென்புலத்தார் — இறந்து விட்டவர்களின் ஆத்மசாந்திக்கான தான தருமங்களை செய்யும் வல்லமை குடும்பக்காரனிடம் தான் இருக்க முடியும்.

இவ்வாறு இல்வாழ்பவனின் கடமைகளும் பொறுப்புகளும் கூடிக்கொண்டே போகின்றன. வாசலில் நாயைக் கட்டிவிட்டு வீட்டுக்குள்ளே தனக்கென மட்டும் குடும்பம் நடத்திவிட்டால் அது வாழ்க்கை ஆகாது.

இறந்தவரையும் — தெய்வத்தையும் — விருந்தினரையும் — சுற்றத்தையும் — . தன்னையும் காத்து வாழ வேண்டும்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

—0043

(இல்வாழ்க்கை)

—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [31 - 01 - 1998 முதல் 06 - 02 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| வி சந் கே செ | இராசிச் சக்கரம் | | |
| புத சூ* | | | ரா |
| வெ | | | |

மாற்றம்:

கும்பம் இராசியில் பூரட்டாதி நட்சத்திரம் மாறி வரும்.

அரசியலில்-தேர்தலால் குழப்பநிலை. மக்கள் கலங்கிய பயநிலை விட்டு விட்டு ஏற்படலாம். மாணவர்களும், தொழிலாளர்களும் உரிமைப் பிரச்சினைக் குரல்களை எழுப்புவர். இந்திய அரசியலில் தேர்தலில் திசை திருப்பங்கள். வடக்குத் தலைவர்கள் தெற்கில் செல்வாக்குத் தேடுவர். வன் செயல்கள் அதிகரிக்கும். உலகில் கிழக்கு நாடுகளில் புதிய ஜன நாயக அலை எழுச்சிகள் ஏற்படும். மேற்கு நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளில் புதிய அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிகள் எடுக்கும், ஈராக்கின் அணு உயிர் ஆயுதப் பிரச்சினை ஐ.நா சபையில் புதிய அணுகு முறையில் தலை தூக்க இடம் உண்டு.

**மேடம்:** தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். கொடுக்கல்வாங்கலில் நிதானமாக இருக்கவும். புதிய பல முயற்சிகள் ஏற்படும். படிப்படியான ஆக்கங்களில் ஊக்கமாக இருக்கவும். எதிர்பாலார் உங்களைக் குறை சொல்வார்கள். தொழிலில் ஊக்கத்தைப் பொறுத்து காசுசேரும். புதிய ஆடைகள் வாங்க யோசனைகள் ஏற்படும். வாங்கமாட்டீர்கள்; எதிர்ப்பாலார் வாங்கித் தருவார்கள். பனிகாலம் இரவில் திரிந்து இருமலைத் தேடிக் கொள்ளாதீர்கள். நேரத்திற்கு எதையாவது சாப்பிட்டுக் கொள்ளுங்கள். அல்லது வயிற்றுநோ வரலாம். கண்நோ, உஷ்ணபீடைகள் வரலாம். ஓய்வு அவசியமாகும். காணி பூமி, பொருளால் வேதனை வர இடம் உண்டு. [illegible] வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

**இடபம்;** என்ன அதிகம் யோசிக்கின்றீர்கள்? ஆலயம் என்றும் ஆஸ்பத்திரி என்றும் அலைகிறீர்களா? கடமையைச் செய்யும் பொழுது வெட்க துக்கம் பார்க்க முடியாது அல்லவா? தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிதான். பெரியவர்களின் உதவிகளால் ஓரளவு ஆறுதல் ஏற்படும். காயங்கள் வர இருப்பதனால் வீட்டில் சிறுபிராணிகளின் இழப்புகளைப் பெரிதாக எண்ண வேண்டாம். சிறு பிராணிகளை வளர்ப்பது நல்லது தானே. வீடுமனைச் செலவு ஒன்று ஏற்பட இடம் உண்டு. தந்தைவழியில் துக்கசம்பவங்கள் ஏற்படலாம். தெய்வ அனுக்கிரகம் உள்ளவர்கள் உங்கள் இடங்களில் இக்காலங்களில் உலாவி வருவார்கள். கைகால், நரம்பு, வயிறுநோ சர்வ சாதாரணமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**மிதுனம்:** உங்களைப்பற்றி அதிகம் தற்பெருமை கொண்டு இருக்காதீர்கள். பாவபுண்ணியம் பார்த்தா தொழில் செய்வது என்று கேட்காதீர்கள். எல்லாம் அளந்த அளவுப்படிதான் நடக்கின்றன. மனிதனால் எதுவும் நடக்கின்றதென எண்ணுவதில் பெருமையில்லை. கெட்டித்தனம் பேசியவர்கள், வீரதீரம் செய்தவர்கள் காலசக்கரத்தில் அமிழ்ந்து போய்க் கொண்டிருப்பதை நீங்கள் அறியவில்லையா? எதிர்பாலாருடன் நிதானமாக நடவுங்கள். மனைவி, மக்கள் பிரிந்துள்ளதை எண்ணி வேதனைப்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் நல்லது நடக்காது. வயிறு,— இரத்த அழுக்கம், தலைச் சுற்றுதாவிஏறிவரும். நிதானமாக இருந்து செயற்படவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

**கடகம்:** நீங்கள் அன்பாக இருந்த ஒருவரின் இழப்பு அல்லது சுகயீனத்தால் உங்களுக்கு வேதனையும், சோதனையும் ஏற்படும். சொல்வாக்கு செல்வாக்குகளை ஏற்படுத்தினாலும் கால ஓட்டத்தில் கவலைகளைத் தந்துவிடும். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த பலன்கள் கொடுக்கும். எதிர்ப்பாலாருக்கு நல்லதல்ல. சிலரை விஷபீடைகள் வருத்தும். வெளிநாடு என ஏங்கியபடி காலத்தை விரயமாக்குவீர்கள். இரட்டைமனம் கொண்ட நீங்கள் எதற்காக வேதனைப் படுகின்றீர்கள்? விதிவசப் பட்ட பலன்களால் பொருமியபடி — கலக்கமுறுவீர்கள். நேரத்துடன் நாடியவர்களை வேதனைப் படுத்துவீர்கள். எதற்காக என சிந்தியுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**சிங்கம்:** நீதிக்குமாறான

## ஜோதிட சஞ்சீவி

செயல்கண்டு வேதனை கொண்டிடுவீர். அட்டமத்துச் சனி விதிவசப்பட்ட பலன்களைத் தந்து விடும். ஆலயத்தில் சோதனைகள் அமைந்துவிடும். தர்மப்படி நடந்தால் விட்டுக் கொடுக்க ஒன்றுமில்லை. போலிகள் சூழ்ந்துநின்று கொட்டுமேளம் கொட்டிடுவர். கலங்காமல் செயற்படுங்கள். அடிவயிற்றில் ஒரு நோ வருத்தும். பொருள் பொருள் என வாட்டி, சிறைப்பட்ட மன வேதனை தொடர்ந்தாலும்


**மகாதேவா ஜோதிடம்**
நல்லூர்


செய்யாத ஒன்றிற்கு சூளுரைத்து நின்றிடுவீர். சீட்டு எனச் சில பேர் உங்களை மாட்டிவிட்டு வேடிக்கை பார்த்திடுவர். கண், நெஞ்சு சளி நோ வைத்தியம் செய்திடவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**கன்னி:** கோபித்து என்ன செய்வது? படிப்படியாகப் பலதையும் பெற்றுவிடும் உங்களுக்குப் பொறுமை அவசியமாகும். மேடு பள்ளம் நிறைந்ததுதானே உலகம்? தொழில் ஸ்தானத்தில் மறைமுகப் பகைமைகளால் கஷ்டங்கள் ஏற்படச் செய்யும். வீடு, மனை, பொருள், வாகனம், தொழில் இடங்களில் பலவசதிகள் ஏற்படும். செலவுகளும் அதிகரிக்கும். நாடிவந்த ஒருஜீவனை நீங்கள் சாடிவிட்ட கடும் சொற்களை மாறி மாறி யோசிக்க கவலைகள் தந்திடும் காலம் இது. கலங்காமல் குலதெய்வ

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குள்ள நரி

நரி தந்திரத்திற்கும், திருட்டுத்தனத்திற்கும் பெயர் போனது. வயல்வெளிகளிலும் அடர்ந்த புதர்களிலும், காடுகளிலும், கற்பாறைகளின் இடுக்குகளிலும் நரிகள் பெரும்பாலும் வாழும்.



சிறிய நரிகளைக் குள்ள நரி என்றும் சொல்வதுண்டு. குள்ளநரி மனிதரையோ, ஆடு – மாடுகளையோ எதிர்ப்பதில்லை; எதிர்க்கும் வலிமையும் அதற்கு இல்லை.

ஆட்டுக்குட்டிகளையும், கோழி, கோழிக் குஞ்சு முதலிய சிறிய உயிரினங்களையும் கள்ளத்தனமாகப் பிடித்துக்கொண்டு போய்த்தின்பதில் குள்ள நரி பெயர் போனது. பெரும்பாலும் நரிகளுக்கு நண்டுகளைப் பிடித்துத் தின்பதில் பெருவிருப்பம்.

நாய்களைப்போலவே நரிகளுக்கும் உடலமைப்பு அமைந்திருக்கிறது. ஆனால், நரிகளின் வாலில் மயிர் அடர்ந்திருக்கும். நரிகளுக்கு நான்கு கால்களும், கால்களின் நுனியில் நகங்களும் இருக்கின்றன. கால்கள் குட்டையானவை. இருப்பினும், நரி மிக விரைவாக ஓடிப்பதுங்கும்.

**பிராணிகள் உலகம்**

நரிகள் பகற்காலங்களில் இரை தேட வெளியில் வருவதில்லை. இராக் காலங்களிலேயே, வெளியில் செல்லும். ஆட்டுமந்தைகள் அடைக்கப்பட்டிருந்தால், மெல்லச் சென்று ஆட்டுக்குட்டிகளைத் தூக்கிச் சென்றுவிடும்.

பெரும்பாலும் இராக் காலங்களில் பல குள்ள நரிகள் ஒன்று சேர்ந்து ஊளையிடும்.

தந்திரமாகச் செயலாற்றுபவரையும், வஞ்சகமாகப் பிறர் பொருளைக் கவர்பவரையும் 'குள்ள நரி' என்று சொல்வதுண்டு.




## குடை

வண்ண வண்ண குடைபார்
வடி வான குடைபார்;
கண்ணை கவரும் குடைபார்;
கண்ணா ஓடி வந்துபார்;

வெயில் வந்தாலும் பயமில்லை.
மழை வந்தாலும் பயமில்லை,
பைய பைய பிடித்துக்கொண்டு
பாடிப் பாடி நடக்கலாம்.

ஆசை அப்பா அன்புடன்
அதிக விலை கொடுத்துமே
பாசத்தோடு வாங்கித் தந்த
பிறந்த நாளின் பரிசுபார்.

ஏழாலை. ம. பிருந்தா

## பள்ளிக்கூடம் திறந்தாச்சு!

பள்ளி விடுமுறை முடிந்தாச்சு
பள்ளிக்கூடமும் திறந்தாச்சு
பள்ளியில் என்னை சேர்த்தாச்சு
படித்திடப் புத்தகம் கிடைச்சாச்சு!

தினமும் காலையில் குளித்திடுவேன்
தூய ஆடைகள் அணிந்திடுவேன்
தினசரி கடவுளை வணங்கிடுவேன்
திருவள்ளுவர் சொல்படி நடந்திடுவேன்!

பள்ளி தினமும் சென்றிடுவேன்
பாடம் நன்றாய்ப் படித்திடுவேன்
பள்ளியில் ஒழுக்கமாய் நடந்திடுவேன்
பரீட்சையில் தேர்வு பெற்றிடுவேன்!

தொகுப்பு: ம. அக்ஷான்
ஆண்டு—1,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பாட்டு விளையாட்டு

நீண்ட செவியன்
நான் தம்பி!
நெருப்பு விழியன்
தான் தம்பி!
கூண்டில் அடைத்து
வைத்தாயே!
குந்தி இருக்கின்றேன்
காண் தம்பி!
வெளியில் என்னை
விட்டுப்பார்!
வேகத்தை நீ
கேட்டுப்பார்!

வழியில்......
வந்தாலே
எனக்கு நித்திரை வரும்
தம்பி!

**நீண்ட செவியன் யார்?**
**வழியில் வந்தது யார்?**


- பி. பிரேம்காந்த் -
(யாழ்.பரி.யோவான்கல்லூரி)

## விடை

நீண்ட செவியன் —முயல்.
வழியில் வந்தது — ஆமை.


## உங்களுக்குத் தெரியுமா?

1)



இங்கு எத்தனை அம்புக் குறிகள் உள்ளன?

2)



மேலே உள்ள நிலத்தை நான்கு சமபங்குகளாகப் பிரிக்க வேண்டும். உங்களால் முடியுமா?


3)




இந்தத் தபால் தலையின் வெளிப்புறத்தில் எத்தனை கால்வட்டங்கள் மற்றும் அரைவட்டங்கள் உள்ளன? இவை அனைத்தையும் முழு வட்டங்களாக இணைத்தால் எத்தனை முழு வட்டங்கள் கிடைக்கும்?
(விடை XI ஆம் பக்கத்தில்)


## எண்ணிப் பாருங்கள்!

1)



மேலேயுள்ள படத்தில் எத்தனை வட்டங்கள் உள்ளன. எண்ணிப்பாருங்கள்.

2)



மேலேயுள்ள படத்தில் எத்தனை வட்டங்கள், சதுரங்கள் மற்றும் செவ்வகங்கள் உள்ளன?

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

## முயன்று பாருங்கள்

1) இது அள்ளப் பயன்படுவது; நான்கு எழுத்துக்களை கொண்டது. இரண்டாவது எழுத்து நீங்க மலைநாட்டு நகரம் வரும். நடு இரண்டு எழுத்தும் நீங்க கௌவும் படி ஏவும். இரண்டாவது எழுத்தும் இறுதி எழுத்தும் நீங்க உடலில் உள்ள உறுப்பாகிவிடும். அள்ளப் பயன்படுவது எது?

2) இது முத்தமிழில் ஒன்று. இதனை மக்கள் பார்க்க விரும்புவர். நான்கு எழுத்துக்களை கொண்டது. இரண்டாவது எழுத்து அகல, அச்சத்தைத் தரும் சர்ப்பம் வரும்; படையும் நடுங்கும். நடு இரண்டு எழுத்தும் நீங்க நம்மைக் குறிக்கும். மக்கள் விரும்பும் அது எது?

3) வண்டி இழுக்கப்பயன்படுவது இது. மூன்று எழுத்துக்களைக் கொண்டது. முதலெழுத்து நீங்க கடலில் வருவது ஆகிவிடும். நடு எழுத்து நீங்க நாய் செய்வதில் ஒன்றாகும். இறுதி எழுத்து நீங்க பாயும். வண்டி இழுக்கப் பயன்படுவது எது?

4) இராசிகளில் ஒன்று. நான்கு எழுத்துக்களைக் கொண்டது. முதலெழுத்து நீங்க உடல் உறுப்பு ஆகிவிடும். இரண்டாவது எழுத்து நீங்க தாவரம் ஆகிவிடும். மூன்றாவது எழுத்து நீங்க ஒரு நட்சத்திரம் ஆகிவிடும். அந்த இராசி எது?

5) இலங்கையில் உள்ள மாவட்டங்களில் ஒன்று; மூன்று எழுத்துக்கள் கொண்டது. முதலெழுத்து நீங்க ஓட்டை ஆகிவிடும். நடு எழுத்து நீங்க யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஓர் இடமாகும். அம்மாவட்டம் எது?

வானம்பாடி யோ. தினேஸ்குமார்
(ஆண்டு 10, ஹாட்லிக் கல்லூரி)

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

## கண்டுபிடியுங்கள்!

கீழ்வரும் 11 வினாக்களுக்கும்விடைகள் கீழே குறிப்பிடப்பட்ட—உண்மையையே விரதமாகக் கொண்டவரின் பெயரில் ஒளித்துக் கொண்டிருக்கின்றன. எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

அரிச்சந்திரன்

1. காட்டின் ராஜாவுக்கு மறுபெயர்.
2. வண்ண நிலவு.
3. மறைவில் தீட்டப்படுவது.
4. முக்கிய தெருக்கள் இணையும் இடம்.
5. விளக்கெரிக்கப் பயன்படுவது.
6. 'கூட' என்பதைக் குறிப்பது.
7. சம்மதம் என்பதற்கான குறிப்புச்சொல்.
8. சோர்வு என்பதைக் குறித்து நிற்பது.
9. 'மாலைப்பொழுது' என்பதைக் குறிப்பது.
10. சாப்பிடு எனக் கூறுவது
11. இப்பெயரில் அழகியும் ஒருத்தி ஒழிந்துள்ளாள்.

துரைசிங்கம் கேசவன்
(ஆண்டு 7, சாவகச்சேரி, இந்துக்கல்லூரி)

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித 'குளோனிங்' முறைக்கு ஐரோப்பிய நாடுகளில் தடை!

மனிதர்களை 'குளோனிங்' முறையில் உற்பத்தி செய்யும் முறை ஐரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் டென்மார்க், எஸ்தோனியா, பின்லாந்து, பிரான்ஸ், கிரீஸ், ஐஸ்லாந்து, இத்தாலி, லாட்வியா, லக்சம்பர்க், மாசிடோனியா, மோல்டேவியா, நோர்வே, போர்த்துக்கல், ருமேனியா, சான்மாரினோ, ஸ்லோவேனியா, ஸ்பெயின், சுவீடன், துருக்கி ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

இந்த நாடுகளின் அரசுகள் ஒப்பந்தத்தை அங்கீகரித்ததும் இச்சட்டம் அமுலுக்கு வரும்.

மனித உடலில் உள்ள சாதாரண கலங்களைக் கொண்டு குழந்தைகளை உருவாக்கும் 'குளோனிங்' முறையை தடை செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜேர்மனியும் பிரிட்டனும் மறுத்துவிட்டன.

ஹிட்லர் காலத்தில் உயர்ந்த இனம் ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்றதையொட்டி அத்தகைய கரு ஆய்வுகளைத் தடை செய்ய ஜேர்மனியில் ஏற்கெனவே சட்டம் உள்ளது.

அச் சட்டத்தை விட புதிய சட்டம் ஒன்றும் கடுமையானதல்ல; எனவே புதுச்சட்டத்தில் கையெழுத்திட விரும்பவில்லை என்று ஜேர்மன் பிரதிநிதி அறிவித்துள்ளார்.

சுதந்திரமான ஆய்வுக்கு தடை விதிப்பதில்லை என்ற கொள்கையின்படி நாங்கள் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்று பிரிட்டன் கூறியுள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்கான அடிப்படை நடைமுறை மரபுகளை அமெரிக்கா, ஜப்பான், கனடா, வத்திக்கான் நிர்வாகம் ஆகியவை ஒன்று சேர்ந்து உருவாக்கியுள்ளன.

இந்த நடைமுறை விதிகளின் அடிப்படையில் ஒப்பந்தம் ஒன்றைத் தயாரிக்க ஒக்ரோபர் மாதம் முடிவு செய்யப்பட்டது.

மனிதர்களைக் 'குளோனிங்' செய்வதற்கு சர்வதேச அளவில் தடை விதிக்க வேண்டும் என்று பிரெஞ்சு அதிபர் சிராக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித 'குளோனிங்' ஆய்வுகளை அமெரிக்க அதிபர் கிளின்ரன், அமெரிக்க சுகாதாரச் சேவைத்துறை அமைச்சர் டோனா ஈ சாலாலா ஆகியோர் கண்டனம் செய்துள்ளனர்.

மனித 'குளோனிங்' ஆய்வுகளை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ள ரிச்சர்ட் சீட் ஒரு பைத்தியக்கார விஞ்ஞானி என்று சாலாலா கூறினார்.

மனித 'குளோனிங்'கைத் தடைசெய்யும் சட்ட மசோதாவைத் தாக்கல் செய்யப் போவதாக அமெரிக்கக் குடியரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான டிக் ஆர்மே கூறியுள்ளார்.

கிளின்ரனும் தடைச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். அவரது கருத்தை நான் ஆதரிக்கின்றேன் என்றார் டிக். ★

# வழிகாட்டி....

(V ஆம் பக்கத் தொடர்)

வீட்டில ஒரு வாளி கூடத் தூக்க விடாமல் நான் என்ர பிள்ளையை வளக்கிறன். நீங்க என்னெண்டா இஞ்ச உள்ள வேலையெல்லாம் என்ர பிள்ளையைக்கொண்டு தான் செய்யிறியள் போல. எந்தப் பனி வாத்தி கதிரை தூக்கச் சொன்னவனாம்''

சிவபாதத்தாரின் சீறல் காரியாலயம் கடந்து, பக்கத்து வகுப்பெல்லாம் வரம்பு கடந்தது. தன்மனதை கட்டுப்படுத்திக் கொண்டு பக்கத்து வகுப்பிலேயே நித்தி ஆசிரியரும் இருந்தார்.

''கொஞ்சம் மெல்லமாக் கதையுங்கோ. ஆத்திரப்பட்டு ஒண்டும் நடக்காது. கொஞ்சம் அமைதியாய் இருங்கோ பிளீஸ்......'' கண்ணியத்துடன் அதிபர் கூறினார்.

''ஆர் அந்த நித்தி. வாத்தி புதுசா வந்தவராம். அவரை ஒருக்கா நான்பாக்க வேணும். இப்ப புதுசா எடுபட்ட ஆக்களோ......அவை தான் துள்ளியடிச்சுக் கொண்டு திரியினம். படிப்பு எண்டா என்னெண்டு தெரியாததுகள் எல்லாம் படிப்பிக்க வெளிக்கிட்டா இப்படித்தான் ஒருக்கா அவரைக் கூப்பிடுங்கோ...ட''

நித்தி ஆசிரியரை இப்போது அழைத்தால், வரப்போகும் பிரச்சினைகளை தனது அனுபவத்தே கொண்டார் அதிபர். அவர் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. சற்று மௌனமாக இருந்து விட்டு ''இஞ்ச பாருங்கோ வதனிக்கு நீங்க நினைக்கிற மாதிரி பெரிசா எதுவும் நடக்கவில்லை. இந்த சின்னப்பிரச்சினைக்கெல்லாம் அடிதடி எண்டு வந்தால், நாங்கள் என்னெண்டு பாடசாலையை வளர்த்து எடுக்கிறது? பிள்ளைகள் உயிருள்ள சீவன்கள். இப்படியான சின்ன சின்னப் பிரச்சினைகள் வரும்தான். இதையெல்லாம் 'சீரியஸ்சா' எடுக்காதேங்கோ. கொஞ்சம் எங்களோட ஒத்துப் போங்கோ. பிளீஸ்......

அதிபரின் பண்பான வார்த்தைகள் கூட சிவபாதத்தாரை சிந்திக்க விடவில்லை.

''நீங்க இப்ப நித்தி வாத்தியைக் கூப்பிடப் போறியளோ இல்லையோ. சரி நீங்க கூப்பிடாட்டிவிடுங்கோ. நான் ஆளை வெளியாலை பார்த்துக்' கொள்ளுறன்'' சிவபாதத்தார்சீறிக் கொண்டு புறப்பட்டார். அதிபர் அமைதியானார்.

வகுப்பிலிருந்த நித்திக்கு இழந்த பொறுமை ஆறிக்கொண்டிருந்தது. இப்ப இவரோடு முகங்கொடுத்தால் பிரச்சினை இன்னமும் கூடும் என்று தனக்குத் தான் சமாதானம் சொல்லிக் கொண்டார்.

நித்தி ஆசிரியர் இருந்த அதே வகுப்பில் தான் வதனியும் இருந்தாள். தனது அப்பாவின் அநாகரிக செயலையிட்டு விம்மி விம்மி அழுது கொண்டாள். நித்தி ஆசிரியரிடம் அப்பா சார்பாக மன்னிப்புக் கேட்டால் கூட தன்னுடைய மனம் ஆறப் போவதில்லை. இருந்தாலும், அதையாவதுசெய்ய வேண்டும் என்று அவள் மனம் அங்கலாய்த்தது.

''சேர்...மன்னிச்சுக் கொள்ளுங்கோ...சேர் எங்கட அப்பா இப்படித்தான்...'' என்றபடி 'ஓ' என்று அழத் தொடங்கி விட்டாள் வதனி.

ஏனைய மாணவர்களின் முகங்கள் கருணைக் கண் கொண்டு ஆசிரியரையும், வதனியையும் மாறி மாறி உற்று நோக்கின...

''சரி, சரி பிள்ளை நீ ஏன் கவலைப்படுகிறாய். எல்லாம் பிரச்சினையில்லாம நான் சமாளித்துக் கொள்ளுறன். நீ அழாத...''

இப்படிப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள் எப்படி உருப்படப் போகிறார்கள்? சரியான வழிகாட்டல் இல்லையெண்டால் இந்தப் பிள்ளைகளின் எதிர்காலமும் பாழாய்த்தான்போகும்—என தனக்குள் எண்ணியபடி காரியாலயம் நோக்கிச் சென்றார் நித்தி.

''மிஸ்ரர் நித்தி என்ன கடுமையா யோசிக்கிறீர் 'டோன்ற் திங் ரூ மச்'' என்றார் அதிபர்.

''இல்லை சேர்...''

''ஒண்டுக்கும் யோசிக்காதையும். பாடசாலையெண்டால் இப்படியான பல பிரச்சினைகள் வரத்தான் செய்யும். எல்லாத்தையும் 'மனேஜ்' பண்ணிக்கொண்டு போகத்தான் வேணும். மனதைத் தளர விடாதையும்...''

''இல்லை சேர். இவள் யாலை ஏதாவது...''

''அப்படி ஒண்டும் நடக்காது நித்தி. இவற்றை துள்ளல் இவ்வளவு தான். நீர் யோசிக்காதையும்...'' அதிபர் உற்சாகப்படுத்தினார்.

மனதைத் தெம்பாக்கிக் கொண்டு தனக்குள் யோசித்தார் நித்தி. சிலவேளை வெளியிலை வைச்சு எனக்கு கையை வைச்சிட்டா என்ன செய்யிறது? அப்படி வைச்சாலும் நானும் நிண்டு அதிலை புடுங்குப்படுகிறது அழகில்லை. சனம் என்ன நினைக்கும்...... ம்... கராட்டி வகுப்பிலை எத்தனை பட்டிகள் எடுத்து வைச்சிருக்கிறன். என்ர கை வரிசையையும் காட்டலாம் எண்டா இந்த ஆசிரியத் தொழில் இந்த விசயங்களில் என்ரை கையைக் கட்டிப் போட்டுது' என்ற சின்னத் தனமான எண்ணமும் ஒரு முறை நித்திக்கு வந்து மறைந்தது.

★ ★ ★

நித்தி ஆசிரியர் எதிர்பார்த்தபடி எதுவித பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால், வதனி மறுநாள் தொடக்கம் பாடசாலைக்கு வரவில்லை. வதனியின் நண்பிகளிடம் நித்தி ஆசிரியர் விசாரித்தார்.

''அவான்ரை அப்பா மறிச்சுப் போட்டார் டேகிளாசிற்கு அனுப்பிப் போட்டாராம் சேர்''

'எங்க ரியூசனுக்கோ...ம்... உருப்பட்ட மாதிரித்தான். சீ என்ன சனம்? கொஞ்சக் காசும் ரியூசனும் இருந்தால் கல்வியை விலைக்கு வாங்கலாம் எண்டு நினைக்குதுகள். கல்வியின் பரிதாபம் இப்படிப் போச்சு. இதனால தான் வாத்திமாருக்கும், பாடசாலைக்குரிய மகிமைகள் அருகிப்போச்சு போல. இது எங்க போய் முடியுமோ? காசு இருந்தால் கல்வியை கண்ட இடத்திலை எல்லாம் பெறலாம் எண்ட நிலை எப்ப மாறுதோ அப்ப தான் கல்வியின் மறுமலர்ச்சிக்கு இடம் இருக்கும் போல...' எனத் தனக்குள் குமைந்து கொண்டார் நித்தி ஆசிரியர்.

''சரி, சரி இண்டைக்கு புதுப்பாடமெல்லே எடுங்கோ பிள்ளைகள். என்ன பாடம்''?

''வழிகாட்டிகள் சேர்''

(யாவும் கற்பனை)

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

வழிபாடு குற்றங்களைக் களைந்து விடும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி.

**துலாம்:** வேகமான நிலைகள் ஏற்பட்டாலும் எல்லாவற்றிலும் சாதனைகள் செய்யலாம் எனச் சிந்திக்க முடியாது அல்லவா? நண்பர்களையோ சொந்தக்காரர்களையோ அதிகம் நம்ப முடியாது, பொருளில், தொழில் ஸ்தானத்தில் பகைமைகள் ஏற்பட இடம் உண்டு. அடிக்கடி மனம் சஞ்சலம் கொடுக்கும். நம்பியவர்கள் மோசம் செய்யும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும். அரசாங்கத்துறை அதிகாரிகள் ஆதரவு தருவர். வயிற்றில் வலி, கைகால் தாக்கம், சலத்தில் பிழை, அதிக களைப்பு என்பவற்றுக்கு வைத்திய உதவிகள் ஓரளவு சுகத்தைத் தந்து விடும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி.

**விருச்சிகம்;** உங்கள் குடும்பத்தினருக்காக. நீங்கள் போராடாமல் இருக்க முடியாது. அயலவர்களையும் நம்ப முடியாது. போகவிட்டுப் புறம் சொல்லி வேதனைகள் தந்திடுவர். பொருளில் எவரைத்தான் நம்பமுடியும்? வெட்டு ஒன்று, பதில் ஒன்று என நேரடியாகப் பேசி உடனுக்குடன் பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றாலும் போட்டி பொறாமையால் ஒன்றைப் பலதாக்கிச் சோடித்து உங்கள் தன்மானத்திற்கு சோதனையும், வேதனையும் தந்திடுவர். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் உண்டு. உடல் களைப்பு அடிக்கடி கொடுத்தாலும் உள்ளத்தில் தெளிவாகத்தான் இருப்பீர்கள். பொருளில் அவதானம் தேவையாகும்.

★ அதிர்ஷ்டநாள்; திங்கள்.

**தனுசு:** உங்கள் வாழ்வில் எதிர்பாராத திசை திருப்பங்கள், பயப்பிராந்திகளால் ஏற்படும். செய்யும் தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களால் உதவிகள் கிடைக்கும். வாக்குச் சாதுரியத்தால் சமாளித்துக் கொள்ளுவீர்கள். மனைவி வழியால் பொருள் அல்லது சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினைகள் அடிக்கடி கொடுக்கலாம். மருமக்கள், மாமன் வழியினருக்கு மாற்றங்கள் ஏற்படும். பொருளில் களவு, வேதனைகள் ஏற்படலாம். கவனமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வெள்ளி.

**மகரம்:** நீங்கள் கடமை, கட்டுப்பாடு மிக்கவர்கள்; எதையும் சாதிக்கும் ஆற்றல் மிக்கவர்கள். தொழில் ஸ்தானத்தில், பொருள் நிலையில் மாற்றங்கள் கொடுக்கும். படிப்படியான மாற்றங்கள் கொடுக்கும். நீங்கள் உறுதியுடன் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சியுங்கள். சொந்தபந்த பாசத்தால் பல பிரச்சினைகள் உருவாகியபடி இருக்கும். மற்றவர்களின் புகழ்ச்சிக்கு மயங்காத நீங்கள் சமூகத்தில் இக்காலத்தில் நிதானமாக நடந்து கொள்ளவும். உடல் நிலையில் சலம், மலம், வயிறு ஆகியன சம்பந்மாக தாக்கம், கைகாலில் உளைவு கொடுக்கலாம். பொருள் வரவு, முயற்சிகளை ஊக்கப்படுத்தி நிதானப்படுத்தி வரவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

**கும்பம்:** எல்லோரும் உங்களை மதித்து நடப்பார்கள். ஆனால் நீங்கள் நிதானமாக நடக்க வேண்டும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும் காலமாகும். மனச்சஞ்சலம், வேதனை, சோதனைகளிலிருந்து மெல்ல மெல்ல விடுபடும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் உங்கள் ஊக்கமும் நிதானமும் பல பிரச்சினைகளைத் தணித்து செயற்படுத்தும். நல்லவர்களுக்கு சோதனை வருவது இயற்கைதானே! இனஜனமும், அயலவர்களும் வேதனை தருவர். ஏழரைச் சனீஸ்வரன் தாக்கத்தால் எந்த விஷயங்களிலும் ஒரு பிடிப்பற்ற தன்மை இருக்கும். தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: ஞாயிறு.

**மீனம்;** அரசியலில் நிதானமாகவும், நண்பர்களுடன் பொருளில் கவனமாகவும் இருக்கவும். வீண்பகை, பயம், எதிரிகளால் வேதனை விதி, வசப்பட்ட பலன்கள் நடக்கும் காலமாகும். எதையும் நாம்தான் எதிர்கொண்டு சமாளிக்க வேண்டும். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை மாறிமாறி நடக்கும். உடல் களைப்பு, புத்திரருக்காக செலவு, வாகன சுகமும், செலவுகளும் மாறிமாறி கொடுக்கும். விஷ பீடைகள். காயங்கள், சிறை போன்ற துன்பங்கள் ஏற்படலாம். எதிலும் அலைச்சல், கைகால் உளைவு, மறதி, சளித் தொல்லை என்பன கொடுத்துக் கொண்டிருக்கும் காலமாகும். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்; திங்கள்.

# வேண்டுதல்....

(V ஆம் பக்கத் தொடர்)

படப்பிடிப்புக் கருவிகள் அந்தக்காட்சியை இலாவகமாக ...தன்னுள் வாங்கிக் கொண்டன. தன் வேலையை முடித்து விட்டு மீண்டும் உயரக் கிளம்பி மறைந்தது வானூர்தி.

பக்தர்களின் ஆரவாரங்களைக் கிழித்துக் கொண்டு மிதுனனின் அழுகை ஒலித்தது. அவன் விழிகளுக்குள்ளே உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தது. குண்டுச் சத்தங்கள் காது மடல்களைக் கிழித்தன. குருதி தோய்ந்த தசைத் துண்டுகளாக சிதறிக் கிடந்தாள் அவன் தாய் ராசாத்தி. அதன் நடுவே தவழ்ந்த நினைவுகள் விழிகளைத் துழாவிக் கொண்டிருந்தன. அழுதவாறே சிறிது கண்களைத் திறந்து பார்த்தான். தீர்த்தக் கேணியில் மிதந்து கொண்டிருந்த செவ்வரத்தம் பூக்கள்... அவனுக்கு மட்டும் இரத்த விம்பங்களாகவே தென்பட்டன. மீண்டும் கண்களை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தான்.

பக்த்ர்'களை விலக்கிக் கொண்டு வாசலுக்கு வந்த சின்ராசு வீதியை நோக்கி நடக்கத் தொடங்கினான். மிதுனன் இன்னும் தோள்களிலே கிடந்தவாறு அழுத வண்ணமே இருந்தான். வீதியில் ஏறியபின் ஒருமுறை கோயிலைத் திரும்பிப்பார்த்தான் சின்ராசு. வெளி வீதியிலே தவறி வீழ்ந்த பூக்களை மிதுனன் வயதை ஒத்த நாலைந்து சிறுவர்கள் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்தனர். கோயிற் கோபுரத்தை நோக்கி கைகூப்பியவாறே வேண்டிக் கொண்டான் சின்ராசு.

''முருகா... இந்தக் குழந்தைகளையும் அழ வச்சிடாத...!'' ★

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகள் இறங்குவதி...

(VII ஆம் பக்கத் தொடர்)

எப்படி மேசைமீது தலை வைத்து உறங்கினாளோ தெரியாது. விழித்தபோது நேரம் இரவு ஒரு மணி. எல்லாரும் ஆடை அவிழப் போதையில் புரண்டு கிடந்தனர். காட்சி சகிக்கவில்லை. வெளிச்சத்தை நிற்பாட்டி விட்டு மீண்டும் மேசை மீதே தஞ்சம் ஆனாள்.

உறக்கம் வரவில்லை. அவர்களின் புலம்பல்கள் வேறு தொடங்கிவிட்டன. இருட்டில் எழும்பி நடக்க முயன்ற ஒருவன் தடுக்கி இவள் மீது விழுந்தான்.

''அட குட்டியா? இன்னும் படுக்கல்லையா?''

இவளுக்குப் 'பகீர்' என்றது. அதற்கிடையில் மாணிக்கத்தார் எழும்பி லைற்றைப் போட்டுவிட்டார். இவளை சாப்பிடச்சொல்லி அந்தச் சாமத்தில் பிஸ்கட்டைக் கொடுத்தார்.

அவள் பாத்ரூம் இருக்குமிடம் விசாரித்து வெளியே இறங்கினாள். இருட்டில்ஏக்கமாக இருந்தது. துணைக்கு மாணிக்கத்தாரை கூப்பிட்டாள். அவர் கைகோத்து வெளியே இறங்கத் தயாரானார். வெடுக்கென்று தன் கையைப் பிடுங்கிக்கொண்டு ஒரு பார்வை பார்த்தாள்.

ஒருபடி போய் பாரத்தை இறக்கிவிட்டு வந்தாள். மனச்சுமை ஏறிக்கொண்டே போனது.

ஒருவாறு விடிந்துவிட்டது. நண்பர்கள் மூவரும் முதலில் எழும்பி விட்டனர். மாணிக்கத்தார் அவங்களின் காதுகளில் ஏதோ இரகசியம் பேசினார். இவள் வாசலுக்கு வெளியே நிற்கவும்—அவர்கள் உடுப்பு மாத்திக் கொண்டு அசுகை இல்லாமல் புறப்பட்டுவிட்டார்கள். மாணிக்கத்தாரும் போய் விட்டார்.

எட்டு மணிக்கு சத்யன்—புரண்டு புரண்டு முனகி ஒருபடி விழித்தான். 'சுபி எப்ப வந்தனி?—' என்று கேட்டு கண்ணீர் விட்டு அழுதான்; கட்டிப் பிடித்தான்,

இவளால் எதையும் வாய் திறந்து கதைக்க இயலவில்லை. எல்லாம் எதிர்பார்ப்புக்கு மாறாக இருந்த அதிர்ச்சியில் கலங்கிப்போய் இருந்தாள் அவள். எந்தச் சமாதானமும் அவளிடம் எடுபடாது.

வீட்டு நிலைமைகளைச் சொல்லி அழுதாள். தான் வந்து இரவு பட்டதை சொல்லி அழுதாள். அவனும் சேர்ந்து அழுதான். மன்னிப்புக் கேட்டான். இனி இப்படி நடக்காது என்று அவளிடம் உறுதி கூறினான். அன்று அவன் கம்பஸுக்குப் போகவில்லை. இவளுடன் கூட திரிந்து கொழும்பைச் சுற்றிக் காட்டினான்.

வழியில் ஒரு நண்பனாம்—''என்ன மச்சான் இண்டைக்கு ஒரு அசல் காய் கிடைச்சிருக்கு!?''—எண்டதும் இவள் அதிர்ந்து போனாள். அண்ணனின் போக்கு மேலும் தெளிவாக புரிகிறது. அவமானம் தாங்காமல் தலைகுனிந்து நின்றாள்.

அன்றுமாலை மீண்டும் அவர்கள் வந்தார்கள். கூடவே இரு பெண்களும் வந்தார்கள். இவள் மீண்டும் தனித்தாள். இவளையும் குடிக்கச் சொல்லிவந்தபெண்கள் வற்புறுத்தினார்கள். அண்ணன் பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஆடை அவிழ ஆளை ஆள் மாறி மாறி முத்தம் இட்டார்கள். போதை ஏற ஏறச் செயலற்றுத் தனித் தனி புலம்பத் தொடங்கினார்கள். மாணிக்கத்தாரும் வந்துவிட்டார். இதையெல்லாம் போய் அம்மா இருக்கும் நிலையில் அவள் சொல்லமுடியாது. தானே சுமக்கவேண்டிய பரிதாபம்.

தெளிவாக முடிவொன்றை அவள் எடுக்கிறாள்.


(தொடரும்)

## விடைகள்

iX ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பக்கத்தில் வெளியாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

உங்களுக்குத் தெரியுமா?

1. 25 அம்புக்குறிகள்.
2.



3. கால் வட்டங்கள்=4
அரை வட்டங்கள்=34
முழு வட்டங்கள்=18

எண்ணிப் பாருங்கள்

1. நான்கு வட்டங்கள்.
2. வட்டங்கள்=10
சதுரம்=01
செவ்வகங்கள்=07

முயன்று பாருங்கள்

1. கரண்டி.
2. நாடகம்.
3. குதிரை.
4. மகரம்.
5. பளை.

கண்டுபிடியுங்கள்

1. அரி.
2. சந்திரன்.
3. சதி.
4. சந்தி.
5. திரி.
6. அதி.
7. சரி.
8. அசதி.
9. அந்தி.
10. தின்.
11. ரதி.

# பீமன், திரெ..

(VII ஆம் பக்கத் தொடர்)

என்று வியந்தது போல் நடித்த கண்ணன், அவர்களை அழைத்துக் கொண்டு, அடுப்பிருந்த இடத்திற்குச் சென்றார். உடன் தர்மர், அர்ஜுனன், நகுலன், சகாதேவனும் சென்றனர்.

கிருஷ்ணர், அந்தஅடுப்பின் மீதிருந்த தண்ணீர் அண்டாவைப் பார்த்து, ஒன்றும் புரியாதவர்போல், ''பீமா! இந்த அண்டாவை கீழே சாய்த்துவிடு'' என்றார். பீமனும் அப்படியே சாய்த்தான். சாய்த்துக் கொட்டிய நீரிலிருந்து ஒரு தவளை வெளிப்பட்டது.

அதை பீமனுக்கும் திரௌபதிக்கும் சுட்டிக்காட்டிய கண்ணன். ''நீங்கள் எவ்வளவு முயன்றும் தண்ணீர் சூடேறாமல் போனதற்குக் காரணம் இந்தத் தவளைதான். பீமன் அண்டாவில் நீரை நிரப்பியபோது, இதுவும் அதனுள் சென்று விட்டது. அடுப்பில் வைத்ததும் அந்தத் தவளை சிறிதும் அச்சம் கொள்ளாமல் மனோவலிமையுடன், ஆழ்ந்தபக்தியுடன், என்னை வணங்கியது. அதனால்தான் நீங்கள் பிரம்மப் பிரயத்தனம் செய்தும், இந்தத் தண்ணீரைச் சூடேற்ற உங்களால் முடியவில்லை'' என்று கூறிமுடித்தார்.

அதைக் கேட்டு பீமனும், திரௌபதியும் முறையே, தனது தோள்வலிவு குறித்தும் ஆழ்ந்த பக்தி குறித்தும் கொண்டிருந்த கர்வத்தை விட்டொழித்து பகவானின் அருளுக்குப் பாத்திரமானார்கள்!

# நச்சுக் கழிவுகளை உறிஞ்சும் மரங்கள்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மக்களிடம் பரப்புவதில் தற்போது பல நாடுகளும் முனைப்புக் காட்டி வருகின்றன. பூமியின் வெப்பம் அதிகரித்து வருவதால் ஏற்படும் கொடிய விளைவுகளிலிருந்து காப்பதற்காக, நச்சு வாயுக்களை வெளியிடும் ஆலைகளைத் தடை செய்யும் அளவுக்கு சட்டங்களை இயற்றவும் சர்வதேச அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மழை வளம் கொடுத்து சுற்றுச் சூழலைக் காக்கும் மரங்களை வளர்ப்பதும் இதில் பிரதானமாக இடம் பெற்றுள்ளன. ஆனால் சூழல் கேடுகளால் மரங்களும் பாதிக்கப்படுகின்றன.

இந் நிலையில், இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் நச்சு வாயுக்களை உறிஞ்சும் மரங்களை உருவாக்கியுள்ளனர். ஆலைகள் வெளியிடும் நச்சு வாயு மற்றும் கழிவுகளை இத்தகைய மரங்கள் உறிஞ்சிவிடும் திறன் கொண்டவையாக விளங்குகின்றன.

ஆலைக் கழிவால் பாதிக்கப்பட்டுள்ள நிலப் பகுதிகளில் இத்தகைய மரங்களை நட்டு வளர்த்த போது நல்ல பலன் கிடைத்துள்ளதாக ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. ஆலைக் கழிவுகளானகாரீயம் காட்மியம், பாதரசம்தாமிரம் துத்தநாகம் உள்ளிட்ட கழிவுகள் மண்ணில் தங்கி விடுவதால் மண்வளம் குறைந்து அங்கு தாவரங்கள் வளர முடியாத நிலை ஏற்படுகிறது. இப்பகுதிகளில் புதிய கண்டுபிடிப்பானசூப்பர் மரங்களை நட்ட போது மண்ணிலிருந்த நஞ்சை உறிஞ்சி மீண்டும் அப்பகுதியில் பிற தாவரங்களை பயிரிடும் வகையில் அவை தூய்மையாக்கின.

ஆலமரம், அரச மரத்தை வீட்டினுள்ளேயே வளர்க்கும் வகையில் போன்சாய் மரங்களைக் கண்டறிந்த விஞ்ஞானிகள் தற்போது இயற்கைச் சூழலுக்கு பாதுகாப்பு தரும் மரங்களை உருவாக்கியுள்ளது வரவேற்கத்தக்கதே. ★

## சுதந்திர இலங்கைத் தாய் திருப்பள்ளியெழுச்சி

இந்து சமுத்திர முத்தெனத் திகழ்ந்தனை
ஈழத் துணவுகள் திசைதொறும் ஈய்ந்தனை;
முந்து கலைவளம் பண்பாட் டுயர்வுகள்
மூத்த இலக்கிய இறையியல் மாண்புகள்;
கந்த வாசனை முத்து இரத்தினம்,
கடலைக் கடந்து கொழித்திடச் செய்தனை;
எந்தச் சாபம்? இன்றிவை தீர்த்திட
இலங்கைத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே!

உந்தன் மடியினில் தொன்று தொட்டுடன்
இருந்த இனங்களும் சமய நெறிகளும்
சொந்த பந்த உறவுடன் வாழ்ந்தனர்,
தூய அன்பு பண்புடன் ஓங்கினர்;
வந்த அந்நியர் தம்மைப் போக்கியே
வளங்கள் உரிமைகள் நாட்டி இருந்தனர்
இன்று தமிழின இடர்களைப் போக்கிட,
இலங்கைத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே!

புத்தர் சிவனார் அல்லா யேசுவின்
புனிதத் தலங்கள் இயற்கை எழிலுடன்
சித்தம் மகிழ்ந்திட நித்தம் செழித்தன
சீரும் சாந்தியும் அமைதியும் பொங்கின
நித்தம் சிங்களர் தமிழர் இணைந்துமே
நிமிர்ந்து வந்த இடர்கள் போக்கினர்;
எத்தனை பகைமை இன்று; நீக்கிட
இலங்கைத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே!

தாயுன் மேனி தணலாய்க் கொதிக்குதே
தமக்குள் சோதரச் சண்டையால் தீயுதே,
சேய்கட் குரியவை சேர்த்திடல் தாய்மையின்
சிறப்புப் பணியெனச் சிந்தையில் தேக்கியே,
வாய்மை காத்துள அவரவர் உரிமைகள்
வழங்கிச் சமரசம் செய்து தீர்த்திட,
ஓய்வு இன்றி ஒற்றுமை காத்திட
இலங்கைத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே!

ஆண்டு ஐம்பது கடந்தது சுதந்திரம்
அடைந்தும், அடையாத் தமிழினம் விரக்தியால்
நீண்ட பெருமூச் செறிவதும் பூரண
நிம்மதி அற்றிடச் செய்வதும்; மூத்தவர்
பூண்ட விரதாமா? புரட்டா? புரளியா?
புனித ராயவர் புத்தரின் தர்மமே
ஈண்டு தழைத்திட? உறுதியாய் ஏற்றிட,
இலங்கைத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே!

மூத்த பிள்ளைகள் முரண்டு பிடிப்பதும்,
முதுகில் குத்தத் தம்பியர் குனிவதும்
ஆத்தை பார்த்தும் பாரா திருப்பதா?
அம்மா இதுவுன் திருவுளச் சித்தமா?
காத்து வளர்த்தநீ ஆணையைக் காட்டிடு
கவலும் இளையவர் உரிமைகள் தந்திடு
ஏத்தி உன்னையே யாவரும் போற்றிட
இலங்கைத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே!

- நயினைக்கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை

# பாழ். கடல் ஆகிறது...

(1 ஆம பக்கத் தொடர்)

கள் நேரும்போது எரிபொருள் நிரப்பப்பட்ட கொள்கலன்களை அப்படியே கடலில் புதைத்து விடுவதும் கடல் மாசுபடுதலிலிருந்து காக்கும் வழி என்கிறார்கள் வல்லுநர்கள்.

இது ஒரு சர்வதேச பிரச்சினை. எல்லா நாடுகளின் ஒத்துழைப்பும் அவசியம். டிடிரி போன்ற பூச்சி கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தாமல் தடுப்பதும், பாப்ஸ் உற்பத்திக்கு தடை விதிப்பதும், கண்காணிப்பதும் அவசியம். கடலில் கழிவுகளை கொட்டு முன்னர் அவற்றைக் கட்டாயம் சுத்திகரிப்பதற்கு வசதியாக சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க வேண்டும்.

என்னதான் திட்டங்கள் தீட்டி சட்டங்கள் இயற்றினாலும், கண்காணிப்பு—தண்டனைகள் என்று செயல்பட்டாலும் மனிதன் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளாதவரை இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண முடியாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசரின் கியூபா விஜயம் காஸ்ட்ரோவின் ஆட்சிக்கு கிடைத்த வெற்றி

## தனிமைப்படுத்தி பணிய வைக்கும் அமெரிக்க முயற்சி பின்னடைவு

பரிசுத்த பாப்பரசர் 2 ஆவது அருளப்பர் சின்னப்பர் கியூபாவுக்கு தமது வரலாற்று மிக்க ஐந்து நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் திருப்பினார்.

பாப்பரசர் ஜனவரி 21 ஆம் திகதி கியூபா சென்றார்.

கியூபாவில் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவுடன் அவர் முக்கிய பேச்சுக்களை நடத்தினார். ஹவானாவில் உள்ள புரட்சிச் சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த புறா வடிவிலான பிரசங்க மேடையில் இருந்து (Altar) அவர் சுமார் ஐந்து லட்சம் மக்களுக்கு ஆசி வழங்கினார்.

பாப்பரசின் விஜயம் மனித உரிமைகள் மற்றும் அரசியற் சீர்திருத்தங்கள் தொடர்பாக கியூபா அரசுக்கு சில அழுத்தங்களைக் கொடுத்தாலும் பொதுவாக கியூபாவுக்கு கிடைத்த பெரிய வெற்றியாகவே கருதப்படுகிறது. கியூபாவைத் தனிமைப்படுத்தும் அமெரிக்காவின் முயற்சிக்கு இது மற்றொரு பின்னடைவு ஆகும்.

ஏற்கனவே தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அமெரிக்காவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் கியூபா சென்றிருந்தார்.

பாப்பரசர் தமது விஜயத்தின்போது கியூபா மீதான அமெரிக்க பொருளாதாரத் தடையை வன்மையாகக் கண்டித்தார். கடந்த 36 வருட காலமாக இருந்து வரும் இந்தத்தடை நியாயமற்றது; ஏற்றுக்கொள்ள முடியாதது என்று பாப்பரசர் தெரிவித்தார்.

அதே சமயம் உலக நாடுகளில் தற்பொழுது ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு அமைய கியூபாவும் அரசியல் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று பாப்பரசர் கேட்டுக்கொண்டார்.

அரசியல் கைதிகளை கியூபா விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

### 1959 புரட்சி

கியூபாவில் 1959 ஆம் ஆண்டு காஸ்ரோ தலைமையில் புரட்சி ஏற்பட்டு அமெரிக்க ஆதரவு அரசு பதவி கவிழ்க்கப்பட்டது.

அன்றில் இருந்து கடநத 39வருடகாலமாக காஸ்ட்ரோ தொடர்ந்து பதவியில் இருந்து வருகிறார்.

கியூபாவின் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களைப் பணிய வைக்கும் நோக்கத்துடன் 36 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க அரசாங்கம் — பொருளாதாரத் தடைகளை விதித்தது. அந்தத் தடை இன்னும் அமுலில் இருந்து வருகிறது. அவரது ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சிகள் வெற்றி அழிக்க வில்லை.

குவைத் மீதான ஈராக்கின் படைஎடுப்புக்குப் பின்னர் ஈராக் மீது போடப்பட்ட தடையைப் போன்று இந்த தடை மோசமானது அல்ல.

எனினும் கியூபாவின் பொருளாதாரத்தில் கணிசமான அளவு தாக்கத்தை இது ஏற்படுத்தி இருக்கிறது.

மிக அருகில் உள்ள அமெரிக்காவிடமிருந்து வாங்கும் ஒரு பொருளை பல்லாயிரக் கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ள ரஷ்யாவிடமிருந்தோ அல்லது மற்றும் ஒரு நட்பு நாட்டிடம் இருந்தோ வாங்கவேண்டிய நிலை கியூபாவுக்கு இருந்து வருகிறது.

இந்தத் தடைகாரணமாக கியூபாவில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.



கியூபாவுக்கு விஜயம் செய்திருந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் ஹவானா நகரில் நடத்திய இறுதி ஆராதனைகளின் பின்னர் பாப்பரசருக்கு கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ வாழ்த்துத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

எனினும் ஈராக்கில் இருந்து வருவது போன்று பட்டினியால் குழந்தைகள் இறக்கும் நிலை கியூபாவில் இல்லை.

ஈராக்கின் பொருளாதாரம் முற்று முழுவதுமாக எண்ணெயிலேயே தங்கி இருக்கிறது. எண்ணெயை விற்றால்தான் உணவையோ மருந்தையோ இறக்குமதி செய்ய முடியும். கியூபாவின் வளம் அமெரிக்க பொருளாதாரத் தடையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் கொண்டது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி காஸ்ட்ரோ வத்திக்கான் சென்று பாப்பரசரைச் சந்தித்திருந்தார். அவர் அப்பொழுது வழங்கிய அழைப்பை ஏற்றே பாப்பரசர் கடந்தவாரம் கியூபா சென்றார்.

அமெரிக்காவின் பொருளாதாரத்தடை, கியூபாவில் இருந்து வருவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் ஆகியவை நீடிக்கும் நிலையில் பாப்பரசரின் விஜயம் இடம் பெற்றதால் அந்த விஜயம் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அத்துடன் கியூபாவில் கம்யூனிஸ ஆட்சி ஏற்பட்ட பின்னர் பாப்பரசர் ஒருவர் விஜயம் செய்தது இதுவே முதல் தடவை. சோவியத் யூனியன் உடைந்த பின்னர் உலகில் எஞ்சி உள்ள ஒரு சில கம்யூனிஸ்ட் நாடுகளில் கியூபாவும் ஒன்றாகும்.

### திருச்சபைக்கும் ஆட்சியாளருக்கும் இடையிலான உறவு

கியூபாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்ட பின்னர் ஆரம்பத்தில் கத்தோலிக்க மத நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால் கத்தோலிக்கர்கள் அதிருப்தி கொண்டிருந்தனர்.

எனினும் சமீப காலமாக கத்தோலிக்க திருச்சபைக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையிலான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

1979 ஆம் ஆண்டு பாப்பரசர் போலந்துக்கு விஜயம் செய்தார். அவரின் போலாந்து விஜயம் போலந்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களுக்கு எதிராக போலந்து மக்கள் பகிரங்கமாக குரல் கொடுக்க உந்து கோலாக அமைந்தது.

**உலக உலா** — என்.பி.சீலன்

1980 ஆம் ஆண்டு அங்கு சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் லெட்ஸ் வலேசா தலைமையில் உருவாக்கப்பட்டு ஆட்சியாளர்களுக்கு எதிராக வேலை நிறுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் அமைக்கப்பட்டு 9 ஆண்டுகளின் பின்னர் போலந்தில் கம்யூனிஸ்ட்ஆட்சி கவிழ்ந்தது. சோவியத் யூனியன் சிதறுண்டு போவதற்கும் அது வழி வகுத்தது.

### போலந்தும் கியூபாவும்

போலந்தில் நூற்றுக்கு நூறு வீதம் கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர். பாப்பரசரின் சொந்த நாடும் போலாந்துதான். கம்யூனிஸ ஆட்சியில் மக்கள் வெறுப்புற்றிருந்த சமயம் பாப்பரசரின் விஜயம் அப்பொழுது அவர்களுக்கு உதவியது.

ஆனால் கியூபாவைப் பொறுத்த வரை நிலைமை வேறுபட்டது.

கியூபாவில் 43 சதவிதமான கத்தோலிக்கர்களே உள்ளனர். அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் காஸ்ட்ரோ அரசு பொதுமக்களின் கணிசமான ஆதரவை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இத்தகைய நிலையில் பாப்பரசரின் விஜயம் கியூபாவில் கம்யூனிஸ அரசு கவிழ்க்கப்படுவதற்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை.

கியூபா தொடர்பாக அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாட்டையும் —

மனித உரிமைகள் தொடர்பாக கியூபா ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்கும் கொள்கையையுமே — பாப்பரசரின் விஜயம் மாற்றலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

72 வயது நிரம்பிய கியூபா ஜனாதிபதி பிடல்காஸ்ட்ரோ இன்னும் சிறந்த உடல் நலத்துடன் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரது உடல் நலம் குறித்து கடந்த காலங்களில் மாறுபட்ட தகவல்கள் வெளிவந்திருந்தன.

ஆனால் கடந்த வாரம் கியூபா ரெலிவிஷனின் அவர் தொடர்ந்து 6 மணித்தியாலங்கள் உரை நிகழ்த்தினார்.

இதன் மூலம் தமது உடல் நிலை குறித்த வதந்திகளுக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

அமெரிக்காவுக்கு மிகவும் அருகில் கம்யூனிஸ அரசு ஒன்று ஏற்பட்டதே அமெரிக்காவுக்கு கியூபா மீது அதிக ஆத்திரம் ஏற்படக் காரணம் ஆகும்.

1990 இல் சோவியத் யூனியன் சிதறுண்டு போய் உலகில் கம்யூனிஸம் தோல்வி அடைந்த பின்பும் உயிர் வாழும் ஒரு சில கம்யூனிஸ்ட் நாடுகளில் கியூபாவும் ஒன்று.

பொருளாதாரத் தடையை தொடர்ந்து அமுல் செய்வது மூலம் கியூபாவில் காஸ்ட்ரோ ஆட்சியைக் கவிழத்து விடலாம் என்று அமெரிக்கா கருதுகிறது.

தடையை நீக்கக் கோரும் சர்வதேச அழுத்தங்களின் மத்தியிலும், தடையை தொடர்ந்து அமுல் செய்வதில் அமெரிக்கா பிடிவாதமாக இருப்பதற்கு இதுவே காரணம்.

பொருளாதாரத் தடைகளை அமுல் செய்வதும் கியூபா ஆட்சியாளர்களை தனிமைப்படுத்துவதுமே அமெரிக்காவின் நோக்கம்.

ஆனால் கியூபாவை தனிமைப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா வெற்றி பெற முடியவில்லை.

அமெரிக்காவின் நட்பு நாடுகள் கூட இதற்கு ஆதரவு இல்லை. சர்வதேச நிர்ப்பந்தத்துக்கு பணிந்து கியூபா மீதான தடைகளை அகற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்படலாம்.

பாப்பரசரின் கியூபா விஜயம் காஸ்ட்ரோவுக்கு கிடைத்த வெற்றி என்றே கருதப்படுகிறது.

★

கியூபாவின் பிரசித்திபெற்ற நகரங்களில் சந்த கிளாராவும் ஒன்று.

கியூபாவின் புரட்சி வீரன் சே குவேராவின்உடல் பகுதி இங்கேயே வைக்கப்பட்டுள்ளது.

1952 ஆம் ஆண்டு காஸ்ட்ரோ ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் அமெரிக்க ஆதரவு வலதுசாரி ஆட்சியாளர் டொக்டர் பரிஸ்ராவின் படைகளுக்கு எதிராக நடத்திய தாக்குதல் தோல்வி அடைந்தது. அதன் பின்னர் 1958 இல் சந்த கிளாரா நகரை சே குவேரா தலைமையிலான படைகள் கைப்பற்றி இருந்தன.

1959 ஆம் ஆண்டில் கியூபாவில் ஆட்சியை காஸ்ட்ரோ கைப்பற்றுவதற்கு 1958 இல் சே குவேரா சந்த கிளாரா நகரில் நடத்திய தாக்குதலே மூல காரணமாக இருந்தது.

கியூபாவின் ஜனத்தொகை 4 கோடி 80 இலட்சம் ஆகும். இதில் கத்தோலிக்க மக்கள் 43 சத வீதமாக உள்ளபோதிலும் 288 மத குருமார்கள் மட்டுமே அங்கு செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது வெளிநாடுகளில் இருந்து 60 மதகுருமார்களும் கன்னியாஸ்திரிகளும் கியூபா செல்ல கியூபா அரசாங்கம் வீஸா வழங்கி உள்ளது.

அத்துடன் முதல் தடவையாக நத்தார் தினமும் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்த கிளாராவில் உள்ள புரட்சிச் சதுக்கத்தில் இடம் பெற்ற வைபவத்தில் பாப்பரசருக்கு ஜோஸ் வரேலாவின் (JOSE VARELA) தொல் பொருளாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய வரலாற்று நூல் ஒன்றை காஸ்ட்ரோ அன்பளிப்பாக வழங்கினார்.

கியூபா நாட்டவரான 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜோஸ் வரேலாவை புனிதராக பிரகடனம் செய்ய வத்திக்கான் தற்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org